565

(C) தமிழ் நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு

தொகுதி - 17 எண் - 3

13th March, 1992

D
V211,31 N92
N92.17.3
161511

வெளியீடு 26-8-1992

Issued 26-8-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை மார்ச் 13, 1992 - தொகுதி 17 - எண் 3

Friday the 13th March, 1992 - Volume 17 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

13—3—1992.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | .. .. | 273–311 |
| **2. சிறப்புக் குறிப்பு—** | | |
| மயிலாடுதுறைத் தொகுதியிலுள்ள நலத்துக்குடியில் ஏற்பட்ட எரிசாராயச் சாவுகள் குறித்தும் குண்டர்கள் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை கோரிக்கை மனுக்கள் பற்றி வந்துள்ள செய்தி குறித்தும் | .. | 311–316 |
| **3. உரிமைப் பிரச்சினை—** | | |
| உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் 12—2—1992 ஆம் தேதிய ஜூனியர் விகடன் பத்திரிகையில் பேரவை நடவடிக்கைகளைத் திரித்துக் கருத்துக்கள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து. | | 316–337 |
| **4. வரவு-செலவுத் திட்டம், 1992—93, பொது விவாதம்—(தொடர்ச்சி).** | | 338–419 |
| திரு. பி. வி. இராஜேந்திரன் .. | .. .. | 338–347 |
| *திரு. கா. ப. பட்டாபிராமன் | .. .. | 347–352 |
| திருமதி ரமணி நல்லதம்பி .. | .. .. | 352–356 |
| திரு. ஓ. எஸ். அமர்நாத் .. | .. .. | 357–361 |
| திரு. நா.சா. பழனிசாமி | .. .. | 361–369 |
| திரு. செ.கு. தமிழரசன் | .. .. | 369–375 |
| திரு. எஸ். ஆண்டித்தேவர் | .. .. | 375–380 |
| *திரு. எஸ். திருநாவுக்கரசு | .. .. | 380–397 |
| திரு. எஸ். வி. சண்முகம் | .. .. | 397–408 |
| திரு. ச. இராமச்சந்திரன் | .. .. | 409–419 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | .. | 419–420 |

161511
D
V211,31 N92
N92.17.3
600 008.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,

**மாசி 30, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023**

**1992 மார்ச் 13, வெள்ளிக்கிழமை,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை"

மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாதிருப்பது அவரைப் போற்றுவதைவிட சிறந்த ஒரு பண்பாகும்,

### 1, வினாக்கள்—விடைகள்,

### உடுக்குறியிட்ட வினாக்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண் 199. திரு. கே.பி. மணிவாசகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்,

199—

### வக்கீல் குமாஸ்தாக்களுக்கு வீடுகள்,

*4771—திரு. கே.பி. மணிவாசகம் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலைப்பேட்டையில் வக்கீல் குமாஸ்தாக்கள் குடியிருக்க வீடுகள் கட்டித்தரும் கருத்து அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இவ்வினா எழவில்லை,

[1992 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 200, திரு. டி. சுதர்சனம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்,

200—

சமையல் தொழிலாளர்களுக்கு விபத்து உதவித்தொகை.

*2896—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட சமையல் தொழிலாளர் சங்கம் சமையல் தொழிலாளர்களுக்கும் விபத்து உதவித் தொகை வழங்க வேண்டும் என தீர்மானம் ஒன்றை ஜூலை மாதம் அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) ஆம்,

(ஆ) கல்யாணம் மற்றும் விசேஷ காலங்களில் சமையல் செய்யும் ஏழை சமையல் கலைஞர்கள் விபத்துக்கு ஆளாக்கப்பட்டால் அவர்களுக்கு நிதி வழங்கப்படும்,

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கால கட்டங்களில் இது போன்ற விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. கல்யாண காலங்களிலே மட்டும் விபத்து ஏற்பட்டால் நிதி உதவி அளிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்து மீண்டும் ஒரு கேள்வி. கல்யாண காலங்கள் அல்லாத காலங்களிலும் இந்தச் சமையல் தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால், இந்த நஷ்ட ஈட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சமையல் செய்கிற கலைஞர்கள் இந்தந்த நேரத்திலேதான் அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்ற வரைமுறை இல்லை, அவர்கள் அந்த வேலையைச் செய்தாலும் சரி. விசேஷ காலங்கள் எந்த நேரமாக இருந்தாலும் சரி அல்லது எந்த மாதமாக இருந்தாலும் சரி



1992 மார்ச் 13]

மாதங்களிலும் 12 மாதங்களிலும். நல்ல நாள் கெட்ட நாள் எந்தச் சமயத்திலும் விபத்துக்கு உள்ளானால் அவர்களுக்கு எல்லாம் விதிமுறைப்படி நிவாரணப் பணம் வழங்கப்படும்,

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விபத்து நிவாரண தொகையை இவ்வளவு தொகை என்று நிர்ணயிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் இழந்தால் அல்லது— இரண்டு கை பயன்படாமல் போனால் அல்லது 2 கண்ணும் பயன் படாமல் போனால், அல்லது இரண்டு கால்களும் பயன்படாமல் போனால் அவர்களுக்கு உதவித் தொகை பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதிலே ஒரு கை போய், ஒரு கால் போய் அல்லது ஒரு கண் போயிருந்தாலும் அதற்கு 7 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும். ஆகவே அவர்களுக்கு ஏற்படுகிற அங்க ஹீனங்களுக்கு ஏற்றவாறு தொகைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமையல் தொழிலைப் பொறுத்தவரையில் இது இல்லத்தரசிகளுடைய பரம்பரை தொழில் போன்ற ஒன்றாகும். இப்போது அடிக்கடி பேப்பர்களிலே பார்க்கிற போது சமையல் செய்யும்போது ஸ்டவ் வெடித்து தீ பிடித்து மரணம் என்ற செய்தி வருகிறது. உயிரைப் பணயம் வைத்து தொழில் செய்கின்ற மீனவர்கள் இறந்து போனால் 21 ஆயிரம் ரூபாய் கொடுப்பதைப் போல, காவல் துறையினால், இது சமையல் செய்யும்போது ஸ்டவ் வெடித்து தான் மரணம் என்று உறுதி செய்கிறபோது அந்தப் பெண்களுடைய வாரிசுகளுக்கு, 21 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் வேலையை செய்கிறவர்களுக்கு இப்போதுதான் பத்தாயிரம் ரூபாய் என்று புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை நீடிப்பது பற்றி அரசினுடைய பரிசீலனையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் தொழிலாளர்கள் என்பதற்கு அத்தாட்சியாக அவர்கள் ஏதாவது பதிவு செய்து கொண்டிருக்க

வேண்டுமா? அல்லது அவர்கள் சமையல் செய்பவர்கள் என்று மக்களால் குறிப்பிடப்பட்டாலே அவர்களுக்கு அந்தத் தொகை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்ய வேண்டியதில்லை. சமையல் செய்பவர்கள் சமையல் செய்யும்போதே அவர்களைப் பற்றி தெரிந்து விடும். உயிர் உள்ளவர்கள் சொல்வார்கள் அல்லது மக்கள் சொல்வார்கள். அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படும். அது மட்டுமல்ல. வாரிசு என்று சொல்கிறார்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பது போல அவர்களுடைய வாரிசுகள் திரும்பவும் சமையற்காரர்களாக வரவேண்டும் என்று இந்த அரசு நினைக்கவில்லை. ஆகையினால் வாரிசுக்கு கொடுப்பதைப் பற்றி இந்த அரசு எண்ணாததற்குக் காரணம், வாரிசுகள் மேலே வர வேண்டும், படிக்க வேண்டும், என்ஜினியர் ஆகவேண்டும், உங்களைப்போல சட்டமன்ற உறுப்பினர்களாக வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது மிகத் தெளிவாக கை போனால் இவ்வளவு, கால் போனால் இவ்வளவு என்று விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். உயிரே போனால் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லும்போது முதலில் இறப்பு என்று சொன்னேன். இறப்பு என்றால் உயிர் போனதில் வந்துவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹவுஸ் வைப் — பெண்கள் வீடுகளிலே வேலை செய்து கொண்டிருக்கும்போது ஸ்டவ் வெடிக்கின்றது. உடனே ஆபத்து ஏற்பட்டு அவர்கள் இறந்து போய்விடுகிறார்கள் அல்லது கை போய்விடுகிறது அல்லது கால் போய்விடுகிறது.



அது அரசினுடைய கவனத்திற்கு வந்தால் அவர்களுக்கு உதவி செய்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கேள்வியினைத் தான் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் கேட்டார்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

வினா எண் 201, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

201—

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கிடைத்த உபரி நிலங்கள்.

*6227 திரு. ம. சின்னசாமி:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் கிடைத்த உபரி நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அந்த உபரி நிலங்கள் எவ்வளவு நபர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக இதுவரையிலும் 1,80,760 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உபரி நிலங்கள் 1,19,912 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய புரட்சித் தலைவியினுடைய அரசு இருப்பவன், இல்லாதவன் என்கிற நிலைமை இருக்கக் கூடாது என்பதற்காக எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற கொள்கையில் தம்முடைய அரசு ஏற்பட்ட பிறகு பினாமி நில ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களே, அது மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்றிருக்கிறதா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கேள்வி தொடர்புடையதாக இருக்க வேண்டும். கிடைத்த உபரி நிலங்கள் பற்றியது இது. இங்கே சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம், மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்றதா இல்லையா என்பதற்கு நேரடியாகப் பதில் இருக்காது. அமைச்சருடைய கவனத்திலே இருந்து அவர் சொல்லலாம். அவர் சொல்லக்கூடியவர்தான். அதற்காக இந்த அவையினுடைய நேரத்தை வீணடித்துக்கொண்டு எங்கோ போகக்கூடாது. உங்களுடைய கேள்வி இதை ஒட்டி இருக்க வேண்டும்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தபோது இந்தச் சட்டத்தினுடைய ஓட்டைக்குள்ளே புகுந்து கொண்டு, பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு சில நிலச்சுவான்தார்கள், மிட்டா, மிராசுதார்கள் எல்லாம் அதிலே பலன் பெற்றார்கள். சரியான நிலத்தைக் கொடுக்கவில்லை என்ற கருத்து இருக்கிறது. அதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தச் சட்டம் கொண்டு வந்தபோது இது உச்சவரம்பு அல்ல, மிச்ச வரம்பு என்று சொன்னார்கள். ஆகவே அதை மீண்டும் திருத்தி எல்லோருக்கும் இன்னும் அதிகமான நிலம் கிடைக்கின்ற வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இதைப் பேரறிஞர் அண்ணாவினுடைய அரசு என்று சொன்னார்கள். இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அரசு அண்ணாவினுடைய அரசு என்றும், புரட்சித் தலைவர் அரசு என்றும் சொல்கிறார்கள். இது உச்சவரம்பு அல்ல, மிச்சவரம்பு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு இந்த அரசு வந்தவுடன் நிலச்சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தி நல்ல முறையில் கொண்டுவரவேண்டும் தமிழகம் முழுவதும் என்று தான் புரட்சித் தலைவி அவர்கள் எண்ணினார்கள். அந்த எண்ணத்துடன்தான் இந்த நியாயமற்ற, முறையற்ற நிலமாற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அவையிலே சட்டமுன்வடிவை நிறைவேற்றி மத்திய அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது விரைவிலேயே வர வேண்டும் என்பதற்காக மாதா மாதம் நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். விரைவிலே வரும் என்று எதிர்பார்க்கிறோம். மத்தியப் பேரரசு இதிலே உதவிகரமாக இருக்கும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் என்று வைத்துக் கொண்டு இருப்பவர்கள் நில உச்சவரம்பிலிருந்து தப்பிப்பதற்காக பினாமியாக பல பேருக்கு எழுதி வைத்துவிட்டு அதிலிருந்து தப்பிப்பதாக அறிகிறோம். அந்த நிலங்களை எடுக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறையற்ற நிலமாற்றங்களைக் கண்டுபிடித்து எடுப்பதற்காகத்தான் சட்டமுன்வடிவு நிறைவேற்றி மத்தியப் பேரரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஞ்சைக்கும், நஞ்சைக்கும் உச்சவரம்பு இருப்பது போல புஞ்சைப் பயிரும் இல்லாமல், நஞ்சைப் பயிரும் இல்லாமல் வெறுமனே இருக்கும் நிலங்களுக்கு உச்சவரம்பு இருக்கிறதா ? அப்படி இருந்தால் நகரத்தில் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம், கிராமத்தில் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஞ்சையா ; நஞ்சையா ; தரிசா ; காடா ; என்பது அல்ல. ஆனால் தர ஏக்கர் எவ்வளவு என்பது தான் இருக்கிறது. இன்றைக்கு 5 பேர் அதற்குக் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு 15 தர ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். 5 பேர் உள்ள குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் 5 ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். ஆக மொத்தமாக 30 தர ஏக்கர், ஸ்டாண்டர்டு ஏக்கர், ஒவ்வொரு குடும்பத்திலும் வைத்துக் கொள்ளலாம் என்பது தான் சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலை[illegible] அவர்களே, இந்த நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் [illegible] படுத்தப்படும் நிலம் எந்த அடிப்படையில் பிரித்து[illegible]

கிறது. அப்படி நிலங்களைப் பெற்றவர்களில் சிலர் முறைப்படி பெற்று அவர்களே சொந்தமாக அந்த நிலங்களைப் பராமரிக்காமல், உழாமல் பலபேருக்குக் குத்தகைக்கு விட்டு இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து அப்படி முறைப்படி கொடுக்கப்பட்டதை ரத்து செய்து மீண்டும் அதை மறுபரிசீலனை செய்து உண்மையான ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு. பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்கப்படுகிற நிலம் எப்படிக் கொடுக்கப்பட வேண்டும் என்று முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி முறைப்படுத்தும்போது முதலில் அந்த நிலத்தில் யாராவது குத்தகைதாரர்கள் இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அடுத்தபடியாக நிலமற்ற விவசாய ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது மூன்றாவதாக இராணுவத்தினருக்குக் கொடுக்கப்படுகிறது. நான்காவதாக பர்மா அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஐந்தாவதாக இலங்கை அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது ஆறாவதாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி வரைமுறைப்படுத்தப்பட்டு கொடுக்கப்படுகிறது. கொடுக்கிறபோது அவர்களுக்கு இதற்கு முன்பு நிலம் இல்லாமல் இருந்தால் நஞ்சை $1\frac{1}{2}$ ஏக்கர், புஞ்சை 3 ஏக்கர் கொடுக்கப்படுகிறது. அவர்கள் தவறுதலாக அதைப் பயன்படுத்தினால் அரசின் கவனத்திற்கு அது வருமானால் அது எடுக்கப்படுகிறது. அவர்களுக்கு 20 ஆண்டுகளில் தவணை முறையில் பணம் செலுத்த வேண்டுமென்று கொடுக்கப்படுகிறது. அரசு ஆயிரம் ரூபாய் அவர்களுக்குப் பணம் கொடுக்கிறது அதை சீர் செய்வதற்கு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. மா. சுந்தரதாஸ்.

<u>திரு. மா. சுந்தரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்டேட்டுகள் எல்லாம் நில உச்சவரம்புக்குள்ளே வராது. அவர்களுக்கு அதில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் ஆயிரக்கணக்கான எஸ்டேட்டுகள் வைத்து இருப்பவர்கள் நூற்றுக்கணக்கான, இருநூற்றுக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு அரசு நிலங்களைத் தன் பெயரில் வைத்து இருக்கிறார்கள். அந்த நிலங்களை எடுத்து நிலமற்ற விவசாயிகளுக்கு, ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.



<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலம் வைத்து இருப்பது ஆக்கிரமிப்பு. அவர்கள் வைத்துக்கொள்ளுவது இல்லை. அரசுக்குத் தெரியாமல் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு செய்ததை எல்லாம் இன்றைக்கு அகற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 202, திரு. என். ஜி. வேணுகோபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

202—

<u>இராணிப்பேட்டையில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம்.</u>

* 445 <u>திரு. என். ஜி. வேணுகோபால் :</u>

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்துவதற்காக 1990-ல் இராணிப்பேட்டையில் தொடங்கப் பெற்ற திட்டம் முடிவுறாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இராணிப்பேட்டையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றும் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்ய பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான நிலம் கிடைக்கப் பெறாமல் இருந்து, தற்சமயம் தென் இந்திய தோல் பதனிடுவோர் சங்கம் மூலமாக 21 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு அதற்குண்டான கட்டுமான பணிகள் துவக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

<u>திரு. என். ஜி. வேணுகோபால் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டைத் தொகுதியில் சுமார் 200க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் குறிப்பாக தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கிறது. பாலாற்றுத் தண்ணீர் என்றாலே குடிப்பதற்கு மிகவும் இனிப்பாக இருக்கும் என்று பொருள்: ஆனால் இன்று தோல் பதனிடும் தொழிற்சாலை

களின் கழிவு நீர் பாலாற்றில் கலந்து விடுவதன் விளைவாக குடிமல்லூர், வண்ணிவேடு, தேவதானம் போன்ற பகுதிகளில் குடிநீர் கெட்டுவிட்டது. பாசனத்திற்கு வரும் நீரில் கெமிக்கல்ஸ் கலந்து விடுவதால் பயிர் சேதம் அடைந்திருக்கிறது. இந்த அபாயத்தைப் போக்க நம்முடைய அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்து தற்போது அரசிடம் நிலுவையிலுள்ள ராணிப்பேட்டை கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகளைக் கீழ்க்கண்ட இடங்களில் நிறுவ அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிப்காட் பகுதி, செட்டித் தாங்கல் பகுதி, மேல்விஷாரம், புதுப்பேட்டை போன்ற பகுதி களில் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் (தால்கோ) மூலம் நிறுவப்பட்டுள்ளன. (மணியடிக்கப்பெற்றது.)

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு நாளும் உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துவது போல வைத்துக்கொள்ளக் கூடாது. துணைக் கேள்வி என்றால், கேள்வி மட்டும்தான் கேட்கவேண்டும். ஒரு தனி பிரசங்கமே அதிலே இருக்கக்கூடாது என்று நாள்தோறும் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். திரும்பத் திரும்ப, இப்படிப் பேசுவது நல்ல முறையல்ல என்பதை மாண்பு மிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கேள்வி யாகக் கேளுங்கள்.

திரு. என். ஜி. வேணுகோபால் : (தால்கோ) மூலம் நிறுவப் பட்டுள்ள முயற்சியில்தான் இப்போது ஆரம்பிக்கப்பட்டு இருக் கிறது. எனவே, மேற்குறிப்பிட்ட 4 பகுதிகளிலும், உடனடியாக நிறுவப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் இன்னொரு 18 மாத காலத்திலே அந்தப் பணியை முடித்துக் கொடுப்போம் என்று உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். அந்த உத்தரவாதத்தின் பேரில் தான் நான் இங்கே அதைத் தெரிவித்தேன். ஏற்கனவே அதற்கு உண்டான பணத்தை மத்திய அரசும், மாநில அரசும் மானியங்களை ஒதுக்கி, அதற்கான, ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. நிலம் கிடைக்காமல் கால தாமதம் ஏற்பட்டது. இப்போது நிலம் கிடைத்திருக் கிறது. அப்ரோச் ரோடு போட்டுக்கொண்டு இருக் கிறார்கள். எனவே, அந்தப் பணி விரைவில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுபோக, வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, திருச்சி போன்ற அந்த இடங்களிலே எல்லாம் செய்வதற்கான பூர்வாங்க வேலைகளைத் துவக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இன்னும் 10 இடங்





களிலே, பம்மல், ஈரோடு, திண்டுக்கல், ராணிப்பேட்டை, மேல் புதுப்பேட்டை, செட்டித்தாங்கல், பெருமாள்பேட்டை, வளத்தூர், புதூர், மேல்விஷாரம் போன்ற அந்த இடங்களிலே எல்லாம் செய்யவேண்டும் என்று திட்டம் தீட்டி இப்போது அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெறுகின்றன. இது ஒவ்வொன்றும் என்ன என்ன நிலையில் இருக்கின்றன என்று விளக்கம் இப்பொது இல்லை. எனவே, தனியாக, அதற்கான கேள்விகளைப் போட்டால், முழு விளக்கத்தைத் தர முடியும்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு, என் உளப்பூர்வமான நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். அதே மாதிரி சிப்காட் பகுதியிலே, அவர்கள் நிலத்தைக் கையகப்படுத்தி இருக்கிறார்கள் என்று அறிகிறேன். அதையும் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதையும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய தனி விளக்கம் இப்போது என்னிடத்திலே இல்லை. அதைப் பார்த்து, உறுப் பினர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டையைப் போல, திருப்பூரிலும், பொலுசன் கன்ட்ரோல் புராஜக்ட் செயல்பட்டுக் கொண்டு இருக் கிறது. அங்கேயும், லேண்ட் அக்குசிஷன் பண்ணுவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதால், அந்த புராஜக்ட்டினுடைய வேல்யூ அதிகமாகிவிடும் போல் தெரிகிறது. ஆகவே, லேண்ட் அக்கு சிஷன் பண்ணுவதில் தனிக் கவனத்தை அரசு செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, கேள்வி ராணிப்பேட்டையைப் பற்றியது. இன்னொரு ஊரைப் பற்றி வருவதற்கு வாய்ப்பு இல்லை. இதுபோல், எல்லா ஊர்களிலும் இருக்கலாம். திண்டுக்கல்லிலே இருக்கிறது, ஆம்பூரிலே இருக் கிறது என்று எல்லா ஊர்களிலும் இருப்பவர்கள் கேட்டால் அமைச்சரால் பதில் சொல்ல முடியாது. திரு. ஆ. கு. சீனிவாசன்.

[1992 மார்ச் 13

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் சம்பந்தமாக வெளியேறும் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வெளியேற்றப்படுகிறது. அதுபோல், கெமிக்கல் சம்பந்தமான தொழிலில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர், கெமிக்கல் சம்பந்தமான நீராக வெளியேறி வருகிறது. இதனால், அங்குள்ள மக்களுக்கு குடிதண்ணீர் எடுக்க முடியவில்லை போர் போட்டும் பார்த்தார்கள். அது தொடர்பாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன் கேள்விக்கு வாருங்கள், ராணிப்பேட்டையில் உள்ள தோல் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் பற்றியது இந்தக் கேள்வி. அதையொட்டி, கெமிக்கல்ஸ் சம்பந்தமாகவும் அமைக்கப்படுமா என்று கேட்கவேண்டும்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சிறிய அளவிலே குடிசைத் தொழில் போல குறிப்பிட்ட சில பகுதிகளிலே கான்சன்ட்டிரேட்டட் ஆக இருக்கிறது. எனவே தான், அதற்காக பொது சுத்திகரிப்பு நிலையம் என்று சொல்லி, 60, 70, 200 தொழிற்சாலைகளை ஒன்றாகச் சேர்த்து, ஒரு பொது சுத்திகரிப்பு நிலையத்தை அங்கே ஆரம்பிக்க முடிகிறது. ஆனால், கெமிக்கல் . இண்டஸ்ட்டிரிஸ் பொறுத்தவரையில், இப்படி, மொத்தமாக 10,20 கெமிக்கல் இண்டஸ்ட்ரிகள் ஒரே இடத்திலே இருப்பதற்கான நிலை இல்லை. ஆனால் தனித்தனியாக ஓரளவிற்கு அதிக முதலீட்டிலே கெமிக்கல் இண்டஸ்டிரிசை துவக்குகிறார்கள். அங்கேயே அவர்கள் தனிப்பட்ட முறையிலே சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும், அரசாங்கமும் அவர்களை வலியுறுத்தி வருகிறது. அதற்கு ஏற்ப அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காத கெமிக்கல் இண்டஸ்ட்ரிக்கள் மீது உரிய நடவடிக்கை சட்டப்படி எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 203, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



1992 மார்ச் 13]

203—

பெரியார் நகரிலிருந்து திருவான்மியூருக்கு விரைவுப் பேருந்து.

*4543 திரு. ப. ரங்கநாதன்:
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை பெரியார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து அண்ணா சாலை, இராயப்பேட்டை, லஸ், மயிலாப்பூர், மந்தவெளி, அடையாறு வழியாக திருவான்மியூருக்கு குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்லும் விரைவுப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 9-50

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் 'இல்லை' என்று கூறிவிட்டார். இருந்தாலும், போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கவனத்திற்கு, அப்பகுதியில் வாழும் பொது மக்கள் இராயப்பேட்டை, மைலாப்பூர் நேரடிப் பேருந்து வசதி இல்லாததால் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மேற்படி வழித்தடத்தில் புதிய பேருந்து விட அரசு மீண்டும் ஆய்வு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அண்ணா சதுக்கம், திருவல்லிக்கேணி, சைதாப்பேட்டை, காயிதே மில்லத் கலைக் கல்லூரி, திருவான்மியூர் போன்ற பகுதிகளில் எட்டு வழித்தடங்களில் 34 பேருந்துகள் மூலமாக நாள் ஒன்றுக்கு 456 நடைகள் இயக்கப்படுகிறது. ஆகவே, இது தேவை இல்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, பெரியார் நகரிலிருந்துதான் பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டேன்.

அமைச்சரவர்கள் சென்னை மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி என்று எல்லா இடங்களையும் குறிப்பிட்டு இங்கே பதிலுரை கொடுத்திருக்கிறார். மீண்டும் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களிடத்தில் கேட்பது எங்கள் பெரம்பூர் பகுதியிலிருந்து, குறிப்பாக பெரியார் நகரிலிருந்து சென்னை கோட்டையில் பணி செய்கின்ற அரசுத் தொழிலாளர் வாழ்கின்ற அந்தப் பெரியார் நகர்—அந்த நகரிலேயிருந்து 29-சி தடத்தில் இயங்கும் பேருந்துகளைப் பெரியார் நகரிலிருந்து இயக்க அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பெரியார் நகரிலிருந்து இயக்கப்படுகின்ற பேருந்துகளினுடைய வழித் தடங்களைப் பற்றித்தான் நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகிற காரணத்தால் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் அதில் பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 204, திரு. எஸ். ஆர். ஜெயராமன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

204—

## சந்தனமரக் கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம்

*5022 திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சந்தன மரங்களைக் கடத்திச் செல்லும் குற்றங்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டு முடிவுபெறாமல் உள்ள வழக்குகளை விசாரிக்கும் பொருட்டு சேலம் நகரில் நீதித்துறை மாஜிஸ்டிரேட் தனி நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இது குறித்து அரசின் ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.





திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்கு ஒப்புதல் அளித்து இருக்கின்றார்கள். அதற்கு அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் காரணத்தை நான் விளக்கி விடுகின்றேன். சந்தன மரக்கடத்தல் சேலம் மாவட்டத்தில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். ஜெயராமன், காரண காரிய விளக்கங்களெல்லாம் கேள்வி நேரத்தில் வராது. அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதில் உங்களுடைய கேள்வி. நீங்கள் காரணத்தை விளக்குகிறேன் என்று ஆரம்பிக்கும்பொழுதே பயமாக இருக்கிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : சரி. ஏற்காடு மலை கொல்லி மலை, இதுபோன்ற மலைகளெல்லாம் இருக்கின்றன. மேலும், சந்தன மரக் கிடங்கும் சேலத்திலே இருக்கிறது. ஆகவே, அதை இந்த ஆண்டிலே அமைச்சரவர்கள் கொண்டு வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில், வனத் துறையில் வருகின்ற வழக்குகளில், நிலுவையில் இருக்கின்ற வழக்குகளில் தீர்ப்புரை சொல்வதற்காக இப்பொழுது வடார்க்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் திருப்பத்தூரிலே தனி நீதிமன்றம் ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போல, சேலம் மாவட்டத்திலே வருகின்ற ஆண்டிலே ஒரு நீதிமன்றத்தை உருவாக்குவதற்கு நம்முடையஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதைப் பணிவன்புடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் என்னுடைய சேலம் மாவட்டத்தினுடைய மக்கள் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத், துணைத் தலைவர்.

[1992 மார்ச் 13

பேராசிரியர் க. பொன்னுசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால் தமிழகத்தில் சந்தன மரக் கடத்தல் குற்றங்கள் எவ்வளவு நடந்திருக்கின்றன என்பதையும், அது தொடர்பாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவையில் அறிவிப்பாரா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற, தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதற்காகக் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டதன் வாயிலாக 104 பேர்கள் குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இரண்டரை ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கிறபொழுது நான்கே நான்கு பேர்தான் குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்டார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். குற்றங்களின் எண்ணிக்கை 1809 ஆகும். மரத்தின் அளவு 603 டன் ஆகும். இதன் மதிப்பு, 10 கோடியே 48 லட்சம் ரூபாய் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இதனை எடுத்துச் சென்ற வாகனங்கள் 548. இது வரையிலே, இந்திய நாட்டு வரலாற்றிலே இதுபோன்ற சாதனையை எந்த அரசும் செய்யவில்லை என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் கடத்தல் அதுபோல சாதாரண மரங்களைக் கடத்துதல் போன்ற செயல்கள் பல ஆண்டுகளாக ஒரு பிரச்சினையாகவே நம்மிடம் இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, சந்தன மரக் கடத்தல் மன்னன் வீரப்பனைக் கூட இன்னும் பிடிக்க முடியாத ஒரு நிலைமை நம்மிடம் இருக்கிறது. கர்நாடக அரசும், நம்முடைய அரசும் இது சம்பந்தமாக பல்வேறு நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்தாலுங்கூட, இன்னும் அது ஒரு முடியாத விஷயமாக இருக்கிறது. எனவே, அரசு இதற்குக் கடுமையான நடவடிக்கை எடுத்து, ஒரு முடிவுக்குக் கொண்டுவர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 மார்ச் 13]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக வனத்துறையிலே பொருட்கள் திருட்டுப் போகாதவாறு கடுமையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, சந்தனக் கட்டைகளாக இருந்தாலும், சாதாரணக் கட்டைகளாக இருந்தாலும் உடனடி நடவடிக்கையை நாம் மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீரப்பன் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள்; வீரப்பன் மிக விரைவிலே கிடைப்பான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற வாரத்திலே, வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூரிலே வனத்துறை குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு நீதிமன்றம் அமைக்க இருப்பதாக அறிவித்த, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தினுடைய தலைநகராம் வேலூரிலே நிறைய குற்றங்கள் நடந்து கொண்டிருக்கிற காரணத்தினால், வேலூரிலும், இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ அதுபோன்ற வனத்துறை குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு நீதிமன்றம் அமைக்கப்படுமா என்பதை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே இப்போது ஒரு நீதிமன்றத்தை உருவாக்குகிற காரணத்தினால், அங்கே அது தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் கடத்தல், கேரளாவிலேதான் அதிகமாக நடைபெறுகிறது. அதைப்போல சந்தன மரக் கடத்தல் வழக்குகள், கோவை மாவட்டத்திலே அதிகமாக உள்ளன. எனவே, அந்த சந்தன மரக் கடத்தில் வழக்குகளுக்கு, தனி நீதிமன்றம் கோவையிலே அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 13

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நீதிமன்றங்களை அமைப்பதற்கு அரசு பரிசிலனை மேற்கொண்டு, நடவடிக்கை இருக்கிற காரணத்தினால், மீண்டும் கூடுதலாக வேறொரு நீதிமன்றம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் கடத்தலில் அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள். அவர்கள் மீது ''குண்டர் சட்டம்'' பாயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் தவறு செய்தாலும் ''குண்டர் சட்டம்'' பாயும். அதுமட்டுமல்ல; தவறு செய்கிற அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதற்காக, நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே சில அதிகாரிகள் இன்றைக்கு வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் கடத்தல் சம்பந்தமானவற்றைத் தடுக்க அண்டை மாநிலங்களில் இருக்கும் சட்டத்தின் அடிப்படையில், தமிழகத்திலும் கைப்பற்றப்பட்டு, சந்தன மரங்களையும் அதனுடைய வாகனங்களையும் உடனடியாக பறிமுதல் செய்து அரசே எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் போன ஆண்டு அளித்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்தபடி, கர்நாடக மாநிலத்திலே இருப்பதைப் போல, நம்முடைய மாநிலத்திலும், சந்தன மரக் கட்டைகளைக் கடத்துகிற லாரிகளை, [illegible] செய்கிறபோது, அதை டிஸ்போஸல் [illegible] செய்வதற்கு [illegible] நடவடிக்கை மேற்கொள்வதற்காக, ஒரு கோப்பு [illegible] புரட்சித் தலைவி அவர்கள் அனுப்பி, அது மத்திய உள்துறை [illegible]



1992 மார்ச் 13]

ரிடத்திலே இருக்கிறது. ஒரு வார காலத்திற்குள், அந்தக் கோப்பு வந்தவுடன், உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேறும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 205, திருமதி அ. தி. சரஸ்வதி; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்,

அரேப்பாளையத்தில் அணை

205—

*3452 திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாளவாடி அரேப்பாளையத்திலிருந்து மேற்கு நோக்கி ஓடும் பள்ளத்தாக்கு நீரைத் தடுத்து அரேப்பாளையத்தில் ஒரு அணை கட்டி அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரம் எடுக்கவும் சத்தியமங்கலம் பகுதிகளுக்கு பாசனத்திற்குப் பயன்படுத்தவும் 1983—84ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாளவாடி அரேப்பாளையத்தில் மேற்கு நோக்கி ஓடும் நீரைத் தடுத்து அணை கட்ட எவ்வித ஆய்வும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் 1983—84ஆம் ஆண்டில் இப்பொருள் தொடர்பாக எந்தத் திட்டமும் ஆய்வு செய்யப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—00

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் உயிர் உள்ள வரை நீங்காத இடத்தைப் பெற்ற என் உயிரினும் மேலான நான் வணங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ''இல்லை' என்ற சொல்லுக்கே ''இடம் இல்லை'' என்றிருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கான கருத்துரு ஆய்வில் இல்லை என்று சொல்லி

யிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள மக்களின் நலன் கருதி இந்தத் திட்டத்தை எடுத்து அடுத்த ஆண்டிலாவது செயல்படுத்த வேண்டுமென்று கூறிக் கொண்டு நமது தமிழக மக்கள் கர்நாடகம் சென்று பிழைக்கக்கூடிய நிலையும், அவர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதாலும், இந்த திட்டத்தை அரேப்பாளையத்தில் கட்டினால் அங்கு பல ஆயிரக்கணக்கான குடிமக்கள் வாழ வசதி ஏற்படும் என்பதால் இந்த அரசு அடுத்த ஆண்டிலாவது இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரேப்பாளையத்திலிருந்து மேற்கு நோக்கி ஓடும் ஓடையில் மேலும் சில ஓடைகளை இணைத்த பின்னர் அதன் கீழ்ப் பகுதியில் கர்நாடக மாநிலத்தில் சொர்ண நதி நீர்த் திட்டம் அமைக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகம் வராத காரணத்தாலே சுமார் 7 ஆண்டுகள் ஆகியும் கூட நீர்த்தேக்கம் நிரம்பவில்லை. அதன் பின்னாலே அதையோட்டியே சிக்கோடு நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து 3 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு ''லிங்க் சானல்'' வெட்டி, அதன் மூலம் தண்ணீர் கொண்டு வந்து அந்த நீர்த்தேக்கம் நிரப்பப்பட்டு, தண்ணீர் அளிக்கப்புட்டு வருகின்றது. ஆகவே, நம்முடைய பகுதியிலே தண்ணீர் வரத்து அதிகம் இல்லாத காரணத்தாலே புதிய அணைத் திட்டம் ஏற்படுத்துகின்ற வாய்ப்பு ஆய்வு செய்யப்படவில்லை. இருப்பினும், உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அங்கு இருக்கின்ற நீர்வரத்துப் பகுதியினுடைய நிலைமையை அறிந்து, நம்முடைய பொதுப் பணித்துறை மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அந்தத் திட்டத்தினுடைய பலன் குறித்து ஆராய்ந்து அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 206, திரு. செ. ஆறுமுகம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

206—

மயிலம்—பாண்டிச்சேரி இணைப்புச் சாலையை அகலப்படுத்துதல்

*3758 <u>திரு. செ. ஆறுமுகம் :</u>

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூர் தொகுதி, வானூர் வட்டத்தில் மயிலம்-பாண்டிச்சேரி இணைப்புச் சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அது எந்த ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் ?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

<u>திரு. செ. ஆறுமுகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயத் திருப்பணியை தம் உயிர் மூச்சாக ஏற்று இருக்கின்ற எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் ஆட்சியில், தொழில்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், ஏன் ? தொழிலாளர்கள் புத்துயிர் பெற்று வாழ்கின்ற எங்கள் புரட்சித் தாய் ஆட்சியில் எனது வானூர் தனி தொகுதியில், வானூர் வட்டத்தில், மைலம்-பாண்டிச்சேரி ஒரு வழி தடங்கள் இணைப்புச் சாலை உள்ளது. சரித்திரப் புகழ் பெற்ற ஆலயங்களான மைலம் முருகன் ஆலயத்திற்கும், திருவக்கரை வக்கர காளியம்மன் ஆலயத்திற்கும் உலக நாடுகளில் இருந்து, இலட்சகணக்கான பக்தர்கள் நடந்தும், வாகனங்கள் மூலமும் வருகிறார்கள்...

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உங்களிடம் இருப்பதை அப்படியே வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள். துணை வினாத் தொடர்பான கேள்வியைக் கேளுங்கள்.

<u>திரு. செ. ஆறுமுகம் :</u> அதுமட்டுமல்ல, கறுப்புக்கல் வெட்டியெடுக்கும் அரசு தொழிற்சாலைகளில் இருந்தும், தனியார் தொழிற்சாலைகளிலிருந்தும், சுமை லாரிகள், ஒரு வழித் தடங்களில் போவதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு, உயிர்ச் சேதம் மிகுதியாக உள்ள காரணத்தினால், மைலம்-பாண்டிச்சேரி இணைப்புச் சாலையை அகலப்படுத்தி, இரு வழித் தடங்களாக ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது மைலம்-பாண்டிச்சேரி கி.மீ. 132/4, 164/3 என்ற பெயரில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்ற ஒரு பெரிய மாவட்டச் சாலையாகும். இந்தச் சாலை ஏறத்தாழ 31 கி.மீ. நீளம் உடையது. ஏறத்தாழ 5.3 கி.மீ. ஒரு வழிச் சாலையாக அது உள்ளது. அதை மேலும் இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்றால் 15 இலட்சம் செலவு ஆகும். ஒரு வழிச் சாலையை இரு வழிச் சாலையாக மாற்றுவதற்கு குறைந்த பட்சம் 2,200 பயணியர்

வாகன அளவு என்ற குறியீட்டை நாம் நிர்ணயித்திருக்கிறோம். அந்தச் சாலையில் அந்தக் குறியீட்டை நாம் எட்டவில்லை. ஆகவே இருக்கின்ற ஒரு வழிச் சாலை முறையான வகையிலே இன்றைக்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, அந்த ஒரு வழிச் சாலையே போதுமானது என்று அரசு கருதுவதால், அந்த ஒரு வழிச் சாலையை நல்ல முறையிலே பராமரித்து இடைஞ்சல் இல்லாமல் பார்த்துக் கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 207, திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

207—

பாலம் பழுதுபார்த்தல்

*3843 திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி துரை குடியிருப்பு (கோனார்) மெயின் ரோட்டில் இருந்து வரும் நடைபாதையில் உள்ள பாலத்தை பழுதுபார்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 208, திரு. தேனி பன்னீர்செல்வம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

208—

போடிநாயக்கனூர் தொகுதியில் சாலைகள் சீரமைப்பிற்கு அனுமதிக்கப்பட்ட தொகை.

*4026 திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) போடிநாயக்கனூர் தொகுதியில் இந்த நிதியாண்டில் சாலைகள் சீரமைப்பிற்காக அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த சாலைகளுக்கு எவ்வளவு அனுமதிக்கப்பட்டுள்ளது ?



(இ) தற்போது நடைபெற்று முடிந்துள்ள பணிகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

(அ) போடிநாயக்கனூர் தொகுதியில் இந்த நிதி ஆண்டில் சாலைகள் சீரமைப்பிற்காக அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 43.69 இலட்சம்.

(ஆ) பிரதான மாவட்டச் சாலைகள் (எம்.டி.ஆர்.) :

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) போடி தேவாரம் சாலை கி.மீ. 0/0-19/6 | 22.41 |
| (2) பாளையம் தேவாரம் சாலை கி.மீ. 0/0-12/2 | 6.66 |
| | 29.07 |

பிற மாவட்டச் சாலைகள் (ஓ.டி.ஆர்.) :

| | |
|---|---|
| (3) பெரியாண்டவர் சாலை கி.மீ. 0/0-0/6 | 1.00 |
| (4) கி.மீ. 8/8 தேனி போடி சாலையிலிருந்து டொம்புச்சேரி சாலை கி.மீ. 0/0-3/2 | 3.90 |
| (5) உப்புக்கோட்டை சங்கராபுரம் சாலை கி.மீ. 4/8-7/0. | 1.55 |
| (6) பத்ரகாளிபுரம் காமராஜபுரம் சாலை கி.மீ. 0/0-1/0 | 1.20 |
| (7) சடையான்பட்டி காமராஜபுரம் சாலையிலிருந்து பத்ரகாளிபுரம் சாலை கி.மீ. 0/0-1/0 | 0.75 |
| (8) தேனி போடி சாலையிலிருந்து சடையான்பட்டி செல்லும் சாலை கி.மீ. 0/0-1/0 | 1.60 |
| (9) மேலசொக்கநாதபுரம் சாலை கி.மீ.0/0-1/0. | 0.60 |

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| (10) திருமலாபுரம்—மீனாட்சிபுரம் சாலை கி.மீ. 1/0-2/0. .. | 1.00 |
| (11) டொம்புச்சேரி கிராம சாலை கி.மீ. 0/0—0/4 | 0.40 |
| (12) தேவாரம்—நம்பிநாயக்கன் பட்டி சாலை கி.மீ. 1/0-3/0 | 2.62 |
| | 14.62 |
| மொத்தம் .. | 43.69 |
| (இ) (1) போடி—தேவாரம் சாலை கி.மீ. 1/0-1/4 (எம்.டி.ஆர்.). | 0.95 |
| (2) போடி—தேவாரம் சாலை கி.மீ. 1/4-2/0 | 0.66 |
| (3) போடி—தேவாரம் சாலை கி.மீ. 4/0-5/0 | 1.10 |
| (4) போடி—தேவாரம் சாலை கி.மீ. 5/0-6/0 | 0.50 |
| (5) போடி—தேவராம் சாலை கி.மீ. 6/0-7/0 | 0.50 |
| (6) போடி—தேவாரம் சாலை கி.மீ. 9/0-10/0 | 0.50 |
| (7) போடி—தேவாரம் சாலை கி.மீ. 14/2-15/0 | 0.47 |
| (8) போடி—தேவாரம் சாலை கி.மீ. 15/0-15/6 | 0.75 |
| (9) போடி—தேவாரம் சாலை கி.மீ. 15/6-16/6 | 1.16 |
| (10) போடி—தேவாரம் சாலை கி.மீ. 16/6-17/0 | 1.26 |
| (11) போடி—தேவாரம் சாலை கி.மீ. 18/2-18/8 | 0.68 |
| (12) போடி—தேவாரம் சாலை கி.மீ. 19/0-19/6 | 0.38 |
| | 7.90 |
| (13) பாளையம்—தேவாரம் கி.மீ. 10/0-11/0 | 1.30 |
| (14) பாளையம்—தேவராம் கி.மீ. 11/0-11/6 | 0.78 |
| மொத்தம் .. | 2.08 |

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர் செல்வம், இருக்கையில் இல்லை.



வினா எண் 209. திரு.எம். தங்கவேல்.
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

209—

## வாழை ஆராய்ச்சி நிலையம்

*3468 திரு. எம். தங்கவேல் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

லால்குடி அரசு வேளாண்மைக் கல்லூரியின் மூலம் அமைக்கப்படுகிற வாழை ஆராய்ச்சி நிலையத்தை அதற்கேற்ற மண் வளம், நீர் வளம் உள்ள மண்ணச்சநல்லூர், கல்பாளையம் பகுதியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அமையவிருக்கும் வாழை ஆராய்ச்சி மையம் நிறுவ உள்ள இடம் மத்திய மாநில அரசின் ஆய்வில் உள்ளது. அதற்கான முடிவு இன்னும் இறுதியாக்கப்படவில்லை.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சி காலத்தில் குமிழூர் பகுதியில் அமைக்கப்படவிருக்கிற வேளாண்மைக் கல்லூரிக்காக மண்ணச்சநல்லூர், கல்பாளையம் பகுதியை அரசு அதிகாரிகள் சர்வே செய்தார்கள். ஆனால் அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலைமை காரணமாக குமிழூருக்கு மாற்றினார்கள். அதன் சார்பாக அமையவிருக்கின்ற ஆராய்ச்சி நிலையத்தையாவது முசிறி தொடுகல்பாளையம் பகுதிகளில் மண் வளம், நீர் வளம் உள்ள பகுதியாக இருப்பதால் அந்தப் பகுதிகளில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "வாழை வாழவைத்தாலும் வைக்கும் அல்லது வாழ்வையே அழிக்கும் வல்லமை கொண்டது" என்று வாழைப் பயிர் பற்றிச் சொல்வார்கள். "பெண் உலகம் ஆளும் நாள் எந்நாளோ அந்நாளே துன்பமெல்லாம் போகும் நாள்". இது பாரதிதாசன் கூற்று. வாழை சாகுபடி செய்யக்கூடியவர்கள் பல்வேறு அல்லல்களுக்கிடையே அதை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் அன்றி தங்களுடைய வாழ்வையும், வளத்தையும் இழந்திருக்கிறார்கள், இந்தியத் துணைக் கண்டத்திலே அமைய இருப்பது ஒரேஒரு வாழை ஆராய்ச்சி மையம். அதுவும் தமிழகத்தில் புரட்சித் தலைவி காலத்தில் அமைய

இருக்கிறது, வாழைப் பயிர் மிகுதியாகப் பயிரிடப்படும் பகுதியாக இருக்கவேண்டும் அது. ஓரேஒரு வாழை ரகம் மட்டும் பயிரிடப்படும் பகுதியாக இல்லாமல் பல ரக வாழைப் பயிர்கள் பயிரிடக்கூடிய பகுதியாக இருக்கவேண்டும். நீர் வளமும், நில வளமும் நிறைந்த பகுதியாகவும் இருக்க வேண்டும். அந்த இடத்தின் அருகில் வேளாண்மைக் கல்லூரி அமைந்திருக்க வேண்டும் ஏனெனில், அப்போதுதான் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு அது ஏதுவாக இருக்கும். எனவே இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இந்த ஆராய்ச்சி மையம் அமையவேண்டும் என்று மத்திய ஆராய்ச்சி நிபுணர் குழு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. எனவே ஏற்ற இடத்தில் அது அமைவதற்கு இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. எம். தங்கவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மண்ணச்சநல்லூர் பகுதியிலிருந்து கல்லூரிக்கும், கல்பாளையம் பகுதிக்கும் கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தான் இருக்கும், அதனால், அங்கே அமைய இருக்கின்ற வாழை ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் அழிவு ஏற்படாது, மண் வளமும், நீர் வளமும் உள்ள அந்தப் பகுதியில், புரட்சித் தலைவியின் ஆட்சியில் அமைய இருக்கின்ற ஆராய்ச்சி நிலையம் எங்களை வாழவைக்கும், இதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அந்த இடத்தைத் தேர்வு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியான இடத்தில் அது அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்,

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த வாழைப் பயிர் கடந்த சில காலங்களில் முடிகொத்து நோயினால் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு, மிகவும் கொடுமைக்கு ஆளானார்களே, அம்மாதிரி இப்போதும் எங்கோ பரவலாக அந்த முடிக்கொத்து நோய் வருவதாகப் பல இடங்களில் பேசப்படுகிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஆமென்றால் முழுமையாக அந்த நோயைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்,



மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முடிக்கொத்து நோய் மட்டுமல்ல. வாழைக்கு எந்த நோய் வந்தாலும் அத்தனை நோய்களையும் தடுத்து, களைய வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வாழைக்கென தனியாக ஆராய்ச்சி மையத்தைத் தமிழகத்தில் நிறுவுவதற்கு விருப்பம் கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 210, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

210—

## போளூர் வேளாண்மைப் பொறியியல் சேவை மையத்தை விரிவுபடுத்தல்

*6150 திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் வேளாண்மைப் பொறியியல் சேவை மையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த மையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டித்தந்து சரிவர இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போளூர் வேளாண்மைப் பொறியியல் சேவை மையம் ஆற்றுகின்ற பணியின் தன்மையின் அடிப்படையில் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பும் இருக்கிறது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் போளூர் என்றாலே வேளாண்மை என்று பொருள் உண்டு. போளூரில் பத்தாண்டுகளுக்கு முன்பு வேளாண்மைப் பொறியியல் சேவை மூலம் டிராக்டர் வைத்து அனைத்து விவசாய மக்களும் பயனடைந்தார்கள். அதை நவீனப்படுத்தும் திட்டத்தில் மேலும்

இரண்டு மூன்று டிராக்டர்களை வாங்கிக் கொடுத்து அந்த விவசாயப் பகுதி மக்கள் பயனடைய அரசின் செயற் குறிப்பு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் மட்டுமல்ல. தமிழகத்தின் வேளாண்மைப் பெருங்குடி மக்கள் நலன் பெறு கிற வகையில் இந்த அரசு அனைத்து திட்டங்களையும் செயல் படுத்திக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 211, திரு. வே. பெரியசாமி மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

211—

அந்தியூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

*809. திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில், அந்தியூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகட்ட முன்பணம் மக்களிடமிருந்து வசூல் செய்தபிறகும் வீடுகள் கட்டப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்குத் தேவையான குறைந்த அளவு விண்ணப்பங்கள் கூட பெறப்படாததாலும், பொரு ளாதார அடிப்படையில், செயலாக்க இயலாமையாலும், திட்டம் கைவிடப்பட்டது.

முற்பகல் 10-10

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அந்தியூர் தொகுதியில் உள்ள அந்தியூர் நகரப் பேரூராட்சி மன்றம் 20 ஆயிரம் மக்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கே ஏராளமான அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. ஏராளமான நெச



வாளப் பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள். அந்த நெச வாளப் பெருங்குடி மக்கள் எல்லாம் என்னிடத்திலே வந்து, ஐயா ''நீரு ஒகி தொட்டம்மா, சீப் மின்ஸ்ட்டருனி அவர்கடா நம்க்கோ மனபேக்கு என்று கன்னடத்திலே மாடபேக்கு......''. எனவே நீங்கள் எல்லாம் கருணை உள்ளம் கொண்டு காருண்ய உள்ளம் கொண்ட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதல் பெற்று தயவுசெய்து இவ்வாண்டு இல்லை என்று சொன்னாலும் வரும் ஆண்டிலாவது இங்கே வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் 101 நகரப் பகுதிகள் வீட்டு வசதி மேற்கொள்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையிலே இந்த 101 நகரங்களிலே தேவை கருதி மேற்கொள்ளப்பட்டது. தேவை என்ற அடிப்படையிலே மேற்கொள்ளப்பட்டதில் சுமார் 77 நகரங்களில் மட்டுமே வீடு கட்டும் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது. மீதம் உள்ள 24 நகரங் களில் போதிய தேவை இன்மை காரணமாக, குறை வான தேவை கணிப்பு காரணமாக அங்கே வீடு கட்டும் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவற்றில் பெரி யார் மாவட்டத்திலுள்ள அந்தியூர் நகரமும் அடங்குவ தாகும். அங்கே 'டிமாண்ட் லேது' என்ற காரணத்தினால் இந்தத் திட்டம் கைவிடப் பட்டிருக்கிறது. தேவை கருதி அரசு மீண்டும் உறுதியாக எடுத்துக் கொள்ளும். அந்த அடிப்படையிலே தேவை இருக்குமாயின் பொருளாதார ரீதியாக சாத்தியக்கூறு இருக்குமாயின் இந்தத் திட்டம் ஆய் வுக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களும், உறுப்பினர் அவர்களும் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவது போல அதை மொழி பெயர்த்து விட்டார்களானால் நல்லது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னடமும் களிதெலுங்கும், கவின் மலையாளமும் துளுவும்'' தமிழிலே இருந்து பிறந்தது என்று நாடகப் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கின்ற காரணத்தினால் அந்தக் கன்னட பகுதியிலே உள்ள மக்கள் தமிழை நன் றாக அறிந்திருப்பதாலும் அந்த மக்களுடைய வேண்டுகோளை

உங்கள் மத்தியிலே வைக்கிறேன். அருள் கூர்ந்து இவ்வாண்டு இல்லை என்றாலும் வரும் ஆண்டிலாவது செய்வதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 212, திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

212—

ஊனமுற்றோருக்குத் தனி மருத்துவமனை.

*3405 திருமதி கவிநிலவு தர்மராஜ்:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமது அன்றாடப் பணிகளைக் கூட செய்ய இயலாத ஊனமுற்றோருக்குத் தனி மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) மொடக்குறிச்சி தொகுதியில் இருக்கும் 41 ஊனமுற்றோருக்கு வாழ்வளிக்க ஊனமுற்றோர் பள்ளியில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை. மற்ற உதவிகள் வழங்கப்படுகின்றன.

(ஆ) இந்த 41 பேர் பற்றி விவரம் தந்தால் ஆவன செய்யப்படும்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய கடந்த கால ஆட்சியினுடைய ஊன நிலையை மாற்றி ஒரு உன்னத நிலைக்குத் தமிழக அரசையே உருவாக்கி அமைத்திருக்கும் கலி உலக சிற்பி, நான் வணங்கும் நடமாடும் பேசும் தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பெற்ற குழந்தைகளுடைய உடல் ஊனத்தைப் பார்த்து உள்ளம் ஊனம்பட்ட



சூழ்நிலையில் இருக்கக்கூடிய பெற்றோர்கள் மகிழக்கூடிய விதத்திலே அத்தனை பேர்களுக்கும் தாயாக இருந்து பணியாற்றக் கூடிய தாயுள்ளம் கொண்ட, கருணை தேவதையினுடைய ஆட்சியிலே ஊனமுற்றோருக்கு என்று வருகின்ற நிதி ஆண்டிலேயாவது ஒரு தனி மருத்துவ மனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையைப் பொறுத்த மட்டில் இவ்வகை ஊனமுற்றோர்கள் குடும்பத்திற்கு ஒரு பாரமாக அமையக்கூடாது என்பதற்காக அரசு அவர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகை வழங்கி வருகிறது. இந்த ஆண்டு 15 ஆம் தேதி உலக ஊனமுற்றோர் நாளாகும். இதுவரை தமிழகத்தில் ஆண்ட எல்லா முதலமைச்சர்களுடைய ஆட்சியிலும் 400 ஊனமுற்றவர்களுக்கு மட்டுமே அரசு உதவித் தொகை வழங்கி வந்தது. ஆனால் இன்று இருக்கின்ற நிதிநிலை நெருக்கடியிலேயும் முதன் முதலாக இந்த ஆண்டு 630 பேர்களுக்கு வழங்கவேண்டும் என்று உத்தரவு போட்டு இருப்பவர் தமிழகத்தின் முதல் முதலமைச்சர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள். மருத்துவ மனைக்குச் சென்று வர 20 வயதிற்கு உட்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. ஒரு பெரிய அரசு மருத்துவ மனையிலே ஊனமுற்றவர்களுக்கு என்று சிகிச்சைபெற தனிப் பிரிவுகள் கண், காது, முடநீக்கியல் பிரிவுகள் உள்ளன. சென்னை கே. கே. நகரில் கை, கால் ஊனமுற்றவர்களுக்கு என்ற தனி சிகிச்சை நிலையம் இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் 50 வட்டாரங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்கென எல்லா வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இந்த நிலையில் ஊனமுற்றவர்களுக்கென தனியாக மருத்துவமனை அமைப்பது பற்றி சுகாதாரத் துறைதான் முடிவு செய்ய வேண்டும்.

முற்பகல் 10-15

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே சுகாதாரத் துறையாவது இந்தக் குறையை நிவர்த்தி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்புடையது அல்ல. சமூக நலத் துறையைப் பார்த்து, சுகாதாரத் துறையாவது இந்தக் குறையை நிவர்த்தி செய்யுமா என்று கேட்பது பொருத்தம் இல்லாதது, உட்காருங்கள். டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு ஓவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்தத் துறைகளில் எவ்வளவு சலுகைகள், குறிப்

பாக மருத்துவ வசதி, கல்வி வசதி உள்ளன என்பது உடல் ஊனமுற்றவர்களுக்கு சரிவர விளக்கப்படுவதில்லை என்று உடல் ஊனமுற்றவர்கள் சொல்கிறார்கள். அது உண்மையா? உண்மையெனில் இதை நிவர்த்தி செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புத் திட்டத்திலும், கல்வித் திட்டத்திலும் உடல் ஊனமுற்றவர்கள் அதற்கு விண்ணப்பம் அளித்திருந்தால் முதல் அடிப்படையில் அவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் பல ஆண்டுக் கணக்கில் வண்டிக்காக காத்திருக்கிறார்கள். அவ்வாறு தங்களுடைய வேலை வாய்ப்புக்காக வண்டிக்காக, காத்திருக்கிறவர்கள் மற்றும் காலிபர்ஸ் (Caliper-) போன்றவற்றுக்காக காத்துக் கொண்டிருப்பவர்கள் நலன் கருதி அரசு உடனுக்குடன் அந்த நபர்களுக்கு கை சக்கரங்கள் வழங்கவும், காலிபர்ஸ் வழங்கவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கடந்த ஆண்டுகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற உடன், கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் கூட பரிசீலனை செய்யப்பட்டு, உடனுக்குடன் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 213, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

213—

அரசுத் துறைகளில் 30 சதவிகிதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

*3877 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசின் எல்லாத் துறைகளிலும் 30 சதவிகிதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?





மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சிகள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 விழுக்காட்டை ஏற்கனவே முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதுவரையில் அதில் ஏதாவது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் எந்தெந்தத் துறைகளில் எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமுள்ள 201 அரசுத் துறைகளில், அரசுத் துறை நிறுவனங்களில் 130 துறைகளிடமிருந்து பதில் வந்துள்ளது. இதன்படி 2,657 பெண்களுக்கு வேலை கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பீட்ரிக்ஸ் டி. சோசா.

Dr. BEATRIC D'SOUZA : Hon. Speaker, Sir, will the Hon. Minister for Social Welfare relax the age limit to give priority to certain categories of women—destitute women, single mothers and young widows—who need employment?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உடல் ஊனமுற்ற பெண்களுக்கு அந்தச் சலுகை இருக்கிறது. மற்றவர்களுக்கு மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 214, திரு. கே. முனிவெங்கடப்பன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

214—

சத்துணவு அமைப்பாளர்களை ஆசிரியர்களாக நியமித்தல்.

*5072 திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஓராண்டு பயிற்சி கொடுத்து அவர்களை ஆசிரியர்களுக்கு உதவியாக பள்ளியில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) அவர்களுக்கு ஆசிரியர் சம்பளத்தில் பாதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அப்படிப்பட்ட திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கே இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனி வெங்கடப்பன். இருக்கையில் இல்லை.

வினா எண் 215 திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

215—

கால்நடைக் கிளை மருத்துவமனைக்குக் கட்டிடம்.

*481 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) ஆலங்குளம் ஒன்றியம், அச்சங்குட்டம் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவ மனைக்குக் கட்டிடம் இல்லாமல் பஞ்சாயத்துக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகக் கட்டிடம் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆலங்குளம் ஒன்றியம், அச்சங்குட்டம் கிராமத்தில், கால்நடை கிளை மருத்துவமனை ஆலங்குளம் பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த இலவச கட்டிடத்தில் இயங்கி வருகிறது.



நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு பொது மக்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் தங்களது சொந்த நிதியிலிருந்து தொகை அளிக்க முன்வந்தால், தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமான் சொன்னதைப்போல அந்தப் பஞ்சாயத்துக் கட்டிடத்திலே ஒரு நூலகமும், அதைப் போல ஒரு கிளை கால்நடை நிலையமும் இயங்கி வருகின்றன. அதற்காக கட்டிடத்திற்கான நில ஒதுக்கீட்டை அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அது சம்பந்தமான தேவையான பணமும் கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆதலால் அதைத் துரிதமாக கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே உறுதி அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக ஜவஹர் யோஜனா நிதியிலிருந்து இவைகளுக்கு நிரந்தரக் கட்டிடம் படிப்படியாக (in a phased manner) கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 216, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

216—

புதிய கால்நடை மருத்துவ மனை.

*3779 திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராஜபாளையம் தொகுதியில் எஸ். ராமலிங்கபுரம் கிராமத்தில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ராஜபாளையம் தொகுதியில் உள்ள எஸ். ராமலிங்காபுரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள கோபாலபுரம், குறுச்சியார்பட்டி, சிவலிங்கபுரம், வடகரை போன்ற கிராமங்களில் உள்ளவர்கள், குறிப்பாகத் தாய்மார்கள் பசு மாடுகளை வளர்த்து, அதன்மூலம் வருவாயை ஈட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எஸ். இராமலிங்காபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் கிட்டத்தட்ட 10,000-க்கும் மேலான கால்நடைகள் இருப்பதால் அங்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க, இந்த வருஷம் இல்லாவிட்டாலும், வரும் நிதி ஆண்டிலாவது அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் ஒன்றியத்திலிருந்து கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான தீர்மானத்தைப் போட்டு, முழு வடிவில் பிரேரணையை அனுப்பி வைக்குமாறு விருதுநகர் மண்டல இணை இயக்குநரிடம் கேட்கப்பட்டுள்ளது. பிரேரணை வருமானால் எஸ். ராமலிங்காபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ். ராமலிங்காபுரத்தில் கால்நடை மருத்துவமனையை பெர்மனன்டாக அமைப்பதற்கு முன்னால் டெம்பரரியாக வாரத்திற்கு ஒருமுறை மொபைல் கால்நடை மருத்துவமனை செட்டப் வந்தால், அங்கேயுள்ள கால்நடைகளுக்கு நன்மையாக இருக்கும். இதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 217, திருமதி என். சி. கனகவல்லி, மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

### விளாத்திக்குளம் மீனவர்களுக்கு படகுகள்.

217—

*4938 திருமதி என். சி. கனகவல்லி ;

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விளாத்திக்குளம் தொகுதி மீனவர்களுக்கு படகுகள், மீன்பிடி சாதனங்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?





மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

பொதுவாக மீனவர்கள் அந்த வட்டாரத்திலுள்ள மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து வங்கிக் கடன் ஒப்புதலுடன் அருகிலுள்ள மண்டல மீன் துறை உதவி இயக்குநருக்கு உரிய முறையில் அனுப்பும் விண்ணப்பங்களுக்கு நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து, படகுகள் மற்றும் வலைகள் வாங்க அரசு மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

திருமதி என். சி. கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளாத்திகுளம் தொகுதியில் கடற்கடை ஓரமாக வாழும் மீனவர்கள் சொந்தமாகத் தொழில் செய்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள அவர்களுக்கு மீன் பிடிக்கும் சாதனங்களையும், படகுகளையும் அரசு வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990–91-ல் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கவில்லை. ஆனால் நமது ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ரூ. 1,20,500 ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் பாரம்பரிய கட்டுமர மீனவர்கள் நைலான் வலை மற்றும் வெளிப் பொறுத்தும்–உட் பொறுத்தும் இயந்திரங்கள், விசைப் படகுகள் மற்றும் கட்டு மரங்கள் வாங்க நிதி உதவி செய்யப்படுகிறது. இந்த விளாத்திகுளம் தொகுதியைப் பொறுத்தவரையில் வலைகள் வாங்க, வங்கி மூலம் கடன் கேட்டு மீனவர்களிடமிருந்து தூத்துக்குடி உதவி இயக்குநருக்கு இதுவரை விண்ணப்பங்கள் எதுவும் தரப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–25

திருமதி என். சி. கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைப்படகுகள், மீனவர்களுக்கு வழங்கப்படுவதில்லை, பதிலாக வசதி படைத்தவர்களுக்கு, தனியார்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மீனவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் ஆக இருந்தால்தான் வழங்கப்படுகிறது. எனினும் இது குறித்து மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் இல்லாதவர்களுக்குக் கடன் வழங்

சப்பட்டிருப்பதாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளம் மீனவர்களுக்கு மட்டுமா இந்தப் பயன்? அல்லது தமிழகத்தில் உள்ள அனைத்து மீனவர்களுக்கும் கொடுக்கப்படுமா? Fish Farmers களுக்கும் அந்தக் கடன் வசதி செய்து தரப்படுமா என்பதை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே Fish Farmer, என்று சொல்லக்கூடிய உள்நாட்டு மீனவர்களுக்கு வசதிகளை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் உள்நாட்டு மீனவர்களை வளப்படுத்த அவர்களுக்கு வருவாய்த்துறை குளங்கள் மற்றும் பொதுப்பணித் துறை குளங்கள்குத்தகைக்கு விடப்பட்டு பல்வேறு வசதிகளும் மீன் குஞ்சுகளும்வாங்க கடன் உதவியும் அளித்து, மானியமும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 218 திருமதி வி. ஜி. மணிமேகலை, மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர்.

218—

## தமிழ்பாடியில் தொழிற்பேட்டை.

*4523 திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சுழியில் உள்ள தமிழ்பாடியில் தொழிற்பேட்டை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக்கழகத்தால் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழகம் தொழில் துறையில் பொற்கால சகாப்தம் படைக்க பல்வேறு சலுகைகளை வாரி வழங்கியுள்ள தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு





சிறு தொழில்களுக்குப் பல்வேறு சலுகைகளை வாரி வழங்கியுள்ள இந்த நேரத்தில், போதுமான தொழில் முனைவோர்கள் சிறு தொழிற் கூடங்கள் பெற முன்வருவார்களேயானால், 'சிட்கோ' உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி வி. ஜி. மணிமேகலை இருக்கையில் இல்லை.

வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் *குறிப்பு

மயிலாடுதுறைத் தொகுதியிலுள்ள நலத்துக்குடியில் ஏற்பட்ட எரிசாராயச் சாவுகள் குறித்தும் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை கோரிக்கை மனுக்கள் பற்றி வந்துள்ள செய்தி குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மயிலாடுதுறை தொகுதியில் உள்ள நலத்துக்குடி கிராமத்தில் விஷ சாராயம் குடித்து 12 பேர் இறந்துவிட்டதாகவும், மேலும் 60 பேர்கள் பொது மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வந்துள்ள செய்தி குறித்து, அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டுமென்று கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வகைகளில் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன். திரு. ஆர். சிங்காரம் திரு. இளம்வழுதி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. கோ. பழனிசாமி, திருமதி ரமணி நல்லதம்பி, திரு. எஸ் எஸ். ராமசுப்பு, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. மா. சுந்தரதாஸ்.

இது மிக இன்றியமையாத பிரச்சினை என்கிற காரணத்தால் இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர அனுமதிக்கிறேன். அறிவிப்புக் கொடுத்துள்ள உறுப்பினர்களில் திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் அவர்கள் அந்த தொகுதியைச் சேர்ந்தவராக இருக்கிற காரணத்தால் அவருக்கு அனுமதி அளிக்கிறேன். திரு. அபுல்ஹசன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியான மயிலாடுதுறை தொகுதியில் உள்ள நலத்துக்குடி கிராமத்தில் நேற்று 12—3—1992 ஆம்

[திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்] [1992 மார்ச் 13

நாள் 12.30 மணியளவில் விஷ சாராயம் குடித்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் 7 பேரும்; தஞ்சை மருத்துவமனையில் 3 பேரும் மொத்தம் 10 பேர் இறந்து இருக்கிறார்கள். மேலும் 36 பேர் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். இச்சம்பவம் அங்கே ஒரு பெரிய பதட் டத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாராயத்தை ஒழிப்பதற்காக மிகவும் தீவிர நடவடிக்கை எடுத்துவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இச்சம்பவம் குறித்து தீவிர நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புவதோடு, மேலும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் என் தொகுதியில் நடைபெறாமல் இருப்பதற்கும் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதையும் அறிய விரும்புவ தோடு, இதன் காரணமாக இன்றையதினம் பெண்களுக்கு அதிக பாதுகாப்பு இல்லாமல் இருந்து வருகிறது. எனவே இவைகள் அனைத்துக்கும் தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்டு, சம்பந்தப்பட்ட இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கும், பாதிக் கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியிலிருந்து நிவாரணம் கொடுக்க ஆவன செய்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசியல் பிரச்சினை அல்ல, மக்கள் பிரச்சினை. நான்தான் முதலிலே கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. உங் களுக்கு முன்னரே அந்த தொகுதியைச் சார்ந்தவர் கொடுத்திருக் கிறார் தயவு செய்து அப்படிச் சொல்லக்கூடாது. இந்த அவையில் சில முறைகளை வைத்திருக்கிறோம். அதாவது இந்த மாதிரிப் பல உறுப்பினர்கள் கொடுக்கிறபோது, சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினருக்கு முன்னுரிமை கொடுத்து அவரைப் பேச வைப்பது என்ற முறையை வைத்திருக்கிறோம். சம்பந்தப் பட்ட தொகுதி உறுப்பினரே சொல்லியிருக்கிறார். கொடுத்த எல்லோரையும் பேசவிடுவது என்றால் விதி 56–இன் கீழ் எடுத்திருக்கலாமே!

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே....



1992 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினரே சொல்லியிருக்கிறார். சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினரே இது பற்றிய முழு விவரத்தையும் சொல்லி இருக் கும்போது—9 உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள்—9 உறுப் பினர்களுக்கும் பேச வாய்ப்புக் கொடுப்பதற்கு விதியில் இட மில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திரு. இளம்வழுதி : முதலிலே நான்தான் கொடுத்தேன். அந்த அடிப்படையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுப்பதற்கு முன்னரே இன்று காலை ஏழேகால் மணிக்கே கொடுத்திருக் கிறார்கள். அப்படியே நீங்கள் கொடுத்திருந்தாலும்கூட, சிறப்பு கவன ஈர்ப்பை எடுக்கிறபோது, சம்பந்தப்பட்ட தொகுதி உறுப் பினருக்கு முன்னுரிமை கொடுத்து வந்திருக்கிறோம். இந்த அவையில் இதைச் சமீபகாலமாக நாம் கடைபிடித்து வருகிறோம். அந்த வகையிலே அவர் பேசியிருக்கிறார். அதற்குரிய பதிலை முதலமைச்சர் தரவிருக்கிறார்கள்.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குமேல் விவாதத் திற்கு இடமே இல்லை. நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெறுகிறபோது, இத்தகைய விவாதங்களுக்கு இடம் இல்லாத காரணத்தாலேதான் இந்த முறையை நாம் கடைபிடித்திருக் கிறோம். ஆகவே இதிலே மேலும் விவாதம் வேண்டாம். நீங் களும் கொடுத்திருக்கிறீர்கள் என்பது பதிவாகியிருக்கிறது.(குறுக் கீடு) சரி. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சேலத்திலேதான் இது போன்று கள்ளச் சாராயம், விஷச் சாராயம் காய்ச்சியதற்காக கைது செய்யப் பட்டவர்கள், முதலமைச்சர் கையெழுத்துப் போடாத காரணத்தால், விடுதலை செய்யப்பட்டதாக பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்திருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் நான், முதலிலேயே சொன்னேன். இதிலே சம்பந்தம் இல்லாத. தொடர்பு இல்லாத பிரச்சினையை இங்கே கிளப்புகிறீர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன், தெளிவுபடுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இந்த விஷயத்தைச் சரி

யாகப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). அதாவது சேலம் கள்ளச் சாராய சம்பவத்தின்போது சிலபேர் இறந்து போனார்கள். அது சம்பந்தமாக காவல் துறையும், கலெக்டரும் கொடுத்த புகாரின் பேரில் சிலபேர் கைது செய்யப்பட்டார்கள். அப்போது கையெழுத்துப் போடுவதற்கு எந்த தாமதமும் ஏற்படவில்லை. 'டிடென்ஷன் ஆர்டருக்கு' சரியான நேரத்தில்தான் கையெழுத்து போடப்பட்டது. அதனால்தான் அவர்கள் 'டிடென்ஷன்' செய்யப்பட்டார்கள், 'டிடெனுவாக' ஆனார்கள். பின்னர் இந்த 'டிடெனுக்கள்' அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று முதலமைச்சருக்கு ஒரு ரெப்ரசென்டேஷனை அனுப்பினார்கள். அந்த ரெப்ரசன்டேஷனில் கையெழுத்துப் போடுவதற்கு எட்டு நாட்கள் மட்டுமே தாமதமானது. அதாவது கைது செய்வதற்காக, 'டிடெய்ன்' செய்வதற்காக கையெழுத்துப் போடுவதில் எந்த தாமதமும் ஏற்படவில்லை. இதை மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் கைது ஆன பிறகு, 'டிடெய்ன்' செய்யப்பட்ட பிறகு தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கை மனுவை அனுப்பினார்கள். அந்தக் கோரிக்கை மனுவைப் பரிசீலித்து நான் கையெழுத்துப் போடுவதற்கு எட்டு நாட்கள் ஆயிற்று. In Tamil Nadu Act No. 14 of 1982, there is no statutory provision that such representations should be considered and disposed of within a specified period. அதாவது குண்டர்கள் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டஒருவர் தன்னை விடுதலை செய்யவேண்டும் என்று கோரிக்கை மனுவை அனுப்பினால் அதன் மீது அரசாங்கமோ, முதலமைச்சரோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் சொல்ல வேண்டும் என்று சட்டம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு முதலமைச்சரின் அலுவலகத்திற்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கோப்புகள் வரும். எனவே விடுதலை மனுவின் மீது, விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மனுவின் மீது முடிவு எடுக்க 8 நாட்கள் என்பது ஒரு முதலமைச்சர் அலுவலகத்திலே பெரிய தாமதம் என்று சொல்ல முடியாது. எனவேதான் இதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் ஒரு 'ஸ்பெஷல் லீவ் பெட்டிஷனை' அரசாங்கத்தின் சார்பில் ஃபைல் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

இப்பொழுது மயிலாடுதுறை எரிசாராய சாவுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் கொடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பின் மீது இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். 12–3–1992 அன்று காலை 10.10 மணிக்கு மயிலாடுதுறை, செட்டிகுளம் தெருவைச் சேர்ந்த முத்தையன் படையாச்சி மகன் செல்வராஜ் என்பவர் எரிசாராயம் குடித்ததனால் மயக்கமும், உடல் முழுவதும் கடுமையான வலியும் இருப்பதாகச் சொல்லி மயிலாடு



துறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதேபோல், நேற்று காலை 10.10 மணியிலிருந்து இரவு 9.15 மணிவரை 31 நபர்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இதே காரணங்களுக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மூவர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தீவிர சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அனுமதிக்கப்பட்ட 32 நபர்களில் 10 பேர் மரணம் அடைந்தனர். மீதம் உள்ள 22 நபர்களுக்கு தொடர்ந்து தீவிரமான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மயிலாடுதுறையைச் சேர்ந்த இறந்துபோன செல்வராஜின் சகோதரர் கணேசன் கொடுத்த புகாரின் பேரில் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் குற்ற எண் 280/92–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த துயரச் சம்பவத்திற்குக் காரணமான எரிசாராயத்தை விற்பனை செய்த மயிலாடுதுறை மேல வீதியைச் சேர்ந்த தங்கராஜ் என்பவரின் மனைவி திருமதி விஜயா மற்றும் 4 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக மேல் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த துயரச் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அபுல்ஹசன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது இத்தகைய சம்பவங்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியைக் கேட்டார். கள்ளச் சாராயத்தை அறவே ஒழிக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு எல்லாவிதமான தீவிர முயற்சிகளைச் செய்து வருகிறது; தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே, இத்தகைய சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் தடுக்க, எந்தெந்த வகையில் எல்லாம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், இதுபோன்ற குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டனை போதாது என்ற கருத்து பலதரப்பிலிருந்து இப்போது வந்து கொண்டிருக்கிறது. இதற்காக தண்டனையை மேலும் கடுமையாக்க வேண்டும் என்று பலதரப்பினர் கோரிக்கைகள் வைத்து உள்ளனர். எனவே, எவ்வாறு இந்தத் தண்டனையை மேலும் கடுமையாக்கலாம் என்பதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டியை, ஒரு குழுவை அமைக்கலாம் என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அபுல்ஹசன் அவர்கள், இவர்களுக்கு, இறந்துபோனவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கப்படுமா என்ற வினாவினையும் இங்கே எழுப்பினார்கள். இப்படி இந்தக் காரணத்திற்காக, கள்ளச்சாராயம் அருந்தி இறந்து போனவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி அளித்தால், இது ஒரு தவறான முன்மாதிரியை ஏற்படுத்திவிடும் என்று

நான் அஞ்சுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). வேறு காரணங்களுக்காக இறந்து போனவர்களுக்கு அல்லது விபத்துக்கு உள்ளானவர்களுக்கு இந்த அரசு தவறாமல், தட்டாமல் நிதி உதவி அளித்து வருகிறது. ஆனால், கள்ளச்சாராயம் அருந்தி ஒருவர் இறந்துபோனால் அவரது குடும்பத்தை இந்த அரசாங்கம் காப்பாற்றும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படுமேயானால், கள்ளச்சாராயம், சாராயம் அருந்தும் பழக்கத்தை நாம் அறவே ஒழிக்க முடியாமல் போய்விடும். இது ஒரு தவறான தைரியத்தை மக்களுக்குக் கொடுத்துவிடும் என்ற காரணத்தினால் அரசு இந்தக் கோரிக்கையை ஏற்க இயலாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே சமயத்தில், மனிதாபிமானத்தோடு, கருணை அடிப்படையில் இறந்து போனவர்களின் குடும்பத்தினருக்கு வேறு வகையான உதவிகளைச் செய்ய நிச்சயமாக இந்த அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. உரிமைப் பிரச்சினை.

உறுப்பினர், டாக்டர் தே. குமாரதாஸ் 12—2—1992 ஆம் தேதிய ஜூனியர் விகடன் பத்திரிகையில் பேரவை நடவடிக்கைகளைத் திரித்துக் கருத்துக்கள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். இதிலே மேற்கொண்டு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு). இது வேறு பிரச்சினை. உரிமை மீறல் பிரச்சினையை எடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு). நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இதிலே மேற்கொண்டு பேசத் தேவை இல்லை. உரிமை மீறல் பிரச்சினை, முக்கியமான ஒரு பிரச்சினையை நான் எடுத்துக்கொண்டு இருக்கிறேன். மேற்கொண்டு எப்போதும் விளக்கங்கள் கேட்க அனுமதிப்பதில்லை. ;

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் மீது, அவர் 12—2—1992 ஆம் நாளிட்ட ஜூனியர் விகடன் பத்திரிகையில் அவையின் நடவடிக்கைகள் குறித்து எழுதியுள்ள கட்டுரை தன்னுடைய உரிமையைப் பாதிக்கும் வகையில் உள்ளது என்றும், இந்த அவையின்



உரிமையை மீறிய செயலாக அமைந்துள்ளது என்றும், குறிப்பிட்டு ஓர் அறிவிப்பைக் கொடுத்து உள்ளார்கள். இது இன்னொரு உறுப்பினர் பற்றிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் அந்த சம்பந்தப்பட்ட உறுப்பினரான டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினையின் நகல் வழங்கப்பட்டுள்ளது. இது எவ்வாறு அவை உரிமை மீறிய செயலாகும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு வேண்டுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 10—40

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்குச் சில உரிமைகள் உண்டு. மக்கள் பிரதிநிதிகளாக இந்த அவையிலே பணியாற்றுகிற உறுப்பினர்களுக்குச் சில உரிமைகள் உண்டு. அவையின் காவலர் என்ற முறையில் அந்த உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்கு உண்டு. நான் இந்த உரிமை மீறல் பிரச்சினையை இங்கே எழுப்புவதற்கு முன்பாக ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர், ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னர்தான் இந்தப் பிரச்சினையை நான் இங்கே எழுப்புகிறேன். காரணம் உரிமை மீறல் பிரச்சினையை வழக்கமாக நாம் வெளியேயிருக்கிற பத்திரிகையாளர்கள் மீது அல்லது நம்முடைய உரிமைகளை மீறுகின்ற நபர்கள் மீது தான் கொண்டு வருவோம்.

இந்த உரிமை மீறல் பிரச்சினை இந்த அவையிலே உறுப்பினராக இருக்கின்ற ஒருவர் சம்பந்தப்பட்டது. அதுவும் எதிர் வரிசையில் வீற்றிருக்கிற ஒருவர் சம்பந்தப்பட்டது. எனவே நான் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகுதான் இதை உரிமை மீறலாகக் கொண்டுவர விரும்புகிறேன், என்று நோட்டீசை நான் தங்களுக்கு அனுப்பி வைத்தேன். அதற்குப் பின்னாலே கூட, நான் கொஞ்சம் தயக்கம் காட்டினேன். — உங்களுக்கு தெரியும். இந்தப் பிரச்சினையின் நோட்டீஸ் அவருக்குப் போயிருக்கிறது. எனவே, இந்த அவகாசத்தை அவர் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்கிறாரா என்று நான் பார்க்க வேண்டிய கடமையும் எனக்கிருந்த காரணத்தால் நான் கொஞ்சம் பொறுமை காட்டினேன், நிதானம் காட்டினேன். உங்களிடத்தில் நான் இதுபற்றி பல முறை பேசியிருக்கிறேன். இன்றையதினம் இங்கே இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன் என்று சொன்னால் இந்தப் பிரச்சினையை இனியும் எழுப்பாமல் விட்டால் நான் ஜனநாயகக் கடமையிலிருந்து தவறு செய்கிறவன் என்ற எண்ணம் எனக்கு ஏற்படும்.

அதுமட்டுமல்லாமல் அவையின் உரிமையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நம் அத்தனைபேருக்கும் உண்டு அவை உறுப்பினர்கள் என்ற முறையில். பேரவைத் தலைவர் மீது வருகிற

குற்றச்சாட்டுகளாக இருந்தாலும் சரி, முதலமைச்சர் அவர்கள் மீது வருகிற குற்றச்சாட்டுகளாக இருந்தாலும் சரி, பேரவையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மீது வருகிற குற்றச்சாட்டுகளாக இருந்தாலும் சரி, அவை தவறாகயிருந்து அவையினுடைய உரிமையை மீறுகிற வகையில் அமைகிற நேரத்தில் நிச்சயமாக அவை உரிமை மீறலாக எடுத்துக்கொள்ளப்படுமென்ற அளவில் தான் இன்றைய தினம் இந்த உரிமைப் பிரச்சினையை இங்கே நான் எழுப்புகிறேன்.

டாக்டர் குமாரதாஸ் அவர்கள் 12—2—1992 நாளிட்ட ஜூனியர் விகடன் பத்திரிகையிலே 'டாக்டர் குமாரதாஸ் சட்டசபை நடவடிக்கைகளை இந்த வாரமும் அலசுகிறார்' என்று தலைப்பிட்டு எழுதியிருக்கிறார். ஜூனியர் விகடன் பத்திரிகை அதை வெளியிட்டு இருக்கிறது. அந்தக் கட்டுரையில் டாக்டர் குமாரநாஸ் குறிப்பிட்டிருக்கும் பல விஷயங்கள் உண்மைக்குப் புறம்பாக இருக்கின்றன. நடந்தவற்றை திரித்துக் கூறியிருக்கிறார். இதில் என்னையும், எங்கள் கட்சியையும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர், சில சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட அத்தனை பேரையும் தரம் தாழ்த்துகின்ற வகையிலே, இழிவுபடுத்துகிற வகையிலே விவரிக்கப்பட்டிருக்கிறது. ஜூனியர் விகடன் பத்திரிகை அதிகமான மக்களால் படிக்கப்படுகிற பத்திரிகை. அதிலே வெளியிடப்பட்டிருக்கும் உள்நோக்கம் கொண்ட தவறான கருத்துக்கள் மன்ற உறுப்பினர்கள் புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் மக்கள் மன்றத்தில் தவறான கருத்துக்களை உண்டாக்கும் வகையிலும் அமைந்திருக்கின்றன.

முதலாவதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்பைக் குறிப்பிட்டு எழுதிய டாக்டர் குமாரதாஸ்—'இது ஜனநாயகப் படுகொலை. சட்டமன்ற விதிகளை மீறக் கூடாது என்று அடிக்கடி சொல்லும் சபாநாயகர் ஜனநாயக விதியை முதலில் காப்பாற்றட்டும். ஜனநாயகமே இல்லாத போது சட்டமன்றம் ஏது விதி ஏது, என்று கண்டித்து எல்லா எதிர்க்கட்சிகளும் வெளிநடப்பு செய்தோம்' என்று குறிப்பிட்டு இருக்கிறார். எதைச் சொல்கிறார் என்றால் அன்றைய தினம் இங்கே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதற்கில்லை என்று நிராகரிக்கப்பட்டதைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் முதலமைச்சர் பேசியதற்கு ஒரு உள்நோக்கம் கற்பித்துவிட்டு, அவர் ஏதோ பள்ளிக்கூட மாணவர்களுக்கு 'இம்போசிஷன்' கொடுப்பதை போல சொன்னார் என்று சொல்லிவிட்டு, பிறகு தங்களுடைய தீர்ப்புக்கு உள்நோக்கம் கற்பித்து இருக்கிறார். இதன்மூலம் சபாநாயகருடைய சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இருக்





கிறது என்றும், ஜனநாயக விதியைக் காப்பாற்ற சபாநாயகர் தவறி விட்டார் என்றும் டாக்டர் குமாரதாஸ் வலியுறுத்தி இருக்கிறார்.

மேலும் சட்டமன்றமே விதிப்படி நடைபெறவில்லை என்று எல்லா எதிர்க்கட்சிகளும் வெளிநடப்பு செய்ததாக அவர் குறிப்பிட்டு இருக்கிறார். இதுவும் தவறான தகவல். காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கட்சியாக அன்றையதினம் அந்தக் கட்டத்தில் வெளிநடப்பு செய்யவில்லை. இது முற்றிலும் உண்மைக்கு மாறானது. மேலும் மற்ற எதிர்த்தரப்பினர் எல்லாம் வெளிநடப்பு செய்ததற்குப் பிறகுதான், அவையில், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளும் கட்சியை தைரியமாக குறை கூறிப்பேசியதாக, தான் கேள்விப்பட்டதாகவும், அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அப்போது அவையிலே இல்லாததால்தான் அவ்வாறு பேசினார்கள் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு எழுதப்பட்டதாகும்.

முற்பகல் 10-45

மேலும், 'காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர், இதுபோல், இதுவரை, எந்த முதல்வரும் ஆட்சி செய்தது இல்லை என்று வர்ணித்ததாக குறிப்பிட்டுவிட்டு, அதனால், காமராஜர், பக்தவச்சலம் போன்றவர்களைத் தாழ்த்திப் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது ஏன்' என்று கேட்டு இருக்கிறார்கள். இன்றைய முதலமைச்சரைப் பாராட்டிப் பேசினால், காமராஜரைத் தாழ்த்தி பேசியதாக பொருளாகாது. பக்தவச்சலத்தைத் தாழ்த்திப் பேசியதாக பொருளாகாது. இது எப்படி அவர்களைத் தாழ்த்திப் பேசியதாக அமையும் என்பதை அவர்கள் தான் விளக்கியாக வேண்டும்.

மேலும், சட்டமன்றப் பேரவையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சண்முகம் அவர்களைக் குறித்துப் பேசும் வகையில், அவர்களுடைய கட்சியின் கொடி, கொள்கை, அனைத்தையும் இந்திரா காங்கிரஸ் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஐக்கியமாக்கி விட்டார் என்றும், கம்யூனிசத்தையே குறை கூறிப் பேசினார் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதுவும் உண்மைக்கு மாறான, உள்நோக்கம் கொண்ட, மோசமான குற்றச்சாட்டாகும்.

சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சியைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில், இந்திரா காங்கிரஸ் என்று தொடர்ந்து ஏளனமான தொனியில் குறிப்பிட்டு இருப்பதற்கு நான்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 13

எதிர்ப்புத் தெரிவித்தேன். தேர்தல் சின்னங்களைப் பற்றிய
பிரச்சினை எழுந்தபோதுகூட, அதைப்பற்றி தேர்தல்
ஆணைக் குழு அளித்த தீர்ப்பினைப் பற்றியும் குறிப்பிட்டு,
டாக்டர் குமாரதாஸ் அவர்கள் நிலை தவறானது என்று சுட்டிக்
காட்டினேன். ஆனால், அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள்
என்றால், 'நான் சட்டசபையில் எப்போதும் இந்திரா காங்
கிரஸ் என்றே குறிப்பிட்டுப் பேசுவது வழக்கம், ஆனால்,
சென்ற வாரம் திடீரென சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர்
எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அதை ஆட்சேபித்தார், நீங்கள்
இந்திரா காங்கிரஸ் என்று சொல்லக்கூடாது, காங்கிரஸ் என்று
சொல்லவேண்டும் என்றார். நான் உடனே, தேர்தல் கமிஷன்
உங்கள் கட்சியை இந்திரா காங்கிரஸ் என்றுதானே அங்கீகாரம்
செய்திருக்கிறது என்றேன். இல்லை, இப்போது வழக்கு
முடிந்து விட்டது, காங்கிரஸ் என்று தீர்ப்பு வந்துவிட்டது
என்றார். பிறகு ஏன் உங்களுக்கு காளை மாட்டுச் சின்னமும்,
பசுவும் கன்றும் ஒதுக்கவில்லை என்றேன். அப்போது, நீங்கள்
காங்கிரஸ் (ஐ) என்று சொல்லுங்கள் என்றார், எஸ்.ஆர்.பி.
இது தமிழ்நாடு என்பதால், நான் இந்திரா காங்கிரஸ் என்று
சொல்கிறேன் என்று சொல்லி, பிறகு இன்னொன்றையும்
சொல்லி இருக்கிறார். அந்தப் பகுதியையும் நான் படித்துக்
காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால், நடந்தது, அப்படி
நடக்கவில்லை. முழுவதுமாக திரித்து அதைச் சொல்லியிருக்
கிறார். அவர், இந்திரா காங்கிரஸ் என்று சொன்னவுடனே,
நமது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் டாக்டர்
செல்லக்குமார் அவர்கள் என்று சொன்ன உடனே,—அதற்கு
முன்னாலே நான் ஆட்சேபித்து இருக்கின்றேன்—நீங்கள்
சொல்கிறீர்கள், பேரவைத் தலைவர் அவர்கள், அவர்
ஆட்சேபிக்கின்ற அதையே திரும்பத்திரும்ப சொல்லக்கூடாது,
டாக்டர் குமாரதாஸ், தேர்தல் கமிஷனிலே, இந்திரா காங்
கிரஸ் என்ற போர்வையிலேதான் என்ற உடனே, நீங்கள்
மீண்டும் குறுக்கிட்டுச் சொல்கிறீர்கள். அந்த மாதிரி நீங்கள்
தேர்தல் கமிஷன் சொல்வதை அப்படியே சொல்லவேண்
மானால், காங்கிரஸ் (ஐ) என்று சொல்லுங்கள் என்று
சொல்லியிருக்கிறீர்கள். நான், தமிழ்நாடு என்பதால், தமிழிலே
சொல்லலாம் என்று பார்த்தேன். நீங்கள் ஆங்கிலத்திலே
சொல்லவேண்டும் என்று சொல்லுகிறீர்கள், நான் (ஐ) என்று
சொல்கிறேன் என்று அவர் சொன்னார். உடனே நான் குறுக்
கிட்டுச் சொல்லியிருக்கிறேன். நாங்கள் வேண்டும் என்று
தான் 'ஐ' என்று வைத்துக் கொண்டோமே தவிர,
It is not the Election Commision's rulling, Election Commission'
..ling is Indian National Congress. நாங்களாக வைத்துக்
கொண்டோம் 'ஐ' என்று, அவ்வளவு தான் என்று
நான் குறிப்பிட்டு இருக்கிறேன். பிறகு அவர்
கேட்கிறார், எனக்கு அந்த சப்ஜெக்டுக்கு எல்லாம் போனால்,
நேரம் ஆகிவிடும். இந்த சப்ஜெக்ட்டிலே இந்த விஷயமாக



1992 மார்ச் 13] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

கேரளாவிலே. உன்னிகிருஷ்ணனுடைய காங்கிரஸ் என்று
அதற்கு எல்லாம் நான் நிறைய பதில் சொல்லி இருக்கிறேன்
அதெல்லாம் வேண்டாம் என்று நினைக்கிறேன். பேரவைத்
தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி 1969 ஆம் ஆண்டு
பிளவுபட்டபோது, காங்கிரஸ் (ஆர்), காங்கிரஸ் (ஐ) என்று
அன்றைய மக்கள் சபை சபாநாயகர் அவர்கள், அதற்குப்
பெயரிட்டார்கள். நான் பெயரைச் சொன்னேன். அதை
விட்டுவிட்டார்கள். சபாநாயகர் பெயர். குருதயாள்சிங்
தில்லோன் என்பதைச் சொன்னேன். அதை அவர்கள் விட்டு
விட்டார்கள். அதே பெயரை, அப்படியே எலக்சன் கமிஷன்
முழுமையாக ஏற்றுக்கொண்டது. பிறகு தேர்தல் கமிஷன்,
ஆணையம் அவர்களுடைய தீர்ப்பை, சென் வர்மா அவர்கள்,
தன்னுடைய தீர்ப்பை அறிவித்தார்கள். திரு. ஜெகஜீவன்ராம்
தலைமையிலே இயங்கிக் கொண்டிருந்த காங்கிரஸ் தான்
உண்மையான காங்கிரஸ், இந்தியன் நேசனல் காங்கிரஸ்
என்று அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அப்போதே சில பேர்
கேட்டார்கள், யார் இந்த சென் வர்மா? உண்மையான
காங்கிரஸ் என்று தீர்ப்பு அளிக்க இந்த சென் வர்மா யார்?
மக்கள் தீர்ப்பு அளிக்கட்டும், என்று சொன்னார்கள். 1971-லே
நாடு முழுவதும் மக்கள் தெளிவாக தீர்ப்பை அளித்தார்கள்.
இந்திரா காந்தியின் தலைமையிலே இயங்குகிற காங்கிரஸ்
தான் உண்மையான காங்கிரஸ் என்று 1971 ஆம் ஆண்டு
மக்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே,
உன்னிகிருஷ்ணன் காங்கிரஸ் என்று ஒரு காங்கிரஸ் எப்போதுமே
இருந்தது கிடையாது. தேவராஜ் அர்ஸ் காங்கிரஸ் தனியாகத்
தலைமை தாங்கியபோது, காங்கிரஸ் (யு) என்று வைத்துக்
கொண்டார்கள், என்று நான் தெளிவாகச் சொல்லியிருக்
கிறேன்.

பிறகு, தேர்தல் கமிஷனே, தெளிவாக, 'இந்தியன் நேஷனல்
காங்கிரஸ் என்று எங்களுடைய காங்கிரசுக்கு அங்கீகாரம் அளிக்
கப்பட்டதற்குப் பின்னாலே, நாங்கள் விரும்பி, 'இந்தியன்
நேஷனல் காங்கிரஸ் (ஐ), ஐ.என்.சி. (ஐ) என்று வைத்திருக்
கிறோமே தவிர, தேர்தல் கமிஷனிலோ, அல்லது வேறு
எந்த அடிப்படையிலோ இந்திரா காங்கிரஸ் என்ற பெயரே
கிடையாது. எனவே, இந்தியன் நேஷனல் காங்கிரஸ்
என்றுதான் குறிப்பிடவேண்டும். வேண்டுமானால், காங்கிரஸ்
(ஐ) என்று குறிப்பிடுவதில் எனக்கு ஆட்சேபணை
இல்லை என்று நான் குறிப்பிட்டேன். அதற்குப்பின்னா
லேயும் அவர் விடாமல் பேசியிருக்கிறார். அந்தப்
பகுதியிலேதான் இவ்வாறு அவர் சொல்கிறார். இரட்டைக்
காளைச் சின்னம், பசுவும் கன்றுமாக மாறி, பசுவும் கன்றும்
சின்னம் கைச் சின்னமாக மாறியது என்ற அளவில் தான் அவர்
சொல்லியிருக்கிறார். அதற்கு நான் பதில் அளித்திருக்கிறேன்.
நான் உட்கார்ந்துவிடவில்லை. 'It is with u. All the symbols

are with us. We have freezed them. We have asked the Election Commission to freeze them. It is not for him......'என்று நான் சொன்னவுடனே, இங்கே குறிப்பிடப்பட்ட செய்தி, இந்த விவரங்கள் எல்லாம் வேண்டாம் என்று சொல்லித்தான் நான் இதை விட்டிருக்கிறேனே தவிர, அவர் சொல்வதைப் போல பசுவும் கன்றும் என்னவாயிற்று, காளை மாட்டுச் சின்னம் என்னவாயிற்று என்று சொன்னவுடனே வாயடைத்துப் போய் உட்கார்ந்து விட்டேன் என்பதைப் போல எழுதியிருக்கிறார். அது தவறு. இதில் சட்டப் பேரவையில் நடைபெற்ற ஒன்றை திரித்துச் சொல்லியிருக்கிறார். அத்தோடு நின்று இருந்தால் கூட பரவாயில்லை.

முற்பகல் 10-50

இந்திரா அம்மையார் உயிரோடு இருந்திருந்தால் இந்திரா காங்கிரஸ் என்று சொல்வதை எதிர்த்திருப்பாரா எஸ்.ஆர்.பி. என்று எண்ணிப் பார்த்தேன் என்று சொல்கிறார். இது என்னுடைய செய்கைக்கு, இங்கே நான் பேசிய பேச்சுக்கு உள்நோக்கம் கற்பிப்பதுபோல் இருக்கிறது. ஏனென்று சொன்னால், இந்திராகாந்தி அம்மையார் அவர்களிடத்திலே நான் வைத்திருந்த மரியாதை அனைவரும் அறிந்த ஒன்று. அதுமட்டுமல்ல, அந்த அம்மையார் எவ்வளவு பெரிய தலைவி? எனக்கு அன்னையைப் போல இருந்தவர். என்னிடத்திலே வைத்திருந்த பற்றையும் பாசத்தையும் என்னுடைய வாழ்நாளில், அவர் இறந்து 7 ஆண்டுகளானாலும்கூட, என்னுடைய வாழ்நாளில் எந்தக் கட்டத்திலேயும் என்னால் மறக்கமுடியாத ஒன்று என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதில் உள்நோக்கத்தோடு, உள்நோக்கம் கற்பிக்கும் எண்ணத்தோடு அவர் சொல்லியிருக்கிறார்.

அதே போன்று எந்தக் கட்டத்திலேயும்—அரசின் புதிய கொள்கை அச்சடிக்கப்பட்டு, அதை தாக்கல் செய்யத் தயாராக இருக்கிறது என்ற பிரச்சினை வரும் போது அவர் குறிப்பிட்டிருக்கிற சொல்—இதை உரிமை மீறல்தான் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லக்கூடும். இருந்தாலும் புதிய தொழில் கொள்கையை வைத்துக்கொண்டு இப்போதே தாக்கல் செய்கிறேன் என்றார் முதல்வர். எதிர்க்கட்சித் தலைவரான நான் இதைக் கூட உரிமை மீறல் என்று ஆட்சேபிக்கவில்லையெனில், எல்லோரும் என்னை ஏளனம் செய்வார்கள் என்றதும் சபையில் சிரிப்பலை எழுந்தது என்பதும் எந்த கற்பனை உலகத்திலே அவர் வீற்றிருந்தாரோ என்பது எனக்குத் தெரியவில்லை. எந்தக் கட்டத்திலேயும் நான் அந்தச் சொற்களைப் பயன்படுத்தவே இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியவுடனே, அவர் பேச்சில் நான் குறுக்கிட்டு, உறுப்பினர்களுக்கும் விநியோகிக்கப்படவேண்டுமென்று நான் உத்தரவிடுகிறேன் என்று மாண்புமிகு



முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உடனே, நான் எழுந்து சொன்னேன்.—''மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மரபைத்தான் சுட்டிக்காட்டினேன் என்றாலும் எந்தச் சூழ்நிலையில் அது வெளியிடப்பட்டது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவருடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றாலுங்கூட, வருங்காலத்தில் பொதுவாக சட்டப் பேரவைக் கூட்டம் கூடுவதற்கான அறிவிப்பை வெளியிட்டதற்குப் பின்னால், புதிய கொள்கை எதுவாக இருந்தாலும், இயன்ற வரையில் இந்த அவையிலேவைக்கவேண்டுமென்ற மரபு இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக் காட்டினேன். முதலமைச்சருடைய விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' அது ஒன்று. அதற்குப் பின்னாலே நீங்கள் குறுக்கிட்டுப் பேசியிருக்கிறீர்கள். ஒரு வேளை இந்தப் பகுதியைப் பற்றி அவர் சொன்னாலும்கூட, அதிலேயும் அந்தச் சொல்லே கிடையாது.

''மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிச்சயமாக உரிமை மீறல் என்று அதை இங்கே குறிப்பிடவில்லை. மரபை சுட்டிக்காட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. எனவே, நான் மரபை சுட்டிக்காட்டினேன். அவர் விளக்கத்தை நான் ஒப்புக்கொண்டுவிட்டேன். எனவே, இது போன்ற இன்றியமையாத நேரங்களில் இப்படி நடக்கும் என்று நீங்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் ஏற்றுக் கொள்வதால்தான் மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன். முதலமைச்சருடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நான் சொல்லவில்லை. முதலமைச்சருடைய விளக்கத்தை நான் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு விட்டேன். ஆனால், இதைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடமையும் எனக்கு இருக்கிறது. பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்கின்ற நேரத்தில், இதைக்கூட சுட்டிக்காட்டாமல் நீங்கள் இருக்கிறீர்களே என்று யாரும் என்னை சொல்லிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. ஆகையால் சுட்டிக்காட்டினேன் என்ற விளக்கத்தை முழுமையாக நான் ஏற்றுக்கொள்கிறேன். இதற்கும் அந்தச் சொற்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? 'எதிர்க்கட்சித் தலைவரான நான் இதைக்கூட உரிமை மீறல் என்று ஆட்சேபிக்கவில்லையெனில் எல்லோரும் என்னை ஏளனம் செய்வார்கள் என்ற சொற்கள் எங்கேயிருக்கின்றன ? இதிலே '' சிரிப்பு '' என்று ஒரு சொல் வந்திருக்கிறது. அது ஏன் வந்திருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்று சொன்னால், அதிலே சிரிப்பு என்று வருவதை வைத்துக் கொண்டு, வெளியிலே எல்லோரிடமும் சொல்கிறாராம், அப்படித்தான் இருக்கிறது, இருக்கிறது என்று இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறாராம். நிச்சயமாக இது போன்ற சொற்கள் அதிலே இல்லவேயில்லை. இதில் அவர் சொல்லி

யிருக்கிற 7, 8 சொற்களில் ஒரு சொல் கூடகிடையாது. எனவே, வேண்டுமென்றே என்னுடைய நடவடிக் கைகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையில், தாழ்த்திப் பேசுகின்ற வகையிலே அவர் இதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். நிச்சயமாக இது அவை உரிமையை மீறிய செயலாகும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இதேபோன்று இப்படி சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசி அவையின் நேரத்தை வீணடிக்கிறார் முதல்வர் என்றும் சொல்லி யிருக்கிறார். ஆக, ஒருவர் பேசுவதை அவையின் நேரத்தை வீணடிப்பதாக வெளியிலே சொல்வது என்பது அவையினுடைய உரிமையை மீறிய செயலாகும் என்பதைத் தாங்கள் அறிவீர் கள். அதையும் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அது மட்டுமல்ல, இந்தக் கூட்டத் தொடரில் நான் கொண்டுவந்த கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானங் களின் நிலை இன்று வரை எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. இதுவும் விதிகளுக்கு முரணானது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

முற்பகல் 10–55

ஆக உங்களுடைய செய்கைகளுக்கு அவர்கள் வெளியிலே போய் உள்நோக்கம் கற்பிக்க முயற்சிப்பது என்பது நிச்சயமாக அவையி னுடைய உரிமையை மீறிய செயலாகும். ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிற சில தீர்ப்புகளை மட்டும் நான் உங்களுடைய கவனத் திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். 1950 ஆம் ஆண்டு 'Provisional Parliament'. 'Reflection on the Impartiality of the Speaker' அதிலே ஒன்றும் நான் அதிகமாகச் சொல்லவில்லை. "The Amrita Bazar Patrika, Calcutta, in its issue, dated the 3rd March 1950, published an editorial under the heading, 'M.P.'s Privilege', which cast reflection on the impartiality of the Speaker in connection with a Ruling given by him, disallowing two adjournment motions..'. அதேபோல 2 ஒத்தி வைப்புத் தீர்மானங்களைத், தள்ளுபடி செய்துவிட்டார். அதை அந்தப் பத்திரிகை குறிப்பிடும்போது, 'Unless the privilege of a member of Parliament has been drastically curtailed under the new Indian Constitution, of which we do not profess expert knowledge, Speaker Mavalankar's ruling on the subject of externment from Delhi of Prof. Shibban Lal Saxena, a sitting member of the Indian Parliament is open to grave objection'. அடுத்த பகுதி அப்படியே நம்முடைய சபையிலே என்ன நடைபெறுகிறதோ அதுதான் நடைபெற வேண்டும் என்று மாவ்லங்கர் அங்கே சொல்லியிருக்கிறார்கள். 'நான் பம்பாயிலே சபாநாயகராக இருந்து இருக்கிறேன். இருந்த போது நான் முன் உதாரணமாக நடவடிக்கைகள் சில எடுத் திருக்கிறேன். யார் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று சொன்னாலும் சபாநாயகரை நேரில் வந்து பார்க்கவேண்டும். அவரோடு விவாதிக்க வேண்டும். நான் அதை ஏற்றுக்கொண்டேன் என்று சொன்னால் ஒழிய சட்டப் பேரவை





யிலே அதைக் கொண்டு வர முடியாது' என்று அதிலே தெளிவாக இருக்கிறது. அதை இப்போது முழுவதும் படிக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். நிறைய இருக்கிறது. தேவைப்பட்டால் படித்துக் கொள்ளலாம். 'Mr. Mavalankar's further citation of the Bombay precedent....' என்று ஆரம்பித்து அதிலே விமர்சித்து இருக்கிறார். அதற்குப்பின்னாலே அவர் அளித்த விளக்கத்தை சபாநாயகர் ஏற்க வில்லை.

'I assure you no such reflection was meant or could be meant, by the article in question. The wording of some comments, I recognise with regret, was unnecessarily strong ; I am very sorry the article was not more moderate in tone.' லேசான வருந்தம் தெரிவித்தால் அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று சபாநாயகர் சொல்லிவிட்டார்.

'Speaker was, however, not satisfied with this expression of regret and suggested to the Editor of the Amrita Bazar Patrika the advisability of correcting in the next issue of his paper the misrepresentation 'as a matter of journalistic propriety and truthfulness,' என்று எழுதுகிறார். அதற்குப் பதில் வருகிறது.

"....We regretfully discover now, we were unfair in our judgment over the ruling of the Speaker of Parliament, Shri Mavalankar. We consider it our duty to correct ourselves insofar as it may tend to reflect on the Speaker's judgement, now that fasting episode is over and Prof. Saxena's full right of membership of Parliament restored", என்று அவர் வருத்தம் தெரிவித்து சமாதானம் சொல்கிறார், அதற்குப் பின்னாலே 1980 ஆம் ஆண்டு (மணியடிக்கப்பெற்றது) இது அவசியம் வேண்டும் என்பார் நாளைக்கு. அதனால் தான் சொல்லுகிறேன், அதே மாதிரி அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொண்டு வந்திருக்கிறார்கள், ஜார்ஜ் பெர்னான்டஸ். ராம் விலாஸ் பாஸ்வான். சாமர் முகர்ஜி. ஜோதிர்மாய் பாசு. மது தண்டவதே, இந்திரஜித் குப்தா இவர்கள் எல்லாம் கொண்டு வந்ததை வைத்துக் கொண்டு. ராம் விலாஸ் பாஸ்வான் பத்திரி கைக்கு ஒரு செய்தி கொடுக்கிறார், சபாநாயகர் அளித்த தீர்ப்பை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது, ஒரு தலைப் பட்சமானது என்று குறிப்பிடுகிறார், அதற்குப் பின்னாலே அதுவும் தவறானது என்று சொல்லி ஆ,என்,ஐ' மன்னிப்புக் கோரி இருக்கிறது, அதுமட்டும் அல்லாமல். "The unqualified apology tendered by Shri Ram Vilas Paswan may be accepted and the matter may be treated as closed". அவர் மன்னிப்பு கேட்டதற்குப் பின்னாலே அந்தப் பிரச்சினை கைவிடப்பட்டிருக்கிறது. அதே போல மிக முக்கியமான ஒரு பிரச்சினை, ஹரியானா விதான் சபாவிலே 1973 ஆம் ஆண்டு, அன்றைக்கு விதான் சபாவிலே உறுப்பினராக இருந்த சௌத்திரி ஹரித்துவாரி லால் அவர்கள் ஒரு புஸ்தகம் எழுதினார்.

"A Chief Minister Runs Amuck—Indian Democracy in Danger" என்கிற புஸ்தகத்திலே அவர் சொல்வது எல்லாம் சபாநாயகருக்கு எதிராக. தரக் குறைவாக எழுதியிருக்கிறார், சபாநாயகர் முதலமைச்சருக்கு வேண்டியவராக. முதலமைச்சருக்கு அனுசரணையாக நடந்து கொள்கிறார் என்று எழுதியிருக்கிறார், அதே போல சட்டப் பேரவையிலே உள்ள உறுப்பினர்கள் பற்றி முதலமைச்சர் சொல்வதை எல்லாம் கேட்பவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார், இந்தப் பிரச்சினையில் அவருக்குக் கடைசியாக வழங்கப்பட்ட தண்டனை சட்டப்பேரவையிலிருந்து அவரை விலக்கி வைத்தார்கள், He was expelled from the House. அதேபோல கடைசியாக. 'Facts from the case in reference"—நமது அண்டை மாநிலமான கேரளாவிலே இது போன்ற ஒரு பிரச்சினை வருகிறது, சபாநாயகர் பங்களாதேஷிலே நடைபெற்ற சம்பவம் பற்றி விவாதிப்பதற்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வர அனுமதி மறுத்து விடுகிறார், அதிலேயும்கூட உள்நோக்கம் கற்பிப்பதாக அந்தத் தலையங்கம் இருக்கிறது என்று கூறி அந்தத் தலையங்கத்தை எழுதிய ஆசிரியரையும் வெளியீட்டாளரையும் சபையின் முன்னாலே அழைத்து கண்டனம் தெரிவித்தார். (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேற்கொண்டு விளக்கங்களை எல்லாம் ரெஃபர் பண்ணி பிறகு பார்க்கவேண்டியது. அவர் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களில் இருக்கின்ற முரண்பாடுகளை மட்டும் நீங்கள் தெரிவித்தால் போதும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, அதேமாதிரி ஆண்டனியினுடைய கேஸிலே என்ன சொல்கிறார்கள் என்றால் ஒரேஒரு வார்த்தை அதிகமாகப் போட்டு பப்ளிஷ் பண்ணினார்கள். "ஃபிசிக்" என்கின்ற பயன்படுத்தாத வார்த்தையை மட்டும் போட்டு பண்ணினது தவறு என்று கருதப்பட்டு, அதற்காக அந்தப் பத்திரிகை மன்னிப்பு கோரியிருக்கிறது. அதே போல நிறைய வழக்குகளைச் சொல்லலாம்.

"Misrepresentation of a Member's speech and, thereby, creating reflection on another membe:

தாரகேஸ்வரி சின்ஹா போன்ற நிறைய வழக்குகள் இருக்கின்றன. ஒரே ஒரு வார்த்தை "In May's Parlimentary Practice" சொல்லப்பட்டிருப்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

"Analogous to the publication of libels upon either House in the publication of false or perverted or a partial and injurious report of debates and proceedings of either House or Committees of either House or misrepresentation of the speeches of particular Members. . . ."



என்று சொல்லியிருக்கிறார்கள். நிறைய வழக்குகளிலே தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

"Publishing a false report of the proceedings of the House of Lords; publishing a baseless misrepresentation of what has passed in either house and what has been said in a debate (Brown and Kelsington); Publishing a gross and wilful misrepresentation of particular Member's speeches (Mathew's case) என்று நிறைய வழக்குகள் வந்திருக்கிறது. நான் இப்போது குறிப்பிடுவதெல்லாம் அவர் வேண்டுமென்றே (குறுக்கீடு) அவரே சொல்கிறார் வேண்டுமென்றே திரித்து என்று சொல்லுங்கள் என்று சொல்கிறார். சரி. வேண்டுமென்றே திரித்தும்' சிதைத்தும் கூறியதன் மூலமாக தன்னுடைய உரிமையைத் தவறாக பயன்படுத்தி இருப்பதோடு அவையின் உரிமையையும், என் போன்ற மன்ற உறுப்பினர்களின் உரிமையும் மீறியிருக்கிறார். சபாநாயகருக்கு உள் நோக்கம் கற்பிப்பதன் மூலமாக சபையின் உரிமையை மீறியிருக்கிறார். முதலமைச்சரின், மற்ற உறுப்பினர்களின், சபையின் உரிமையை மீறியிருக்கிறார். எனவே, இந்தப் பிரச்சினை குறித்து முழுவதுமாக விசாரித்து பேரவையின் உரிமை மீறல் குழுவிற்கு நீங்கள் இந்தப் பிரச்சினையை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவையின் இன்னொரு உறுப்பினர் பற்றிய பிரச்சினையாக அமைந்துள்ளதால் விதியின்படி அப்படிப்பட்ட உறுப்பினருக்கும் விளக்கம் அளிக்க வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று விதி உள்ளது. எனவே டாக்டர் குமாரதாஸ் அவர்கள் இதுகுறித்து ஏதேனும் கூற விரும்பினால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் உங்களுடைய விளக்கத்தை, உங்களைப்பற்றி அவர் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களுக்கு மட்டும் உங்களுடைய விளக்கம் ஏதேனும் இருந்தால் அதை நீங்கள் கூற விரும்பினால் கூறலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்ற போது தயவுசெய்து யாரும் குறுக்கிடாமல் என்னுடைய பேச்சு முழுவதையும் கேட்டு, அதற்குப் பிறகு நீங்கள் நீதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச்சு என்பது அல்ல உங்களைப் பற்றி—நீங்கள் எழுதியதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்களே அதன் மீது மட்டும் உங்களுடைய விளக்கம் இருந்தால் சொல்லுங்கள். அதுவும் சுருக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. மேற்கொண்டு வருவதெல்லாம், இது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டால் அங்கே வந்து நீங்கள் விளக்கம்

அளிக்க வேண்டிய பிரச்சினை. உங்களைப் பற்றி சில கருத்துக்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு மட்டும் உங்களுடைய பதில் இருக்க வேண்டும். அதைத் தாண்டி எங்கேயாவது போனால் குறுக்கீடு உறுப்பினர்களிடத்திலேயிருந்து வரும் என்பதைவிட, பேரவைத் தலைவரிடத்திலேயிருந்தே வரும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே நமது மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கிட்டத்தட்ட 1 மணி நேரம்(குறுக்கீடு) ½ மணி நேரம் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலேயே திசைமாறிப் போகிறீர்களே?

டாக்டர் தே. குமாரதாஸ் : மணி பார்ப்பதில் வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது. வேறு ஒன்றும் குழப்பம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11—04 என்பது உங்கள் கண்களுக்கு 11-40 என்று தெரிந்திருக்கிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : என்னுடைய விளக்கத்திற்கு வருகிறேன். முதலாவதாக எட்மண்ட் பர்க் என்கிற இங்கிலாந்து நாட்டினுடைய பாராளுமன்றத்து முன்னோடி ஒருவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்திலே அவர் குறிப்பிடுகின்றபொழுது என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் தோழமைக் கட்சியாக இருப்பவர்கள் பாராளுமன்றத்திற்குள்ளாக எதிர்க்கட்சியாகச் செயல்பட முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆக இன்றைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தோழமை வைத்திருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸ் கட்சி (குறுக்கீடு) திருத்திக் கொள்கிறேன் காங்கிரஸ்—ஐ அல்லது காங்கிரஸ் இ ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேர்தல் கமிஷனலிருந்து இந்திய தேசியக் காங்கிரஸ் என்றுதான் பேரவைக்கு அறிவிப்பு வந்திருக்கிறது. அவர்கள் நீங்கள் வேறுவிதமாக அழைப்பதஆட் சேபிக்கிறார்கள்.

முற்பகல் 11-05

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே. காங்கிரஸ் (இ) என்று அழைப்பதை அவர்கள் எதிர்க்கிறார்களா ?





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. நீங்கள் தயவு செய்து உங்களைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்து இருக்கிற அந்தக் கருத்துக்கு மட்டும்தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர வேறு எங்கேயாவது சென்றால் உங்களுடைய வாய்ப்பை நீங்கள் இழந்தவர் ஆவீர்கள்,

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை. இல்லை. தலைவர் அவர்களே, அப்படி சொல்லிவிடக் கூடாது, நான் தனியாக நின்று பேசுகிறேன் (குறுக்கீடு). இப்போது மரியாதைக்குரிய காங்கிரஸ்-ஐ கட்சியினுடைய தலைவர் அவர்கள் ' ஐ ' என்று குறிப்பிடுவதை விரும்பவில்லை. அப்படித்தானே, (குறுக்கீடு) எனக்கும் விவரங்கள் தெரிந்து ஆக வேண்டும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இப்போது என்ன நடக்கிறது என்பது பிரச்சினை அல்ல, நீங்கள் எழுதியிருக்கிற சில எழுத்துக்களுக்கு அவர்கள் இங்கே தன்னுடைய உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள், அதிலே நீங்கள் எந்த சந்தர்ப்பத்திலே எழுதினீர்கள் : என்ன எழுதினீர்கள் என்று சொன்னால் பரவாயில்லை,

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கேயோ இருந்து ஆரம்பித்து வந்தீர்கள், முதலில் இங்கேயிருந்து இங்கிலாந்துக்குப் போகப் பாருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் முதலாவதாக சொன்னது போல் எட்மண்டு பர்க் அவர்களுடைய குறிப்புரையில் தோழமைக் கட்சியாக இருப்பவர்கள் எதிர்க்கட்சியாக இருக்கக் கூடாது என்று ஒரு குறிப்புரையைச் சொல்லியிருக்கிறார், இது நடைமுறையில் நமது பாராளுமன்றத்தில் கடந்த முறை நடந்து இருக்கிறது, அதை உங்களுடைய கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். எப்படி என்று சொன்னால் ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்,

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய சட்டமன்ற விதியில் ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் எழுப்பாத ஒரு பிரச்சினைக்குத் தோழமைக் கட்சியா ; எதிர்க்கட்சியா ; என்று எழுப்பாத ஒரு பிரச்சினையை எழுப்ப ஆரம்பித்தீர்கள்,

[1992 மார்ச் 13

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : ஆமாம். சட்டமன்ற
P தி, 2 கே, "Leader of the Opposition means leader of a Legislature
arty having the largest number of Members other than the party
which has formed the Government and having more than the
quorm strength prescribed and recognised by the Speaker as such
என்று தெளிவாக இருக்கிறது, எனவேதான் எதிர்க்கட்சியாக.
எதிர்க்கட்சித் தலைவராக நான் இருக்கிறேன் (மேசையை
தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எதிர்க்
கட்சி. தோழமைக் கட்சி என்கிற வாதம் உரிமைப் பிரச்சினை
யிலே வராதது, அதற்கு இப்போது விளக்கம் நீங்கள் தர வேண்
டியது இல்லை. உரிமைப் பிரச்சினையில் அதாவது உரிமைக்
குழுவுக்கு அனுப்பப்பட்டால் அப்போது நீங்கள் வந்து சொல்ல
வேண்டிய சில விளக்கங்கள். இப்போது உங்களைப் பற்றி இந்த
அவையில் தெரிவிக்கப்பட்ட, நீங்கள் சொன்னதாகத் தெரிவித்த
கருத்துக்களுக்கு மட்டும் உங்களுடைய விளக்கம் தேவை. அதைச்
சுருக்கமாகச் சொல்ல வேண்டும்; சீக்கிரம் சொல்லி முடியுங்
கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : எனக்கு ஒரு ஆப்பர்சூனிட்டி
கொடுங்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஆப்பர்சூனிட்டி
தான் கொடுத்தேன். நீங்கள் அதைத் தவறாகப் பயன்படுத்து
கிறீர்களே.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே. இப்
போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விதியை வாசித்தார்
கள். ஏற்றுக் கொள்கிறேன், முன்னாள் பாரதப் பிரதமர் திரு.
சந்திரசேகர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள், அவர்
ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் காங்கிரஸ்-ஐ கட்சியி
னுடைய.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் தன்னிலை
விளக்கத்தில் வராதவை (குறுக்கீடு), இல்லை. உரிமைப் பிரச்
சினையில் தோழமைக் கட்சியா, எதிர்க்கட்சியா என்பது வர
வில்லை, (குறுக்கீடு). எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய உரிமைப்
பிரச்சினையில் தோழமைக் கட்சி; எதிர்க்கட்சி என்பது எல்லாம்
வரவில்லை. நீங்கள் சொன்னதாகத் தெரிவித்த கருத்து
களுக்கு மட்டும் தன்னிலை விளக்கம் அளிக்கலாம், (குறுக்கீடு),

டாக்டர் தே. குமாரதாஸ் : விளக்கம் அளிக்கிறேன்.



1992 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; விளக்கத்திற்கு விளக்கம்
என்று போய்க் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) அவர் எழுப்பிய
உரிமைப் பிரச்சினைக்கு மட்டும் நீங்கள் கருத்து தெரிவிக்கலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : என் சம்பந்தப்பட்ட பிரச்சினை
நான்தான் பதில் சொல்லியாக வேண்டும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் உரிமைப் பிரச்சினை ஒன்றை, மாண்புமிகு
உறுப்பினர் திரு: குமாரதாஸ் அவர்கள்மீது கொண்டு வந்திருக்
கிறார்கள், அவர்கள், ஏட்டிலே இப்படி இப்படி எழுதியிருக்கிறார்,
என்று குறிப்பிட்டுள்ளார். இவை இந்த இந்த வகைகளிலே உரிமை
மீறல் ஆகும் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அந்த ஏட்
டிலே மாண்புமிகு உறுப்பினர் எழுதினார்களா? இல்லையா? அவர்
கள் எண்ணி எழுதினார்களா ? இல்லையா? அல்லது அது உரிமைப்
பிரச்சினை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுகிறார். அது
உரிமைப் பிரச்சினையா ? இல்லையா ? என்ற அளவோடு தன்
னுடைய முடிவு இருக்க வேண்டுமே ஒழிய வேறு வகைகளுக்குப்
போக வேண்டிய அவசியம் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, எனக்கு
முன்னால் மரியாதைக்குரிய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் பேசு
கின்றபோது பல சட்டமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை
இங்கே கூறி, எக்ஸ்பல் பண்ணியிருக்கிறார்கள். எனவே, குமார
தாஸுக்கும் அதைக் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பின் நகல்
களை இங்கே உங்கள் முன்னால் கொண்டு வந்து சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அவர் சொன்
னதற்கு நீங்கள் பதில் சொல்லலாம். நான் தவறு செய்ய
வில்லை. (குறுக்கீடு). என்னை வெளியேற்ற வேண்டிய அவசியம்
இல்லை என்று நீங்கள் வாதாடலாம், அதற்குத்தான் வரவேண்டு
மே ஒழிய அவர் எழுப்பாத ஒரு பிரச்சினைக்கு எதிர்க்கட்சி
என்பது என்ன ?.....

டாக்டர் தே. குமாரதாஸ் : அவர் எழுப்பவில்லை என்
றாலும் நாட்டுக்கு முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது உங்களுக்குச்
சொல்லிவிடுகிறேன், உங்களுக்கு எந்த அளவுக்கு அதில் லிமிட்
இருக்கிறது. என்பதையும் சொல்லிவிடுகிறேன், ஸிதி என்ன

வென்று சொன்னால். இன்னொரு உறுப்பினர் பற்றிய பிரச்சினை இங்கே உரிமை பிரச்சினையாக எடுக்கப்படுவதற்கு அனுமதிக்கப் படுமானால். provided further that the Speaker may give an opportunity to the Member against whom the matter is sought to be raised, to briefly explain this case.

'May give' என்றுதான் இருக்கிறது. 'May give" என்பதி லிருந்தே "May not give" என்பதும் அடங்கும். அதை மனதிலே வைத்துக் கொண்டு பேசுங்கள்.

முற்பகல் 11.10

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நியாயத்தின் அடிப்படையில் நடக்கின்ற பேரவைத் தலைவர் என்பது அனைவருக்கும் தெரியும். எனவே அந்த ஆப்பர்சூனிட்டி எங்களுக்கும் கொடுக்கப்படும் என்பதும் எங்களுக்குத் தெரியும். என்னுடைய விவாதம் என்னவென்று சொன்னால் நான் இந்த உரிமை மீறலுக்கு வருவதற்கு முன்பாக இதற்கான பதிலை உங்களுக்கு நான் சொல்லியாக வேண்டும். ஏனென்று சொன்னால் 192 காங்கிரஸ் (ஐ) உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருந்த நேரத்தில் 66 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட சந்திரசேகர் அவர்களை பிரதம ராக மாற்றி அங்கே 192 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டவர்கள் எதிர்க்கட்சியாக இருக்கவில்லை. மாறாக அந்த ஆப்பர்சூனிட்டி 86 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட எல். கே. அத்வானி அவர்களுக்குத்தான் வழங்கப்பட் டிருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், தோழமைக் கட்சியாக இருக்கிறவர்கள் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்க முடியாது என்பதற்கு முன் உதாரண மாக . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும்கூட அந்த நேரத்திலே நாடாளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தவன். அந்த 66 உறுப்பினர்களைக் கொண்ட திரு. சந்திரசேகர் அவர்களைப் பிரதமராக ஆக்குவதற்கு தங்களுடைய ஆதர வையும் வழங்கிய கட்சி என்கிற காரணத்தினாலே அவர்கள் எதிர்க்கட்சியாக அன்றைக்கு அமரவில்லை. இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய கட்சி உறுப்பினர்களுடைய ஆதரவோடு ஆட்சி அமைப்பதற்கு எழுதித் தரவில்லை. அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் உரிமைப் பிரச்சினைக்குச் சம்பந்த மில்லாத விவாதத்திற்குப் போய்க்கொண்டு இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் ஆரம்பிக்கிறபோதே தெரிந்து கொண் டேன். எனவே, நேரடியாக, உங்கள்மீது வந்திருக்கிற



உரிமைப் பிரச்சினைக்கு, உங்கள் மீது கூறப்பட்டுள்ள சில குற்றச்சாட்டுகளுக்கு பதில் எதுவும் இருந்தால் நீங்கள் தெரிவிக்கலாம். அதைத் தெரிவிக்காமல் வேறு விவாதத் துக்குச் சென்றால் நீங்கள் பதில் எதுவும் சொல்ல விரும்ப வில்லை என்று கருதி நான் வேறு அலுவலுக்குச் செல்ல வேண்டி வரும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமாரதாஸ் எங்களைக் குற்றம் சாட்டியிருக்கிறார் ; முதலமைச்சரைச் சொல்லியிருக்கிறார் என்று . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ' நான் சொன்னேன்' அல்லது " சொல்லவில்லை " அவ்வளவுதான் இதிலே வர வேண்டும். இதிலே விளக்கம் அளிக்கவேண்டிய இடமெல்லாம் வேறு. இது அல்ல.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் என்பது, அது மத்திய அரசாங்கம் ஆனாலும் சரி, மாநில அரசாங்கம் ஆனாலும் சரி, அரசாங்கம் அரசாங்கம்தான். அதிலே, தோழமை கொண்டு இருக்கிறவர்கள் என்று வருகிறபோது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தோழமைக் கட்சி என்பது இதிலே வரவில்லை. நீங்கள் அடுத்த பிரச்சினைக்குச் செல்கிறீர்கள். உங்கள் மீது இருக்கிற பிரச்சினைக்கு நீங்கள் பதில் சொல்ல இருக்கிறீர்களா, இல்லையா? மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற பிரச்சினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரிமைப் பிரச்சினை ஒன்று கொண்டு வந்து, இன்னின்ன வகைகளிலே உரிமை மீறல் இருக்கிறது என்று கோடிட்டு பட்டியல் போட்டுக் காட்டினார்கள். தோழமைக் கட்சி எப்படி இருக்க வேண்டும் ; அதனுடைய இலக்கணங்களெல்லாம் எப்படி இருக்க வேண்டும் ; எப்படி நடக்க வேண்டும் என்பது பற்றிய விவாதம் இப்போது நடைபெறவில்லை. இதில் உரிமைப் பிரச்சினை இருக்கிறதா ; இல்லையா ? ஏற்றுக்கொள்கிறாரா ? இல்லையா ? அதற்குத்தான் பதில் வேண்டும். அதற்குப் பிறகு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உரிய முடிவை எடுப்பார்கள்.

[1992 மார்ச் 13

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது என் மீது கொடுக்கப்பட்டிருக்கிற உரிமை மீறல் பிரச்சினைக்கு, அதில் என்ன இருக்கிறது என்பதை நானும் தேடிப் பார்க்கிறேன். இதிலேதான் ஒற்றுமை ரொம்பப் பெரியதாக இருக்கிறது. மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களை, உங்களை, சபை உறுப்பினர்களை, மரியாதைக்குரிய உறுப்பினர் சண்முகம் அவர்களை, எல்லோரையும் சேர்த்து இதிலே கொடுத்து இருக்கிறார்கள். தனித்தனியாக எல்லோருமே கொடுத்திருக்கலாம். அப்படி அவர்களுக்குப் பாதிப்பு என்று தெரிந்திருந்தால் . . . . .

மர்ண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுப்பது, கொடுக்காதது என்பது அவரவர்களுடைய, உறுப்பினர்களுடைய விருப்பம். கொடுத்திருக்கலாம் ; கொடுத்திருக்கக்கூடாது என்பதையெல்லாம் நீங்கள் சொல்லவேண்டாம். அடுத்து, என்னுடைய தீர்ப்புரையைச் சொல்லவேண்டி வரும். அதாவது நீங்கள் எங்கே போகிறீர்கள் என்றால், இதிலே சம்பந்தமில்லாத பிரச்சினைகளுக்கெல்லாம், நீங்கள் வாதம் செய்ய போகிறீர்களே தவிர, உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்த மறுக்கிறீர்கள் என்றுதான் பொருள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அவர் முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள். குமாரதாஸ், நீங்கள் நேரடியாக உங்கள் மீது இருக்கிற குற்றச்சாட்டுக்குப் பதில் எதுவும் சொல்ல விரும்பினால் சொல்லலாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கின்ற சொல்லினை இங்கே சொல்லியிருக்கிறார்கள். கடந்த மாதம் 7-ஆம் தேதி நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரையிலே இந்த விவாதம் வருகிறது.

அந்த விவாதத்திலே, இதைக்கூட நான் சுட்டிக் காட்டவில்லை என்று சொன்னாலே எல்லோரும் சிரிப்பார்களே (குறுக்கீடு) நீங்கள் அந்த டிபேட்டிலே இருந்து எடுத்துப் பாருங்கள்.. அதிலே பிராக்கெட்டிலே சிரிப்பு. அப்பொழுது சபையே சிரிப்பொலியிலே அமர்ந்திருக்கிறது என்பதற்கு உதாரணம்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அவையினுடைய புரொசீடிங்ஸை தப்பாகச் சொல்லக் கூடாது. சிரிப்பார்களே என்று அவர் சொல்லவில்லை.



1992 மார்ச் 13]

டாக்டர் தே. குமாரதாஸ் : அவையே சிரித்தது என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதோடு இருக்கலாம். அவர் சொன்னதாக, சிரிப்பார்களே என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார் என்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். அதைத்தான் அவர் சுட்டிக்காட்டினார்.

டாக்டர் தே. குமாரதாஸ் : டிபேட்டைப் பாருங்கள். இதைக் கூட நான் கன்டெம் பண்ணவில்லை என்று சொன்னால் நாளைய தினம் எல்லோரும் கிண்டல் பண்ணுவார்களே என்ற (குறுக்கீடுகள்) அந்த சென்ஸ் தான் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்ஸ் வருவது இதெல்லாம் கிடையாது. ரெக்கார்டு இருக்கிறது. அந்த ரெக்கார்டை எடுத்துப் படித்திருக்கிறார். இது, உங்களுடைய சென்ஸ், இதெல்லாம் தேவையில்லை. (குறுக்கீடு) இல்லை. இதில் மேற்கொண்டு என்னுடைய தீர்ப்பை இதன்மீது பின்னர் வழங்குகிறேன். இப்பொழுது நீங்கள் அமரலாம். (குறுக்கீடு) நீங்கள் விவாதத்திற்குள்ளேயே போக மாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் எழுத்து மூலமாகத் தரலாம். . உங்களுக்கு விளக்கம் கேட்டு அனுப்பப்படும். இந்த அவைக்குள்ளே நீங்கள் தெரிவிக்க வேண்டிய கருத்துக்களுக்கு உங்களுக்கு வாய்ப்பு அளித்தேன். நீங்கள் அதைப் பயன்படுத்தவில்லை. எனவே, என்னுடைய தீர்ப்பை பின்னர் வழங்குகிறேன். நீங்கள் ஏதேனும் தெரிவிக்க விரும்பினால் எழுத்து மூலம் எனக்குத் தெரிவிக்கலாம்.

1992–93 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது விவாதம். திரு. பி. வி. இராஜேந்திரன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : எனக்கு வாய்ப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாய்ப்பு கொடுத்தாகி விட்டது. வாய்ப்பு கொடுத்து, அதைப் பயன்படுத்தவில்லை என்னும்போது என்ன செய்வது? திரு. பி. வி. இராஜேந்திரன். (குறுக்கீடு) பேரவையின் நேரத்தை வீணடிக்க முடியாது. இதில் உங்களோடு சேர்ந்து நானும் வீணடிக்க முடியாது. இது ஒரு உறுப்பினருக்குக் கொடுக்க வேண்டிய வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்கிற வகையில் அளிக்கப்பட வேண்டிய அளவிற்கு உங்களுக்கு வாய்ப்பு அளித்தாகி விட்டது. இதை நீங்கள் பயன்படுத்தவில்லை. நீங்கள் என்னென்ன சொல்ல வேண்டுமோ அத்தனையையும் எழுத்து மூலம் கொடுக்கலாம் திரு. பி. வி. இராஜேந்திரன்.

[1992 மார்ச் 13

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (குறுக்கீடு) தற்போது என்னுடைய உரிமையையும் அவர் மீறிக் கொண்டிருக்கிறார். நீங்கள் அழைத்த பிறகும் அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள் சார். திரு. இராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள். பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து உரிமைப் பிரச்சினையை ஏன் கொண்டு வருகிறேன், எந்தெந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமார தாஸ் அவர்கள் உரிமை மீறி இருக்கிறார் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த அவையே கேட்டுக் கொண்டிருந்தது. அதற்குப் பதிலுரை சொல்லலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் 'மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்களுக்கு வாய்ப்புத் தந்தார்கள். உண்டு அல்லது இல்லை, அது உரிமை மீறல் அல்லது இல்லை என்ற அளவிற்குத்தான் அவர்கள் சொல்வதற்கு வாயப்பு இருக்கிறது. ஆனால் அதை விட்டுவிட்டு, எங்கெங்கேயோ சென்ற காரணத்தினால், தாங்கள் அளித்தபடி அவர் அவர்களுடைய விளக்கத்தை எழுதித் தாங்கள் பெற்றுக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கொடுத்து இருக்கின்ற உரிமை மீறல் பற்றிய விளக்கமும் தங்களிடத்தில் இருக்கிறது. அவரும் விளக்கம் தருவாரே யானால், இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து அதற்குப் பிறகு, தாங்கள் தீர்ப்பு அளிக்கிறேன் என்று சொன்னது சரி. அது தான் முறை. அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

4. வரவு-செலவுத் திட்டம், 1992–93, பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன்.



1992 மார்ச் 13]

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய 1992–93 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்குச் சமர்ப்பித்து இருக்கின்றார்கள். அதன் மீது என்னுடைய கருத்தை—காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தைச் சொல்வதற்கு இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கிறேன். வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

இந்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கை—பட்ஜெட் வெளிவந்தபொழுது இந்திய நாடே பயத்தில் இருந்தது. நிச்சயமாக, பொருளாதார நெருக்கடியிலே இருக்கிற இந்திய அரசு, அந்நியச் செலவாணி கையிருப்பு இல்லாத நிலைமையில் உள்நாட்டு வருவாய்களும் குறைந்திருக்கின்ற நிலைமையில், மிக மோசமான ஒரு பட்ஜெட்டைக் கொண்டு வர இருக்கிறது என்ற பயத்திலே இருந்தார்கள். ஒரு பத்திரிகைகூட கார்ட்டூன் போட்டது. டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் 'பாக்ஷிங் கிளவுஸு' க்குள்ளே கையை விடுவது போலவும், ஏதோ கோதாவில் இறங்கத் தயாராக இருப்பதைப் போலவும், உள்ளே இருந்து அழகிய ரோஜா மலரை எடுப்பது போலவும் ஒரு கார்ட்டூனைப் போட்டது ஒருவிதத்தில், மிகப்பெரிய வரிச்சுமையைச் சுமத்தப்போகிறது என்று பயந்து கொண்டிருந்த மக்களுக்கு, ஒரு நல்ல ரோஜா மலரை டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் எடுத்து நீட்டினார்கள். அதுபோல, நானும் யோசித்துப் பார்த்தேன். நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களை அப்படி ஒரு கார்ட்டூன் போட்டுச் சித்தரித்தால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். என்னுடைய யோசனையில் பட்டதெல்லாம், நம்முடைய டாக்டர் நாவலர் அவர்களை அப்படி ஒரு கார்ட்டூன் வரைந்திருந்தால் எப்படி இருக்குமென்று பார்த்தால், ஒரு தாயைப் போலவும், அவர் பசித்து வருகிற குழந்தைக்கு ஒரு நல்ல பெரிய சமையல் பாத்திரத்தில் கையைவிட்டு, சோறை எடுப்பது போல உள்ளே கையைவிட்டு, நல்ல சாக்லேட்டுகளை எடுத்துக் கொடுப்பதைப்போல ஒரு கார்ட்டூன் போட்டுப் பார்த்தேன். அது எனக்குப் பொருத்தமாகப் பட்டது. காரணம், மத்திய அரசாங்கத்தின் மீது பயந்து கொண்டிருந்தார்கள். 'டாக்ஸ் பர்டன்' அதிகமாக இருக்கும்; நிச்சயமாக அதைச் செய்யப் போகிறார்கள். என்று. ஆனால், தமிழக பட்ஜெட்டின் மீது எதிர்பார்ப்புகள் அதிகமாக இருந்தது. நிறைய மானியம், நிறைய சலுகைகள் இவையெல்லாம் வருமென்ற எதிர்பார்ப்புகள், எப்போதுமே மாநிலத்திடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பது வழக்கம். 'ரெஸ்பான்சிபிலிடி'-யும் அப்படித்தான்

இருக்கிறது. அப்படி எதிர்பார்த்தபோது, உணவிற்குப் பதிலாக இனிக்கின்ற சாக்லேட்டுகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அது நிச்சயமாகப் போதாது. பசியைப் போக்காது. ஆனால், இருக்கிற இக்கட்டுகள் எங்களுக்கும் தெரியும். நாங்கள் உங்களை 'ஆஹா, ஓஹோ' என்று புகழ்வதற்கும், இது அப்படிப்பட்ட பட்ஜெட்: மிக மோசமான நேரத்தில் மிக நேர்த்தியான பட்ஜெட் போட்டு விட்டீர்கள் என்றெல்லாம் உங்களை விமர்சனம் செய்யக்கூட நாங்கள் இங்கே தயாராக இல்லை. அதை நீங்களும் விரும்பமாட்டீர்கள் என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். காரணம், வள்ளுவப் பெருந்தகை சொன்ன 'இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்'— அதைப் போல நீங்கள் எங்களை— ''கெடுப்பார் இல்லாமலே கெட்டுப் போவதற்கு'' விரும்பாத நீங்கள் எங்களை ஏற்றுக் கொள்வீர்கள்; 'சைன்டிபிக் கிரிடிஸிஸம்' அதைப் போல ''கன்ஸ்ட்ரக்ஷன் கிரிடிஸிஸம்'' இவற்றை எதிர் பார்ப்பீர்கள் என்ற அடிப்படையிலே, உங்களை முகஸ்துதி பாடுவதால் நீங்கள் தான் வீண்போய் விடுவீர்கள் என்பதை உணர்ந்துதான்— இதைத்தான் தாமஸ் பிரவுன் என்ற அறிஞர் சொல்கிறார்— தத்துவஞானி கிறிஸ்டியன் மாராலிலே சொல்கிறார் :

'' Flattery is a juggler and no kin unto sincerity ''. முகஸ்துதி என்பது ஒரு ஜால வித்தை போடுகிற வார்த்தைதான்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நேரடியாக 'சப்ஜெட்டு'க்குப் போவது நல்லது. உங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற நேரம் 7 நிமிடம். இன்றைக்கு எதிர்கட்சித் தலைவர்கள் வரிசையில் இருப்பவர்கள் பேச வேண்டும். இடையிலே சில உறுப்பினர்கள் விடுபட்டுவிட்டது என்று சொன்ன காரணத்தினால் வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : அதைப்போல, '' Of all wild Beast, protect me from a tyrant; And of all tame, a flatterer'' இதை பென் ஜான்சன் சொல்லியிருக்கிறார். முகஸ்துதி பாடுகிறவர்கள் நாங்களும் அப்படி இருந்தால், எல்லோரும் உங்களை அப்படி சொல்லிவிட்டால், நீங்கள் நெறிதவறி போய்விடுவீர்கள் என்பதற்குத்தான் ஒரு பொருத்தமுள்ள எதிர் கட்சியாக— தற்போது டாக்டர் குமாரதாஸ் அவர்கள் சொன்ன இலக்கணங்கள், எதிர்கட்சிக்குரிய இலக்கணங்களை எங்கெங்கோ மேற்கோள் காட்டி, திசைமாறி இழுத்துச் சென்றார். அதைப்போல இல்லாமல் ஒரு பொருத்தமுற்ற எதிர்க்கட்சியாக— நாங்கள் உங்களுக்கு ஆலோசனைகளைச் சொல்ல இந்தநேரத்திலே கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக, 1967 ஆம் ஆண்டுக்கு பின் வந்த அத்தனை நிதிநிலை அறிக்கைகளிலுமே, முதல் 5 பக்கங்களைப் புரட்டினாலே மத்திய—மாநில உறவுகளைப்



பற்றித்தான் இருக்கும். மத்திய உறவு, மாநில சுயாட்சி, இவையெல்லாம் நாம் பார்த்த ஒன்று. நாவலர் அவர்கள் அறிந்த ஒன்று. 1967-இல், 1971-இல் வரிசையாக வந்த அரசுகள் எல்லாம் சென்ட்ரல்—ஸ்டேட் ரிலேஷன்ஷிப்பை மென்ஷன் செய்யாமல் அல்லது அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், ஃபிஸ்கல் பவர், இவற்றைப் பற்றியெல்லாம் குறிப்பிடாமல் பட்ஜெட் போட்டது கிடையாது. என்னைப் பொறுத்தவரையில், காங்கிரஸைப் பொறுத்தவரையில், இந்த நேரத்தில் ஒன்றை மிகத் தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன். தொடர்ந்து நாம் இப்படி இடித்துக் கொண்டே இருப்பதால், மத்திய—மாநில உறவுகளில் ஏதோ ஒரு தேக்கம் இருக்கிறது; கேட்டது கொடுக்கவில்லை என்பது போன்ற ஒரு 'இம்ப்ரெஷனை' உண்டு பண்ணிக்கொண்டேயிருப்பதால், பலன்கள் கிடையாது. We should go straight on record. எது வேண்டுமென்று நீங்கள் கேட்டாலும் நிச்சயம் அது கிடைக்கும். மத்திய அரசும், அன்னை இந்திராகாந்தி அவர்கள் தலைமையில் இருந்தபோது அதிக அதிகாரங்கள், பொருளாதார அரசியல் சுதந்திரம் மாநிலங்களுக்கு வேண்டும் என்கிற அடிப்படையை உணர்ந்துதான், சர்க்காரியா கமிஷனை நியமித்தார்கள். அது, பல மாநிலங்களிலிருந்தும் அதனுடைய கேள்விகளை அனுப்பி, பதிலைப் பெற்று, ரெக்கமண்டேஷனை அங்கே அனுப்பி வைத்தது. அதன் அடிப்படையில், இந்த அரசு, மைய அரசுக்கு ஒரு செல்லப் பிள்ளை; இது ஒரு ராஜா வீட்டுக் கன்றுக் குட்டி; இது கேட்கிற அதிகாரங்கள் நிச்சயமாகக் கிடைக்கும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்; 'டீ-சென்ட்ரலைசேஷன்' வேண்டும் என்பதிலே காங்கிரசுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. உங்களுடைய கைகள் கட்டப்பட்டிருக்கிறது என்பதும், ஓரளவுக்குக் கட்டப்பட்டிருக்கிறது என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

முற்பகல் 11-25

இன்றைய தேவை— நீங்கள் ஆளுகின்ற டிரெஷரி பென்ச். நாங்கள் எதிர்க்கட்சி. உங்களுக்கு பொருளாதார சுதந்திரம் இருந்தால்தான் நல்ல பட்ஜெட்டை நீங்கள் போட முடியும். அதன் மூலம்தான் பசிக்கின்றவர்களுக்குச் சோறு போட முடியும். அந்த சாக்லேட்டோடு நிறுத்தாமல் அதிகம் தர முடியும். அதனால் உங்களுக்கு 'பிஸ்கல் பவர்ஸ்' அதிகம் வேண்டுமென்பதிலே திடமாக என்ன கோரிக்கையை இந்த அரசு மத்திய அரசுக்கு வைத்திருக்கிறது. அல்லது ஏற்கனவே நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். 'கன்சைன்மெண்ட் டாக்ஸ்' பற்றி போன பட்ஜெட்டிலே சொல்லி இருக்கிறீர்கள். கடந்த அரசும் சொல்லியிருக்கிறது. அதற்கான ஒரு 'பில்லை' லோக்சபாவிலே கொண்டுவருவதற்கு அரசாங்கத்தை வற்புறுத்துவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலே முனைப்பாகச்

[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1992 மார்ச் 13

செயல்பட வேண்டும். 'கன்சைன்மெண்ட் டாக்ஸ்'—
குறிப்பாக நமது மாநிலத்திலே உற்பத்தியாகின்ற பொருள்கள்
எல்லாம் வேறு மாநிலங்களுக்கு கன்சைன்மெண்டாகச் சென்று,
அந்த மாநிலங்களுக்கு ஆதாயம் வருவதை நாம் நிச்சயமாகப்
பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமிழகத்திற்கு அது
துரோகம். கன்சைன்மெண்ட் டாக்ஸ் வேண்டும்.
'கார்ப்பரேட் டாக்ஸ்'இல் நமக்குக் கிடைக்காத ஷேர்
எல்லாம் வரவேண்டும். நான் போன பட்ஜெட்டிலேகூட
அதைப்பற்றிச் சொன்னேன். இன்னும் நம்முடைய உரிமைகள்
இன்றைக்கு நீங்கள் விதித்துக் கொண்டிருக்கின்ற

Constitution Entry 49–50 of the List II of the Seventh
Schedule—

அதன்படி இன்றைக்குக் குறிப்பாக, கோல் மைன்ஸ்', '
கார்டன்ஸ்' 'அயர்ன் வோர்' இன்னும் நிறைய மினரல்ஸ்
இவைகளுக்கு வேறு வரி விதிக்கிறோம். சிமெண்ட் பேக்டரி
மற்றும் சில நிறுவனங்கள் சுப்ரீம் கோர்ட்டிலே ஸ்டே வாங்கி
யிருக்கிறார்கள். மாநில அரசாங்கம் வரி விதிக்கவே கூடாது
என்று. அது இன்று என்னவாயிற்று? நான் ஆறு மாதங்
களுக்கு முன்பே இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறேன்.

'To augment the resources of the State',
நீங்கள் இதையெல்லாம் பார்த்துத்தான் தீரவேண்டும்.
வேண்டிய வரவினங்களில் எல்லாம் நீதிமன்றத் தடை
யாணை கட்டுப்படுத்துகின்றது. சென்ட்ரல் ஆக்டில் திருத்தங்
கள் வேண்டுமானால் 'கான்கிரீட்டாக' கேட்க வேண்டும்,
கொடுங்கள் என்று சொல்ல வேண்டும்.

அதுமாதிரி 'அடிஷனல் எக்ஸைஸ் டியூட்டி'. சர்க்கரை,
புகையிலை, டெக்ஸ்டைல்ஸ் இவைகளுக்கு நாம் ஏற்கனவே
சேல்ஸ் டாக்ஸ் போட்டுக் கொண்டு இருந்தோம். நம்முடைய
வருமானம் அது. இன்றைக்கு அது அடிஷனல் எக்ஸைஸ் டியூட்டி
யாகப் போய்விட்டது. மீண்டும் அதைக் கேட்கிறோமா?
அதன் நிலை என்ன? இதையெல்லாம் நீங்கள் வெறுமனே
ஏதோ ஒரு political slogan jargon. மாநில
சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்று சொல்லிக் கொண்டிருந்
தால் அது நடந்துவிடாது. உண்மையான தாகம், மாநிலங்
களுக்கு அதிக அதிகாரம் வரவேண்டுமென்பதிலே காங்கிரசுக்கு
மாற்றுக் கருத்து கிடையாது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்
கள் வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்
பேசாத மாநாடுகளே கிடையாது. அதிலும் அன்றைக்கு இருந்த
நிர்ப்பந்தம்-முஸ்லீம் லீக் கட்சி நாட்டைப் பிரிவினை செய்துவிடக்
கூடாது என்பதுதான். ஜின்னா அவர்கள் நாட்டைப் பிரித்து
எடுத்துச் சென்றுவிடக் கூடாது என்பதற்காக அதிகமான



1992 மார்ச் 13] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

அதிகாரங்களைத் தருகிறோம் என்று சொன்னதுதான் காங்கிரஸ். சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு உள்ள நிலைமைகள் என்னவென்றால், ஹைதராபாத் சமஸ்தானம், அதே போல் காஷ்மீர் தனி மாநில கோரிக்கை. இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தபிறகுதான் மாநிலங்களின்மீது சந்தேகப் பார்வை கொண்டது. இது பிரிவினையைத் தூண்டுகிற ஒரு அல்டீரியர் மோடிவ். மொழி, இன அடிப்படையிலே நாடு பிரியக்கூடாது என்பதற்காகத்தான் இன்றைக்குத் தங்களுடைய கொள்கைகளை மாற்றிக் கொண்டுள்ளது.

இன்றைக்கு உங்களைப் பொறுத்தவரை தேசியவாதிகள் என்பதற்குச் சான்று கொடுப்பதற்கு யாருமே தேவையில்லை. நீங்கள் மொழி வாதிகள் கிடையாது. பகுதி வாதிகள் கிடையாது. உங்களுக்குச் சான்றளிக்க யாரும் வரவேண்டியதில்லை. உங்களுக்கு அத்தனை தகுதிகளும் உள்ளன. நீங்கள் 'பொலிடிகல் ரைட்ஸ்' அதிகமாகக் கேளுங்கள். பொருளாதாரச் சுதந்திரம் அதிகமாகக் கேளுங்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேளுங்கள். நிச்சயமாக அதற்கு தமிழ்நாடு காங்கிரஸ் முழு ஒத்துழைப்பை உங்களுக்குத் தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'டெபிசிட்' பற்றி சொல்லியிருக்கிறீர்கள். துண்டுவிழுகின்ற பட்ஜெட்டைப் போட்டிருக்கிறோம் என்றும், அதற்கு என்ன பாதுகாப்பு என்ற கேள்விக் குறியையும் எழுப்பியிருக்கிறார் நிதி அமைச்சர் அவர்கள். நம்முடைய மாநில பட்ஜெட்டில் 609 கோடி 'டெபிசிட்' எலக்ட்ரிசிட்டியையும் சேர்த்தால் 699 கோடி. மொத்தத்தில் 700 கோடி. Almost 700 Crores. It is 10% of the total Budget Estimate. அவ்வளவு பெரிய துண்டு விழுந்திருக்கிறது. துண்டு விழுந்தாலே 'இன்ஃப்ளேஷன்' வரும். இன்ஃப்ளேஷன் கீழே போகாது. துண்டு விழுகின்ற பட்ஜெட்டிலே இன்ஃப்ளேஷன் வரும். ஆனால் மாநில அரசாங்கத்தை மட்டும் பார்த்து நீங்கள் இன்ஃப்ளேஷனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லியிருப்பது பொருத்தம் ஆகாது. நாமும் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். நாமும் துண்டு விழுகின்ற பட்ஜெட்டைப் போட்டிருக்கிறோம். (மணியடிக்கப் பெற்றது). இன்ஃப்ளேஷன் அதனாலே கூடக் கூடும். ஒட்டுமொத்தமாக இன்ஃப்ளேஷன் என்பது ஒரு யுனிவெர்ஷல் ஃபினாமினன். அது இங்கிலாந்தில் இருக்கிறது. அமெரிக்காவில் இருக்கிறது. டெவலப்பிங் நேஷன்களில் இருக்கிறது. இந்தோனேசியாவிலே நடந்த ஒரு செமினாரில் ஒரு எக்னாமிஸ்ட்'' சொன்னார். 'It is God's will' இன்ஃப்ளேஷன் என்பது எல்லா இடங்களிலும் வந்து விட்டிருக்கிறது. எவ்வளவு பெரிய எக்னாமிஸ்டும் அதை எதிர்த்து மோதிப் பார்த்தாலும் நடக்காது — அது ஒரு 'இன்ஃபெரன்ஸ்.

அதேபோல், இன்றைக்கு காவிரி இஷ்யூ. நம்முடைய பட்ஜெட்டிலே இல்லாததைத்தான் சொல்லுகிறேன். காவிரி இஷ்யூவிலே மிக நல்ல நிலைமையை — ஆரம்பத்திலே காங்கிரஸுக்கும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சில கசப்பான அனுபவங்கள் இருந்தாலும்கூட — ஒரு நல்ல தேசிய கண்ணோட்டத்தோடு உறுதியான நடவடிக்கையை, அ.இ.அ.தி.மு.க. கட்சியும், அரசும் இரண்டும் சேர்ந்து எடுத்ததை நான் முதலிலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜெனரல் செக்ரட்டரியாக இருக்கின்ற, பொதுச் செயலாளராக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தவிதமான 'பேக்ளாஷ்'-ம் தமிழ்நாட்டில் இருக்கிற மொழி சிறுபான்மையினர்மீது ஏற்படாமல் அந்தக் கட்சியினர் தங்களுடைய கட்டுக்கோப்பைக் காத்தது. நிச்சயமாக எங்கும் வன்முறை கிடையாது. தாக்கவில்லை. என்னதான் கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டாலும் கர்நாடக அரசு அங்கே இருக்கிற முதல்வர், இன்னுக பொறுப்பிலே இருப்பவர்கள் நம்முடைய நலனுக்கு எதிராம் சென்றிருந்தாலும்கூட நம்முடைய தமிழகத்திலே ஒரு நல்ல நிலைமையைக் கடைப்பிடித்ததற்காக மாண்புமிகு முதல்வர், பொதுச் செயலாளர் அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முற்பகல் 11-30

எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் மிகக் குறைவு. நிர்வாகச் சீர்திருத்தம் ரொம்ப அவசியம். புதிய பொருளாதாரக் கொள்கை, தொழிற்கொள்கை எல்லாம் வந்தாலும்கூட நிர்வாக சீர்திருத்தம் இல்லை என்றால் நாம் நினைத்தது எதுவும் இங்கே நடைபெற முடியாது. நிர்வாகச் சீர்திருத்தம் பற்றி நீங்கள் பட்ஜெட்டில் குறிப்பிட்டிருப்பதுகூட 'நடைமுறைகளையும், ஏற்பாடுகளையும் சீர்படுத்துகிற செயல்திட்டம் ஒன்றை வகுக்க முக்கிய துறைச் செயலாளர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது' என்பதாகும். ஆனால் அதிலே எம்.எல்.ஏ. கிடையாது. அதாவது லெஜிஸ்லேட்டார்ஸ் கிடையாது. பிறகு ரிஃபார்ம்ஸ் எங்கேயிருந்து வரப்போகிறது? எனக்கு என்.ஆர்.ஐ. ஒருவர் எழுதி இருந்தார்.

"First of all you liberate the Indian administration from the shackles of bureaucracy".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள், மற்றவர்கள் எல்லாம் பேச வேண்டி இருக்கிறது. எனவே, இன்றைக்கு நான் லிபரலாக இருக்க முடியாது,



திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

I will come to my constituency with your permission.

இப்படி நீங்கள் போட்டிருக்கிற குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அதாவது மக்களுடைய எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிக்கக்கூடிய மக்கள் மன்ற உறுப்பினர்கள் இல்லை என்று சொன்னால் இந்தக் குழு குழுவாகத்தான் இருக்கும். ரெக்கமன்டேஷன் வரப்போவது கிடையாது. நிர்வாகச் சீர்திருத்தம் வரப்போவது கிடையாது. எனவே, உங்களுக்கு நல்ல பெயர் வரவேண்டுமென்று சொன்னால் நிர்வாகம் நன்றாகச் செயல்பட வேண்டும். முறையாகச் செயல்பட வேண்டும். இன்றைக்கு இருப்பது ஏதோ ஆங்கிலேயர் காலத்தில் இருந்த நிர்வாக முறைகள்தான் பல கடைப்பிடிக்கப்படுகின்றன.

எல்லோரையும் சந்தேகக் கண்ணோடு பார்க்கிற வகையில் ஆயிரம் கண்டிஷன்களைப் போடுகிற முறைகள்தான் இன்றைக்கும் நிர்வாகத்தில் இருக்கிறது. இந்தியர்களை இந்தியர்கள் நம்புகிற, தமிழனை தமிழ் அதிகாரிகள் நம்புகிற முறை இன்றைக்கு வந்து தீர வேண்டுமென்றால் நீங்கள் நிர்வாகச் சீர்திருத்தத்தை முடுக்கி விட வேண்டும். எனவே இது நிச்சயமாகப் போதாது. இது எதிர்பார்ப்புகளுக்கு ஆயிரத்தில் ஒரு பங்கு கூட கிடையாது. இது என்னவோ அறிவிக்கப்பட்டு இன்றைக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) என்னுடைய தொகுதி பற்றி இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் "ப்ரான் கல்ச்சர்" என்பதற்காகக்கூட நிறைய இடம் அலாட் பண்ணி இருக்கிறார்கள். அதிலே போடப்பட்டிருக்கிற கண்டிஷன்களை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும். மாண்புமிகு ரெவின்யூ மினிஸ்டர் பார்க்க வேண்டும். மாண்புமிகு ஃபிஷரீஸ் மினிஸ்டர் பார்க்க வேண்டும். போடப்பட்டிருக்கிற கண்டிஷன்களைப் பார்த்தால் தமிழனை நம்பாத மாதிரி, இந்தியனை அதிகாரிகள் நம்பாத மாதிரி இருக்கிறது. அதாவது இந்த நிலம் உனக்குச் சொந்தம் கிடையாது, என்னதான் நீ முதலீடு செய்தாலும் கேட்கின்ற போது கொடுத்துவிட வேண்டும். நீ ஒன்றும் காம்பன்சேஷனுக்குப் போக முடியாது. இப்படி போட்டிருக்கிறார்கள். இப்

[திரு. பி.வி. இராஜேந்திரன்] 1992 மார்ச் 13

படியா போட வேண்டும்? இது வெள்ளைக்காரர்கள் இந்தியர்கள் மீது போட்ட கண்டிஷனாக அல்லவா இருக்கிறது. இப்படி எல்லாம் போட்டுக் கொண்டிருந்தால் எங்கேயிருந்து கல்ச்சர் வரும். எங்கே இருந்து ஃபாரின் எக்சேஞ்ச் வரும். யார் துணிந்து முதலீடு போடப் போகிறார்கள். ஏதோ சாப்பாட்டுக்குக் கூப்பிட்டுவிட்டு நரி கொக்குக்கு விருந்து வைத்தது போலவும். கொக்கு நரிக்கு விருந்து வைத்தது போலவும் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, நடைமுறையை எளிதாக்குங்கள். ''சிம்ப்ளிஃபை தி ப்ரசிஜர்ஸ்'' தீவிரமாக நீங்கள் கண்காணிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடிக்கட்டும். பிறகு சொல்லுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அவரால் இயலாத காலத்திலேகூட கஷ்டப்பட்டு காரிலேயே வந்து அந்த 19 கோடி ரூபாய்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றார்கள். இப்போது 6,7 ஆண்டுகள் ஆகின்றன. 19 கோடி ரூபாய் உலக வங்கியிலிருந்து நாம் கடன் வாங்கியிருக்கிறோம். 4 கோடி ரூபாய்க்கு பைப்கள் வாங்கி நான்கைந்து வருடங்களாகத் தூங்கிக்கொண்டிருக்கிறது. ஒரு ஏழை நாடு, இவ்வளவு நிதி மேலாண்மை சரியில்லாமல் கிடந்தால் தாங்குமா என்பதைப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் பல்வேறு அரசியல் காரணங்களால் இன்றைக்கு கிடப்பிலே கிடக்கிறது. இதுபற்றிப் பேச வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து இதிலே பிரச்சினைகள் இருந்தால் அதைத் தீர்த்து வைத்து அங்கே வெகு விரைவில் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும்.

அதுபோல அறிவிக்கப்பட்ட காஸ்டிக் சோடா தொழிற்சாலை 84 கோடி ப்ராஜக்ட், இதற்கு வெகு விரைவில் நீங்கள் லெட்டர் ஆஃப் இன்டென்ட், கவர்ன்மெண்ட் ஆஃப் இன்டியா—விலே இருந்து பெற்று துரிதப்படுத்த வேண்டும்.

அதைப்போல பார்டர் ஏரியா டெவலப்மென்ட். இன்றைக்கு மத்திய அரசைப்பொறுத்த வரையில், எங்கெல்லாம் கலவரங்கள் இருக்கிறதோ அதற்கெல்லாம் அதாவது எல்லையிலே இருக்கின்ற மாநிலங்களுக்கு எல்லாம் எக்கனாமிக் பேக்கேஜஸ் தருகிறது.



1992 மார்ச் 13] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

அங்கே இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தால்தான் அவர்கள் '' எக்ஸ்டிரிமிஷத் '' திற்குப் போக மாட்டார்கள் என்பதற்காக கோடிக்கணக்கில் தரப்படுகிறது. பஞ்சாபுக்கு பேக்கேஜ் 5,000 கோடி ரூபாய். தமிழகத்திற்கும் அப்படித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டிருப்பதை நான் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, எக்கனாமிக் பேக்கேஜஸ் வேதாரண்யம் போன்ற பகுதிகளுக்கெல்லாம் நிச்சயம் வந்து தீர வேண்டும். அப்படி வந்தால்தான், காஸ்ட்டிக் சோடாத் திட்டம் போன்றவை வந்தால்தான் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-35

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சரியாக கொள்கை நிலம் அளிப்பதிலே வகைப்படுத்தாததனால் எதிர்பார்த்த ஒரு முன்னேற்றம் ஏற்படவில்லை 'பிரான் கல்சுரலில்'. ஆனால் மாண்புமிகு இதய தெய்வம். தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவான கொள்கைகள் அவரால் வகுக்கப்பட்டு உரிய முன்னேற்றம் இந்த வருடம் இருக்கும் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. ப. பட்டாபிராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டம் பற்றி உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இரண்டரை ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்தபோது இது போன்று அவர்கள் வலியுறுத்தவில்லையே, என்ன காரணம் என்று தான் எனக்குத் தெரியவில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. அவர் பேசி இருக்கிறார். (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி : இது இரண்டு பேர்களுக்கும் சம்பந்தப்பட்டதுதான். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேருக்கும் சம்பந்தப்பட்டதுதானே. அதற்கு அவரே பதில் சொல்வார் அல்லவா ?

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு தெரியாததல்ல. இருவருமே இந்தப் பக்கத்திலே அமர்ந்து இருக்கிறோம். பல முறை எழுப்பி இருக்கிறேன். 'எனஃப் மெட்டீரியல்ஸ், அசெம்பிளி ரிக்கார்ட்ஸ்' இருக்கின்றன. வேண்டுமானால் காட்டுகிறேன். அப்படி நீங்கள் வந்துவிட்டதற்காக, உங்களை நெருக்கடி செய்யவேண்டும் என்பதல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ எனக்கு வேண்டியது . . . . . அப்படியெல்லாம் அரசியலிலே கிடையாது. இதிலே அரசியலே நிச்சயமாகக் கிடையாது. உங்களிடம் நீங்கள் பொறுப்பிலே இருக்கிறீர்கள். செய்து தாருங்கள். செய்ய வேண்டும். அதுவும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அடிக்கல் நாட்டிய திட்டம் என்பதால் சொல்கிறேன். அதிலே அரசியல் கலந்துவிட்டது. எம். ஜி. ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டுகிற போது பட்டுக்கோட்டையிலே திராவிட முன்னேற்றக் கழகம் உண்ணாவிரதம் இருந்தது. வேதாரண்யத்திற்கு தண்ணீர் கொடுக்காதே என்று. அதே சமயம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது, அவர்கள் வேலையை எடுத்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக்கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் நண்பர்கள எதிர்த்தார்கள். இன்றைக்கு அதனாலே பாதிக்கப்பட்டிருப்பது மக்கள். தண்ணீரிலே அரசியலைக் கலந்திருக்கிறார்கள். தண்ணீரிலேயே அரசியலைக் கலப்பது நிச்சயமாக தேவையில்லாத பிரச்சினை. நிச்சயமாக நீங்கள் தலையிட வேண்டும். கர்நாடகத்தைப் பார்த்து நாம் தண்ணீர் கேட்கிறதற்கு அப்புறம் உரிமை இல்லை என்பதாகிவிடும். நாங்கள் பட்டுக்கோட்டையைப் பார்த்து தண்ணீர் கேட்பது நியாயமில்லை என்று சொன்னால், தமிழ்நாடு கர்நாடகத்தைப் பார்த்து தண்ணீர் கேட்பதற்கு உரிமையே கிடையாது. 400 அடிக்குக் கீழே இருக்கின்ற நீர் ஊற்றிலே இருந்து தண்ணீர் எடுத்துத் தாருங்கள். 19 கோடி தூங்குகிறது. 4 கோடி ரூபாய் பைப் தூங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் கிடையாது. அவர் சொன்னார். அதற்குப் பதில் இவர் சொன்னார். ஆக இரண்டு பேர்களும் பதில் சொல்லியாகிவிட்டது. அதிலே என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது.





திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் 'கோரம்' இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரம் இருக்கிறது. 36 பேர்கள் இருக்கிறார்கள். அடுத்து திரு. கா. ப. பட்டாபிராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினைப் பற்றி பேச இந்த மாமன்றத்திலே வாய்ப்பு அளித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையினை, இந்த வரலாற்று புகழ்மிக்க இந்த மாமன்றத்திலே நடமாடும் பல்கலைக் கழகம் என போற்றி பாராட்டப்படுகின்ற டாக்டர் நாவலர் அவர்களால் வைக்கப்பட்ட நாளை எண்ணிப்பார்க்கின்றேன். மார்ச் 6-ஆம் நாள் இந்த மாமன்றத்திலே இந்த நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை விளக்கமாக டாக்டர் நாவலர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

1967-ஆம் ஆண்டு இதே மார்ச் 6-ஆம் நாளன்று நீண்ட பல ஆண்டுகளுக்குப் பின்னாலே தமிழகத்திலே திராவிட பாரம்பரியம் உள்ள ஒரு மந்திரி சபையை அமைத்து, அந்த அமைச்சரவைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்று இந்த மாமன்றத்தை அலங்கரித்தார்கள். அந்த நாள் தான் மார்ச் 6-ஆம் நாள். அதே நாளன்றுதான் அன்றையதினம் அமைச்சரவையிலே இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் ஆக இருந்த டாக்டர் நாவலர் அவர்கள் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் நாவலர் அவர்கள், பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறகு, அதற்கு பிறகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்குப் பிறகு, அவர்கள் வழியிலே ஆட்சியை ஆர அமர செய்துகொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இந்த நிதிநிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பாக்கிற போது இந்த நிதிநிலை அறிக்கையை இந்த தமிழகம் எங்கணும் எல்லோரும் பாராட்டி போற்றி வரவேற்கின்றார்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்பதை இன்றையதினம் எண்ணிப்பார்க்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை இந்த மாமன்றத்திலே வைக்கப்படுவதற்கு முன்னாலே இந்த நிதிநிலை அறிக்கையிலே எவ்வளவு வரிகள் வருமோ, எந்த எந்த வழி வகைகளிலே மக்கள் அவதியுறுத்தப்படுவார்களோ என்று எண்ணியவர்கள் ஏராளமாக இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை அழகாக எடுத்துச் சொன்னார்கள்.

[திரு. கா. ப. பட்டாபிராமன்] [1992 மார்ச் 13

சந்தனத் தூளும், வெந்தய தூளும், வில்வப்பழமும், விளாம்பழமும், வெண்ணெயும், சுண்ணாம்பும் பார்ப்பதற்கு ஒரே நிறத்தில்தான் இருக்கும். ஆனால் பயன் அடைந்தவர்களுக்குத்தான் சுவை தெரியும். பக்குவம் இல்லாதவர்கள் வில்வ பழத்தை கடித்துவிட்டு விளாம் பழம் கசக்கிறதே என்று வேதனைப்படுவார்கள். காமாலைக் கண்ணர்களுக்கு கரித் துண்டும், மஞ்சள் துண்டாக காட்சியளிக்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடுக்கிய உவமைகளை இந்த மன்றத்திலே நான் இன்றைய தினம் நினைவு கூர்ந்து பார்க்கிறேன். பட்ஜெட் என்றாலே புது புது வரிகள் வருமோ, மக்களுக்கு வாட்டத்தைத் தருமோ என்கின்ற திகில் நினைப்புகளை மறக்க செய்து நலிவுடையவர்களுக்கு வலுவை ஊட்டும், நாட்டு மக்களின் துயர் துடைக்கும், நாட்டு நலத்தை உண்மையாகவே தேர்ந்து, தெளிந்து இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்புணர்ச்சியோடு, வரிக்கு வரி நம்மை கலக்கும் வரி இல்லாமல் இலக்கிய வரிகளை இந்த நிதி நிலை அறிக்கையிலே நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்கள் இம்மாமன்றத்திலே வைத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்ற போது எத்தனை எத்தனை ஏற்றமிகுதிட்டங்கள் இருக்கின்றன என்பதை எல்லாம் எனக்கு முன்னாலே கடந்த 5, 6 நாட்களாக பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் எடுத்துப் பேசினார்கள். ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையினுடைய அடிப்படையிலே, நிதி ஆதாரங்களை மேலும் அதிகம் ஆக்குவதற்கு, அதிகப் படுத்துவதற்கு என்னென்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே சொல்வதை என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

முற்பகல் 11-40.

இன்றையதினம் இந்த நிதிநிலை அறிக்கை பற்றி, இதனுடைய நிலைமைகளை எல்லாம் விட்டு விட்டு, டாக்டர் நாவலர் அவர்களுடைய அறிக்கையை எடுத்துப் பார்க்கின்ற போது, அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினுடைய 5-வது பக்கத்திலே, 5-வது பத்தியிலே ஒரு விளக்கத்தினைத் தந்திருக்கிறார்கள்.

'' மத்திய அரசின் நிதிநிலை குறித்து அக்கறை கொள்கின்ற அதே சமயத்தில், மாநிலங்களின் நிதி நிலைமையில் தேவையான கவனம் செலுத்தப்படவில்லை. கூட்டாட்சி அரசமைப்பைக் கொண்ட நமது நாட்டில், மாநிலங்களுக்குக் கிடைக்கின்ற அடிப்படையான நிதி ஆதாரங்களுக்கும், மாநிலங்களின் கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றிற்கும் இடையே சமன்பாடற்ற நிலை தான் நிலவி வருகிறது. இந்தச் சமன்பாடற்ற நிலையைமுடிந்த வரையில் குறைப்பதற்கு, ஒன்பதாம் நிதிக்குழுவின் பரிந்துரையும்



1992 மார்ச் 13] [திரு. கா. ப. பட்டாபிராமன்]

கூட உதவ முன் வரவில்லை என்பது நல்வாய்ப்பற்ற நிலையை உணர்த்துவதாகும் '' என்று குறிப்பிட்டிருக்கின்ற டாக்டர் நாவலர் அவர்கள் அதே நிதிநிலை அறிக்கையிலே, 9-வது பக்கத்திலே மிகத் தெளிவாக ஒன்றை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள், அதாவது ''ஏதொன்றையும் செய்ய முடியாத கடுமையான நிதி நெருக்கடி நிலைமை நிலவிய காலத்தில் இவ்வரசு பதவியேற்றிருந்த போதிலும், மத்திய அரசிடமிருந்து எவ்விதச் சிறப்பு உதவியையும் நாம் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும் '' என்று டாக்டர் நாவலர் அவர்கள் மிக ரத்தினச் சுருக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நிலையிலே தான் இந்தியாவினுடைய அரசியல் அமைப்புச் சட்டம் 47-வது பிரிவைப் பார்க்கின்ற போது, ''டியூட்டி ஆப் தி ஸ்டேட்'' என்கின்ற தலைப்பின் கீழே அரசியல் அமைப்புச் சட்டம், 47-வது பிரிவு ஒன்றை சொல்கிறது.

'The State shall regard the raising of the nutrition and standard of living of its people and the improvement of the public health as among its primary duties and in particular, the state shall endeavour to bring about the prohibition of the consumption, excepting for medicinal purposes, all intoxicating drinks and drugs.'

என்று 47-வது பிரிவிலே மிக விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தப் பிரிவிலே பார்க்கும் போது தான் தமிழக அரசு எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே, எத்தனை விதமான சோதனைகளை எல்லாம் தாங்கிக் கொண்டு மது விலக்கை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் நாட்டு மக்களுடைய நல்வாழ்விற்காக புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல திட்டங்கள் இன்றையதினம் ''நோய் நாடி'' என்று சொன்ன வள்ளுவருடைய வரிகளுக்கு ஒரு படி அதிகமாகவே சென்று, நோயாளிகளை நாடி, அவர்களுடைய நோய்களை அறிந்து, அங்கேயே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற ஒரு திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்ற போது, மத்திய அரசு ஓடோடி வந்து இங்கே நம்முடைய நிதிநிலைக்கு கைக் கொடுத்து உதவ வேண்டுமென்ற அடிப்படையிலே தான் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த வரிகளை 5-வது பக்கத்திலேயும், 9-வது பக்கத்திலேயும் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கின்ற போது, இன்றையதினம் நிதி ஆதாரங்களை, தமிழகத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்குப் பெருக்கலாம் என்று எண்ணிப் பார்க்கின்ற போது, தமிழகத்தினுடைய நிதி நிலைமைகளிலே எத்தனை எத்தனை மாற்றங்களைச் செய்யலாம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்

[திரு. கா. ப. பட்டாபிராமன்] [1992 மார்ச் 13

எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடைய நிதி ஆதாரங்களை எப்படி எல்லாம் பெருக்கலாம் என்ற கருத்துக்களை எண்ணிப் பார்க்கலாம்.

தற்போது சென்னை, கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் அசையாச் சொத்துக்களை விற்பதிலே ''பவர் பத்திரங்கள்'', ''பவர் ஆப் அட்டர்னி'', அதாவது உரிமை தருகின்ற அதிகாரப் பத்திரங்களை 20 ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி அதிலே அந்த அதிகாரத்தைத் தர முடியும் என்று சொல்கிறார்கள். அந்த அதிகாரங்களைப் பெறுகின்ற போது, அந்த ''பவர்'' உரிமையை கொடுக்கின்ற அந்தப் பத்திரத்திலே கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புடைய சொத்துக்களினுடைய அடிப்படையிலே அந்த அதிகாரங்கள் தரப்பட்டாலும் அதற்கு பெறப்படுகின்ற முத்திரை ஸ்டாம்ப் எவ்வளவு என்று சொன்னால் 20 ரூபாய் தான். ஆகவே, அந்த ''பவர்'' பத்திரங்களிலே, உரிமை அதிகாரம் தருகின்ற ''பவர்'' பத்திரங்களிலே சொல்லப்படுகின்ற சொத்துக்களின் மதிப்பை கணக்கில் எடுத்து அந்த மதிப்பின் அடிப்படையிலே நூற்றுக்கு ஒரு பர்சன்டோ அல்லது 2 பர்சன்டோ செலுத்த வேண்டுமென்ற முறையை கொண்டு வந்தால் அதிலே நாம் அதிக நிதியை பெற முடியும் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

முற்பகல் 11-45

அடுத்து, இன்றைய தினம் சொத்துக்களின் மதிப்பு வளர்ந்து வருகின்ற இந்த நாட்களில் ரியல் எஸ்டேட் என்று நிலங்களை வாங்கி விற்கும் வியாபாரிகள் நூற்றுக் கணக்கிலே, ஆயிரக் கணக்கிலே தமிழகத்திலே வளர்ந்து விட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்த நிலங்களை வாங்கி, வேறு ஒருவருக்கு விற்கின்றபோது அவர்கள் எவ்வளவு லாபம் பெறுகிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ரியல் எஸ்டேட் முதலாளிகளை அரசாங்கத்தினுடைய பிடியிலே கொண்டு வர வேண்டும். சாதாரணமாக டீ கடைக்குகூட உரிமம் பெறுகின்ற நிலை இருக்கும் போது, ரியல் எஸ்டேட் ஓனர்களை அரசாங்கத்தினுடைய பிடியில் கொண்டுவர, அரசாங்கத்திடம் அவர்கள் உரிமம் பெற வேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலமாக அரசாங்கத்தின் கண்ணோட்டத்தின் பிடியில் கொண்டு வர முடியும். அதுமட்டுமல்ல. ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் ஈடுபடுகிறவர்கள் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு டர்ன் ஓவர் செய்கிறார்கள் என்ற கணக்கை வைத்து, அதை அரசாங்கத்திற்குக் காட்ட வேண்டுமென்ற நிலையை



1992 மார்ச் 13] [திரு. கா. ப. பட்டாபிராமன்]

உருவாக்கினால், அதன் மூலம் நிதி ஆதாரத்தைப் பெருக்க முடியும் என்பதை இந்த மாமன்றத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றையதினம்—உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்—சினிமா முதலாளிகள் கோடிக் கணக்கிலே செலவு செய்து படங்களை எடுக்கிறார்கள். அந்தப் படங்களின் விநியோக உரிமையைக் கொடுக்கின்ற போது—Distribution rights, explaitation rights, exhibition rights, என்று சொல்லுகின்ற அந்த உரிமைகளைக் கொடுக்கின்ற போது, வெறும் 2 ரூபாய் 50 காசு, ஸ்டாம்ப் பேப்பரிலே எழுதிக்கொண்டு, கோடிக் கணக்கான மதிப்புள்ள அந்தப் படங்களுக்கான லீஸ் உரிமையைக் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட லீஸ் உரிமையை, குத்தகை உரிமையைக் கொடுக்கும் போதெல்லாம் அந்தப் படம் மூலம் எவ்வளவு பணம் வருகிறதோ அந்த அடிப்படையிலே அதற்கான முத்திரைக் காசையும் அதிகமாக்கலாமென்பதையும் இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

அடுத்து, இன்றையதினம் தமிழகத்தின் வருவாயைப் பொறுத்தவரையில் அதிகமாக வருவாய் தருகின்ற ஊற்றுக்கண்களாக இருக்கும் விற்பனை வரியின் மூலமாகச் செலுத்த வேண்டிய கோடிக் கணக்கான பணத்தை வியாபாரிகளும், தனிப்பட்டவர்களும் அரசுக்கு செலுத்தாமல் இருக்கிறார்கள். இன்றைக்கு இன்கம்டாக்ஸ் ஆக்ட், பாரின் எக்சேஞ்ச் ஆக்ட், கஸ்டம்ஸ் ஆக்ட், எக்சைஸ் ஆக்ட் போன்ற இப்படிப்பட்ட சட்டங்களிலே செலுத்தப்பட வேண்டிய வரியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் செலுத்தவில்லை என்றால் அவர்களைக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னாலே நிறுத்தி, அபராதத்தோடு சிறைத் தண்டனையும் கொடுக்க முடியும் என்று இருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்திலே அப்படி சிறைக்கும் அனுப்பலாம் என்ற நிபந்தனை இல்லாத காரணத்தாலே எத்தனையோ பேர் இன்னும் கோடிக் கணக்கான பணத்தை, வரியாகச் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தாமல் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாற்றத்தை, தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்திலே கொண்டுவர வேடுதமென்பதையும் இந்த மாமன்றத்திலே சொல்லக் கடமைபட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் இன்றையதினம் காஞ்சிபுரம் தொகுதி நெசவாளர்கள் அதிகமாக உள்ள தொகுதியாக இருக்கிறது. அங்கே பட்டு நெசவுத் தொழிலிலே ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் கூட்டுறவு சொசைட்டியிலே இருக்கிறவர்கள் அந்த நெசவுக்கான தறி சாமான்களை இலவசமாகப் பெறுகின்ற நிலைமை இருக்கிறது. அப்படி பட்டு நெசவாளர்களுக்குக் கொடுக்கும் இலவச தறி சாமான்களை

பருத்தி நூல் நெசவு செய்பவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று
இந்த மாமன்றத்தில் சொல்லியாக வேண்டும். பட்டுத் தறிக்கா
ஒரு காம்ப்ளக்ஸ் கட்டயிருக்கும் காஞ்சி நகரத்திலே பருத்தி
நூல் நெசவு துணிகளை விற்க ஒரு காம்ப்ளெக்ஸ் ஏற்படுத்தித்
தர வேண்டுமென்று சொல்லி, காஞ்சிபுரம் தொகுதியைப்
பொறுத்தமட்டில் அது ஒரு முக்கியமான நகரம், வி.ஐ.பி. நகரம்
என்பதால் அங்கே போக்குவரத்துத் துறையிலே காவல் துறை
யினர் அதிகமாக இல்லாத காரணத்தாலே, பல சிக்கல்கள் ஏற்
படுகிறது. அதையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லிக்
கொள்கிறேன். மேலும் காஞ்சிபுரத்தை சுற்றுலா மையமாக ஆக்க
வேண்டுமென்று சொல்லி, நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த
வரையில் வள்ளுவப் பெருந்தகை, " இயற்றலும் ஈட்டலும்
காத்தலும் காத்தது வகுத்தலும் வல்லது அரசு என்று
சொன்னது போல, அந்த இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த
வகுத்தல் என்கின்ற இந்த 4 பெரிய தூண்களின் மேல் கட்டப்
பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கை என்ற மணி மண்டபத்திலே
எல்லோரும் அமர்ந்து எல்லாவிதமான வசதிகளையும் பெறுகிறார்
கள் என்று சொல்லி, அவையிலே பேச வாய்ப்பு அளித்த துணைத்
தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமைகிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில்
சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி என்
னுடைய உரையை ஆரம்பிக்கின்றேன்.
அறிக்கையைப் பொறுத்த வரையில் இதை இந்த நிதிநிலை
யக்கம் உளப்பூர்வமாக வரவேற்கிறது. காங்கிரஸ் பேரி
குரிய பகுதிகள் இதிலே காணப்படுகின்றன. பல்வேறு பாராட்டுதலுக்
அறிக்கையாக இருக்கின்ற காரணத்தினால் நீண்ட ஒரு நிதிநிலை
ஒவ்வொன்றாக எடுத்துப் பாராட்டிக் கொண்டிருக்க அவைகளையெல்லாம்
ஆகவே சுருக்கமாக என்னுடைய நேரமில்லை.
கருத்துக்களைக் கூற விழை
கின்றேன்.

காவல்துறையைப் பொறுத்த வரையில் அதை நவீனப் படுத்
துவதற்கு முழுமையான முயற்சிகளை மேற்கொள்வதாக அறிக்கை
கூறுகிறது. காவல்துறையை நவீனப்படுத்த மத்திய அரசு ரூ. 10
கோடி தருகிறது என்று சொல்கிறபோதே, காவல்துறை எவ்வளவு
முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறை என்பது புலனாகிறது.
சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்துவது காவல்துறையாகவே அது
இயக வேண்டும் என்பதால் அது நவீனப்படுத்தப்பட்டே ஆக
வேண்டும் என்று மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது என்பது
இதிலிருந்து புலனாகிறது. காவல்துறையை நவீனப்படுத்தும்
வேளையில், ஏற்கனவே இருக்கிற காவல்துறையைச் சேர்ந்



ஊழியர்களுக்குப் பல்வேறு வசதிகளை நாம் செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திற்குப் பிறகு அவர்களுக்கு படி பணத்தில் உயர்வு இல்லை என்று காவல் துறையைச் சார்ந்தவர்கள் தங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். ஆகவே அவர்களுடைய பணிகளைப் பொறுத்த வரையில் 24 மணி நேரம் டூட்டியில், அவர்களுக்கு எந்த நேரத்தில் டூட்டி என்று சொல்ல முடியாத நிலையில், பந்தோபஸ்து பணிக்குச் செல்கின்ற நேரத்தில், பல மணி நேரம் அங்கேயே நின்று கொண்டிருக்கிற சூழ்நிலையெல்லாம் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு அந்த படிப் பணத்தை உயர்த்த வேண்டும். மேலும் வீட்டு வசதியும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தாலூக்கா தலைமையிடங்களில் தொகுப்பு வீடுகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல, ஒரு யோசனையாகவே சொல்கிறேன். கடலோரக் பகுதிகளில் இருக்கிற காவலர்கள் கைகளைக் கட்டிக்கொண்டு, என்ன செய்வது என்று திகைக்கிறார்கள். அதிகமான மீனவர்கள் வாழ்கிற பகுதிகளில் அடிக்கடி கலவரம் ஏற்பட்டு, ஒருவரையொருவர் கொன்று கொள்கிற நிலையும், வீழ்த்திக் கொள்கிற நிலையும், அடிதடியில் இறங்குகிற ஒரு சூழ்நிலையும் உருவாகின்றன. ஆகவே காவல்துறையை நவீனப்படுத்துகிறபோது, கடலோர கிராமங்களில் பணியாற்றும் வகையில் ஒரு தனி படையை அமைத்து, நீச்சல் தெரிந்தவர்கள் இயந்திர படகுகளை இயக்க பயிற்சி பெற்றவர்கள் போன்றவர்கள் கொண்ட ஒரு தனிக் காவல் படையை (விங்) அமைத்து அது செயல்படக்கூடிய வகையில் காவலர்களை நியமித்தால், கடற்கரைப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், அன்னியர்களுடைய ஊடுருவலைத் தடுப்பதற்கும், விடுதலைப் புலிகள், கடத்தல்காரர்கள் போன்றவர்களைத் தடை செய்வதற்கும் அது உதவியாக இருக்கும் என்று என்னுடைய கருத்தை கூறிக் கொள்கிறேன். காவல்துறையை நவீனப்படுத்துகிறோம் என்று நாம் சொல்லிக் கொண்டிருந்தாலும், பல்வேறு காவல் நிலையங்களில் போதிய காவலர்கள் இல்லை. என்னுடைய தொகுதியான கூடங்குளத்தில் ஒரு ஸ்டேஷன் தொடங்கியிருக்கிறார்கள். அதிலே 2 பேர் தான் இருக்கிறார்கள். 8 பேர் பணியாற்றக் வேண்டிய இடத்தில் இரண்டே பேர்தான் இருக்கிறார்கள். ஆகவே எந்த காவல் நிலையத்திலும் பற்றாக்குறை இருக்கிறது. வேலைவாய்ப்பு இல்லாத நிலை அதிகமாக உள்ள இந்தக் காலக்கட்டத்தில், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிற வகையில் நிறைய காவலர்களைத் தேர்வு செய்து, இந்த முக்கியமாக, சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தும் துறையில் அதிகமான காவலர்களை அமர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த அறிக்கையிலே, தாய்க்குலம் ஒன்றை எதிர்பார்த்து ஏமாந்து போய்விட்டோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது மதுவிலக்கு, பூரணமாக அமல்படுத்தப்

படும் என்று எதிர்பார்த்தோம். காலையில் கூட இங்கே சொன்னார்கள் சாராயத்தைக் குடித்து நிறைய பேர் செத்து விட்டார்கள் என்று. இது கடந்த காலத்திலும் நடந்தது இப் போதும் தொடர்ந்து நடந்து வருகிறது என்று சொன்னால், மதுவிலக்கு சரியாக இயங்கவில்லை என்றுதான் பொருள். ஆகவே தாய்மார்கள் எதிர்க்கிறார்கள். போராடுகிறார்கள், காவல் துறையில் இதற்கு ஒத்தாசையாக இருக்கிறார்கள் என் றெல்லாம் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த நேரத்தில் அரைகுறை மதுவிலக்கை வைத்துக் கொண்டிருப்பதை விட, பூரண மதுவிலக்கை இந்த ஆண்டு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்து தாய்க்குலத்திற்கு போனசாக அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். அதாவது இந்த மது ஒழிப்பின் மூலமாக இந்தப் பயனை தாய்மார்களும் அனுபவிக்க முடிய வில்லை. அவர்களுடைய பிள்ளைகளும் அனுபவிக்க முடியவில்லை. ஏனென்றால், குடித்துவிட்டு, சம்பாதியத்தை எல்லாம் அழித்து விட்டு, வரும்போது, குடும்ப அமைதி கெடுகிறது. ஆகவே, தாய்மார்களின் குடும்ப அமைதியைக் காக்கிற வகையிலும், குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதியுள்ளதாக்கும், வகையிலும், பூரண மதுவிலக்கை கொண்டு வந்தால், இந்த சாராயம், கள்ளச் சாராயம், விஷச் சாராயம் என்ற பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

தமிழக முதல்வர் அவர்களுடைய இந்த பட்ஜெட்டில் மதுவை ஒழிப்பதால் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக சொன்னாலும், துணிவோடு இதைச் செயல்படுத்துவோம் என்று உறுதியோடு கூறியிருக்கிறார்கள். அப்படி துணிவோடு, துணிச்ச லோடு, சவாலே சமாளி என்ற நிலையில் பல திட்டங்களைத் தீட்டி, இந்த வருவாய் இழப்புக்கு துணிந்திருக்கிற தமிழக முதல்வர் நினைத்தால், நிச்சயமாக பூரண மதுவிலக்கைக் கொண்டு வர முடியும். அதைத் தாய்க்குலத்தின் சார்பாக ஒரு வேண்டுகோளாக தமிழக முதல்வருக்கு நான் வைக்கிறேன்.

முற்பகல் 11-55

இன்றைக்கு வேளாண்மை, பாசனம், மின்சாரம் ஆகிய இந்த மூன்று துறைகளிலேயும் பல்வேறு திட்டங்களை விரிவாகத் தீட்டியுள்ளீர்கள் நிறைய தொகையை அதற்காக நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள். பாராட்டக்கூடிய விஷயம். ஆனால், வே ளாண்மையைப் பொறுத்த வரையில் நான் இந்தக் கட்டத்திலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இது விவசாயிகளைக் கொண்ட நாடு விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. விவசாயத்தைப் பொறுத்த வரை யில் தவறானதொரு சூழ்நிலை பரவலாக வளர்ந்து கொ ண்டே வருகிறது. அதாவது விவசாயிகள் மறைமுகமாக ஒடுக்கப்படுகிறார்கள் விவசாயிகள் மின்சாரத்திலும், பாசன ஆதாரத்திலும் மற்ற எல்லாவற்றிலும் ஒடுக்கப்படுகிறார்கள்.





விவசாயம் என்பது Subject to risk மழை எதிர்பார்த்துக் செய்யப்படுகிற தொழில் விவசாயம் It is Sudjec to fluctuation Perishable commodities produce பண்ணுவதால் விலைவாசி ஏறும், இறங்கும் ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் விவசாயிகளுடைய நலன்கள் காக்கப்படாவிட்டால், ருஷ்யாவில் வந்த மாதிரி உணவுப் பஞ்சம் நிச்சயமாக நமக்கும் வரும் என்பதில் ஐயமில்லை. அதாவது கமர்ஷியல் கிராப்ஸை நாம் என்கரேஜ் பண்ணு கிறோம். எண்ணெய் வித்துக்கள். தேங்காய், பருத்தி போன்ற வற்றை ஊக்குவிக்கிறோம், ஆனால் உணவு தானியத்தை நாம் ஊக்குவிப்பதில்லை. அரிசி உற்பத்தி திட்டத்தைப் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் கூட இன்றைக்கு விலைவாசி ஏறிவிட்டது. விவசாயிகள் மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்புக்கான சர்வீஸ் எடுக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு அவர்கள் ரூ. 25,000 கட்ட வேண்டும். இல்லையென்றால் உடனே கிடைக்காது. அது மட்டுமல்லாமல் மற்றச் செலவுகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லும் போது என்னைப் போன்ற விவசாயிகளுக்கெல்லாம் முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது பண வசதி உள்ளவர்கள் தான் அந்தச் செலவை ஏற்றுக் கொண்டு போவார்கள். ஆனால் அவர்கள் நல்ல விவசாயம் செய்யமாட்டார்கள். பெரும் பாலான விவசாயிகள் தான் நெல்லை பயிர் செய்து கஷ்டப் படுகிறார்கள் ஆகவே விவசாயிகளுக்கு முன்னுரிமையைத் தந்து மின் இணைப்பை வழங்க வேண்டும். ஏனென்றால் மானியக் கடன், விதை மருந்து பொருள்கள் ஆகியவைகள் எல்லாம் கொடுப்பதில் பிரயோஜனம் இல்லை. இதை இடைத்தரகர்கள் அபகரித்துக் கொள்கிறார்கள். ஆகவே அந்தப் பணத்தை ஒரு மாதிரியாக சரி செய்து விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் மின் இணைப்பு சர்வீஸ் கேட்பவர்களுக்கு மின் இணைப்பை உடனடியாகக் கொடுக்க வேண்டும். ஏராளமான அணைகள், குளங்கள் மற்றும் பாசன வசதியைப் பெருக்கும் வகையில் திட்டங்கள் இருக்குமானால் அவைகளுக்கு முன்னுரிமை தந்து செய்து தர வேண்டும். நிறைய திட்டங்கள், 84 சிறு பாசன திட்டங்கள் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறீர்கள், பாராட்டுகிறேன். அந்த வகையிலே அதற்கு முன்னுரிமை தர வேண்டும்.

இந்த அரிசியைப் பொறுத்த வரையில் விலைவாசி ஏறி விட்டது என்று கூறுகிறார்கள் இந்த விலைவாசி ஏற்றத்திற்கு தமிழக அரசு தான் காரணம், மத்திய அரசுதான் காரணம் என்பதை நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஏனென்றால் அரிசி நிறைய வெளியே போகிறது, கடத்தப் படுகிறது. விவசாயிகள் ஒடுக்கப்படுகிறார்கள். நஞ்சையில் நெல்லை பயிரிட்டால் நமக்கு இலாபம் இல்லை என்றால் எப்படி

அந்த தொழிலை விவசாயிகள் மேற்கொள்ள முடியும்? எல்லாத்
துறைகளையும், எல்லா சமுதாயத்தையும் சார்ந்தவர்கள்
இன்றைக்கு தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்
கொண்டிருக்கிறார்கள், உயர்ந்திருக்கிறார்கள், பொருளாதாரத்
தில் உயர்வைக் கண்டிருக்கிறார்கள். விவசாயிகள்
சகதியில் வேலை செய்து, இரவு பகல் பாராமல் பணியாற்று
கிறார்கள் அவர்களுக்கு (working condition) கிடையாது
Ltd. hours of workகிடையாது இப்படி உழைக்கும் அவர்களுக்கு
உரிய ஊதியம் இல்லாமல் இருக்கிற காரணத்தினால் அவர்கள்
அழுக்கு வேட்டி கட்டி மாற்று உடை இல்லாத நிலையில்
இருக்கிறார்கள். தங்கள் வீட்டை செம்மையாக வைத்துக்
கொள்ள முடியாத நிலையில் சரியான வாழ்கையை அமைத்து
கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே உணவு
உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்து அதை நீங்கள் ஊக்குவிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப்
பெற்றது)

எண்ணெய் பனைகளை பயிர் செய்வதற்கு முன்னுரிமை
தந்திருக்கிறீர்கள். கற்பக விருட்சம் என்று சொல்லக்கூடிய
பனையை வெட்டி வீழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். பனை
தொழில் பெரும்பான்மையான நபர்களுக்கு வேலை வாய்ப்பைத்
தருகிற தொழில். அதிலே ஓலை, நார், கருப்புக்கட்டி என்று
பல பொருள்கள் கிடைக்கின்றன. இவைகளை நாம் பாதுகாக்க
வில்லை என்றால் இன்னும் வேலை வாய்ப்பின்மை
அதிகமாக வரும். ஆகவே அதை நாம் பாதுகாக்க வேண்டும்.
அதற்காக ஒரு வாரியத்தை போட வேண்டும்.

மீன் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இறால் மீனுக்கு
நிறைய வாய்ப்புகளை, ஊக்கத்தை தந்திருக்கிறீர்கள்.
மீனவர்கள் இறந்துபோனால் அவர்களுக்கு ரூ 21 ஆயிரம்
நிவாரணத்தொகை வழங்க நீங்கள் முன்வந்திருக்கிறீர்கள்.
பாராட்டுகிறேன். இதே போன்று 'சப்ஜெக்ட் டு ரிஸ்க்' தொழில்
களான சுரங்கத் தொழில், மரம் ஏறும் தொழில், கட்டிடத்
தொழில் ஆகியவற்றில் உள்ள தொழிலாளர்களுக்கும் இந்த
ரூ 21 ஆயிரம் தொகையை தர அரசு முன்வர வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்

இதே மாதிரி மீனவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத
போது மாதம் ஒன்றுக்கு ரூ 270 வழங்குவது என்பது ஒரு
மகத்தான சாதனை என்பதை நாம் மறுக்க முடியாது. அதற்குப்
பாராட்டுகிறேன். அதே போன்று மீன் வளர்ப்புத் துறையில்
மாதிரி மீன்பிடி கிராமங்களை ஏற்படுத்துவோம் என்று
கூறியிருந்தார்கள். இதை இழிந்த கரை என்ற ஊரில் ஏற்ப
டுத்த வேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன். அதற்கான
குறிப்புகள் இந்த பட்ஜெட்டில் இல்லை. ஒருவேளை செய்வார்
களோ என்னவோ தெரியவில்லை. அதை நினைவு படுத்த
விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி : மைனாரிட்டி ஆசிரியர்கள், ஏறத்தாழ 2,500 ஆசிரியர்கள் ஊதியம் இல்லாமல் வேலை செய்கிறார்கள் என்று சொல்லி, தமிழக முதல்வராக புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அன்றைக்கே ஒரு மனுவைக் கொடுத்து, இந்தக் கல்வி ஆண்டிலேயே, வழக்கு மன்றத்திலே வழக்குகள் இருந்தபோதிலும், நீங்கள் அவர்களுக்கு ஊதியத்தை தர வேண்டுமென்று கேட்டதற்கு முதல்வர் அவர்கள் உடனடியாகச் செவிமடுத்து ஆசிரியர்கள் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அதை வழங்கியமைக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அதைப் போலவே கல்வித் துறையிலே உள்ள பார்ட்-டைம் டீச்சர்ஸ், பி.ஜீ. டீச்சர்ஸ் ஆகியவர்களில் ஒரு சாராருக்கு கிடைக்கிறது ஒரு சாராருக்கு கிடைக்கவில்லை. எல்லோருக்கும் சமநீதி கிடைக்கும் வகையில் அவர்களுடைய பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கும் நிவாரணம் அளிக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சத்துணவைப் பொறுத்த வரையில் (மணி அடிக்கப் பெற்றது) ஒன்றை மட்டும் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லையம்மா நேரம் ஆகி விட்டது. மானியக் கோரிக்கையில் பேசுங்கள். திரு. ஓ. எஸ். அமர்நாத்'

நண்பகல் 12-00

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் என்னைப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றியைக் கூறி எனது உரையைத் துவங்குகிறேன். வருவாய்க் கணக்கில் வருவாய் ரூ. 6446.54 கோடி ஆகவும், வருவாய் செலவுக் கணக்கில் செலவு ரூ. 7255.27 கோடி ஆகவும் இருந்து, பற்றாக்குறையாக ரூ. 808.73 கோடி இருந்தபோதிலும், இந்த மாநில நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் ஒரு சிறப்பான பட்ஜெட்டை அளித்து இருக்கின்றார்கள் என்று சான்றோர்களும் ஆன்றோர்களும் பாராட்டத்தக்க வகையிலே, வியக்கத்தக்க வகையிலே இந்த பட்ஜெட் அமைந்து இருக்கிறது. இந்த அரசு பதவி ஏற்றபோது மாநிலத்தில் அமைதியை நிலை நிறுத்த வேண்டும், அட்டகாசங்களையும் கொள்ளை அடிக்கும் கூட்டங்களையும் ஒழிக்க வேண்டும், விடுதலைப்புலி போன்ற சர்வாதிகார இயக்கங்களை தமிழகத்திலே அதுபோன்ற தீவிரவாத இயக்கங்களை அடக்க வேண்டும் என்ற முறையிலே மீண்டும் வளமான தமிழகத்தை உருவாக்க, வெற்றிநடை போட வைக்க வேண்டும் என்ற இரு பெரும் அறைகூவல்களை எதிர்கொண்டு, மாநிலத்

திலே சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட, மக்கள் அச்சமின்றி வாழ முதலமைச்சர் எடுத்த நடவடிக்கைகள் மிகவும் பாராட்டத்தக்கது.

பொருளாதார மற்றும் நிர்வாக வளர்ச்சி குறித்து 1991 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை எளிய மக்கள், வசதி வாய்ப்பற்ற மக்கள் ஆகியோர்களின் தேவைகள் குறித்து டில்லியில் பாரதப் பிரதமர் திரு. நசிரம்ம ராவ் அவர்களிடமும், அந்த குழுவிடமும் பேச்சு வார்த்தைகள் நடத்தி, பணவீக்கம் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியது பாராட்டத்தக்கதாக இருக்கின்றது.

1991 ஆம் ஆண்டிலே பொதுவிநியோக முறையிலே 17.3 இலட்சம் டன் அரிசி வழங்கப்பட்டு இருக்கின்றது. மத்திய அரசு பொதுவிநியோக முறையிலே அரிசியின் விலையை ஏற்றினாலும், மாநில அரசு சிறிதும் விலையைக் குறைக்காமல் பொதுவிநியோக முறையிலே அரிசியின் விலை குறைவாக இருந்து வருவதற்குக் காரணம் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையே ஆகும். மேலும், நமது அரசு சமையல் எண்ணை போன்ற எண்ணையை மிகச் சிறப்பான முறையிலே குறைவான விலையிலே மக்களுக்கு தர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு 18 ஆயிரம் டன் பாமாயிலை வழங்கியுள்ளது.

மத்தியிலே வலுவான கூட்டாட்சி இருக்க வேண்டும்; அதே நேரத்திலே மாநிலத்திலே வளமான தன்னாட்சி இருக்க வேண்டும் என்று நாவலர் அவர்கள் சொன்ன தத்துவத்திற்கு ஏற்ப, இந்தியாவை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை, இந்தியாவில் உள்ள எல்லா மாநில முதல்வர்களுக்கும் இருக்கின்றது. அதே நேரத்திலே நம்முடைய டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய இந்தியாவையும் காப்பாற்றி விட்டார். 4, 5 நாட்களுக்கு முன்பு, மத்திய ஆட்சிக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்ட நேரத்திலே மத்திய ஆட்சியின் நாட்கள் எண்ணப்பட்ட ஒரு சூழ்நிலையிலே ஒரு சாதாரண தொலைபேசி மூலம் பேசி மத்திய அரசை காப்பாற்றி விட்டார் என்ற பெருமை இந்தியாவிலே எந்த ஒரு அரசியல் தலைவருக்கும் இல்லாத வகையிலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகப் பெரிய பெருமையைப் பெற்றுவிட்டார் என்று நான் சொல்லி அவரைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

காவல் துறையை எடுத்துக்கொண்டால், நமது சமுதாயத்தில் நீண்ட நெடுங்காலமாக பின்னி அமைந்துள்ள வலிமையான அந்தக் கட்டுக்கோப்பை உடைக்க முயலும் தீய சக்திகளை எதிர்த்து



நம்மைக் காத்துக்கொள்ள வேண்டிய கடமை இருக்கின்றது. அந்தக் கடமையிலே சிறுதுளியும் தவறாதவராக நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். காவல் துறையிலே சீர்மிகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். காவல் படைக்காக 276.31 கோடி ரூபாய் செலவிட இருக்கிறார்கள். அதே நேரத்தில் காவல் படையை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 80.45 கோடி ரூபாய் செலவிட இருக்கிறார்கள். அந்த தொகையை மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று நம்முடைய முதல்வர் கூறி இருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம். முதல் கட்டப் பணிக்காக ரூ. 10 கோடி ஒதுக்கி உள்ளதை, நிச்சயமாக பாராட்டப்பட வேண்டிய விஷயமாகத்தான் இருக்கின்றது. காவலர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தை புதுப்பித்து ஆயிரம் குடியிருப்புகளைக் கட்ட இருப்பது உண்மையிலேயே காவலர்கள் வாழ்க்கையில் அது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கின்றது. சென்னையில் உள்ளதுபோல் மதுரை மாநகரத்திலும் போலீஸ் டிரெயினிங் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென்று நான் இந்த அரசை மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையிலே நடப்பு ஆண்டில் அரிசி உற்பத்தியும், உணவு தானிய உற்பத்தியும் இதற்குமுன் இருந்திராத அளவிலே இந்த ஆண்டு தமிழகத்திலே அதிகமான அளவிலே உற்பத்தி முன்னேறி இருக்கின்றது. சமையல் எண்ணெய் பற்றாக் குறையைத் தீர்க்கவும், சமையல் எண்ணெய் விலை உயராமல் தடுக்கவும் நம்முடைய தமிழக அரசினுடைய நடவடிக்கையை மிகவும் உன்னிப்பாக கவனித்துப் பார்த்தால், பாமாயில் இறக்குமதி செய்யவும், சமையல் எண்ணெய் போன்ற கச்சா பொருட்களின் பனை மரங்களை வளர்ப்பதற்கும் இந்த அரசு ரூ. 24.89 கோடி செலவிட இருப்பது வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கின்றது என்று சொல்ல வேண்டும். 100 சதவீதம் ஏற்றுமதி நோக்கத்தோடு கூடிய தோட்டக்கலை எஸ்டேட் தொடங்க முடிவு செய்துள்ளது வரவேற்கத்தக்கதாக இருக்கிறது.

பிற்பகல் 12-05

ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிபுணர்களோடு தொடர்புகொண்டு ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டத்தில் செங்கல்பட்டு, திருச்சி, அம்பேத்கார், மதுரை போன்ற மாவட்டங்களில் ஏரிகளை நவீனமாக்கும் திட்டத்திற்கு ரூ. 19 கோடி ஒதுக்கியுள்ளது வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கிறது. இந்தத் திட்டத்தில் 150 பெரிய ஏரிகள் பயனடைவது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கல்விக்கு வரவு-செலவுத் திட்டத்தில் பொதுக் கல்வி, தொழில்நுட்பக் கல்விக்கு மொத்தம் ரூ. 1,518 கோடி ஒதுக்கியுள்ளதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வரும் ஆண்டில் மதுரை

நகரில் ஒரு பெண்கள் கல்லூரி அமைத்து தர வேண்டுமென்று நான் இந்த அரசை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மதுரை நகரைப் பொறுத்தவரையில் தியாகராசர் என்ஜினியரிங் கல்லூரி என்று ஒரே ஒரு பொறியியல் கல்லூரிதான் இருக்கிறது. மற்ற தனியார் என்ஜினியரிங் கல்லூரி எதுவும் கிடையாது. அதனால் ஒரு தனியார் என்ஜினியரிங் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இந்த பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் 10 மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கப்படுவதாக இருக்கிறது. அதில் இரண்டு மேல்நிலைப் பள்ளிகளை மதுரை நகருக்கு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி ஒன்றுக்கு மறைந்த டர்க்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அதற்கு பிறகு அந்த பல் மருத்துவக் கல்லூரி இன்னும் தொடங்கப்படவில்லை. நான் தமிழக அரசை, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை கேட்டுக்கொள்வது. என்னவென்றால் மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைத்து பல் மருத்துவத்திற்கு முக்கியத்துவம் ஏற்படுத்தி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரில் குடிநீர்ப் பற்றாக்குறை தாண்டவமாடுகிற இந்த நேரத்தில் மதுரை மக்களுடைய துயரைத் துடைப்பதற்கு தமிழக முதல்வர் வறட்சி நிவாரண நிதியிலிருந்து மதுரைக்கு ஐந்து கோடி ரூபாயை ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சுகாதாரத்தை காக்கும் அரசாக இருக்கிறது. புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் என்ற திட்டத்தை துவக்கியதன் விளைவாக அனைவருக்கும் நல்வாழ்வு என்ற முறையில் மகத்தான திட்டத்தை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் காணாத அளவுக்கு சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அதன் மூலமாக 10,000 முகாம்கள் நடத்தப்படும் என்று இப்போது பட்ஜெட்டிலே கூறியிருப்பது பாராட்டத்தக்கது. 14.54 இலட்சம் மக்கள் இதில் பயனடைகிறார்கள் என்று கூறியிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. (மணியடிக்கப்பெற்றது).

தொழில் வளத்தில் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தை முன்னோடியாகக் கொண்டு வரவேண்டுமென்று புதிய தொழில் கொள்கையை தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். தமிழகம் இந்தியாவில் தொழிலில் சிறந்த மாநிலமாக வளர வேண்டும் என்பதற்கான விரிவான திட்டத்தைக்கொண்டு





வந்துள்ளார்கள். ஜப்பான் போன்ற வெளி நாடுகளில் தொழில் நுணுக்கம் தெரிந்த தொழில் அதிபர்களோடும், சிறு தொழில் அதிபர்களோடும் பேச்சு நடத்தி அதன் மூலம் 70 கோடி ரூபாய் முதலீட்டைச் செய்து சிறு தொழில்களைத் தொடங்க இந்த பட்ஜெட்டிலே கூறியிருப்பது பாராட்டத்தக்கதாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> உட்காருங்கள், அடுத்து, திரு. நா. சா. பழனிசாமி.

<u>திரு. நா. சா. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசின் இரண்டாவது நிதிநிலை அறிக்கை சுவையும், சதைப்பற்றும் உள்ள கனிந்த பழம் போல் உள்ளது. இருந்தாலும் நடு நடுவில் சில கடினமான கொட்டைகளும் இருக்கத்தான் செய்கிறது. பெண்களின் பெருமையை கவிதை பாடியே காலம் கடத்தி வந்த தமிழ்நாட்டிலே, பெண் ஆணுக்கு அடிமையில்லை என்று புரட்சிக் கவி பாரதியின் கனவை நனவாக்குகிற வகையில் பெண்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் அளிக்கிற பல திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

அரிசி விலை உயராது என்றால் ஆட்சி கவிழாது என்பது தமிழக அரசியல். அரிசி உற்பத்தியை பெருக்க எடுத்திருக்கும் நடவடிக்கைகளையும், தமிழகம் முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக மாற்றுவதற்கு எடுத்திருக்கிற நடவடிக்கையையும் வரவேற்கிறோம். நடப்பாண்டில் அரிசி மற்றும் உணவு தானிய உற்பத்தி உச்ச அளவை எட்டும் என்ற நம்பிக்கைக்கு அரசின் உதவியோடு உழவர்கள் மேற்கொண்ட முயற்சியும் காரணம் என்று உழவர்களின் உழைப்பை மதிக்கிற அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு நாடுகளுடைய உதவியைப் பெற்று பல வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை இந்த அரசு தீட்டியிருப்பதை வரவேற்கிறேன். ஆனால், இத்துணை திட்டங்களிலும் பட்டியல் போட்டுக் காட்டியுள்ள திட்டங்களில், தமிழ்நாட்டுக்கு அதிக வருவாயும், அன்னியச் செலாவணியும் பெற்றுத் தருகின்ற கோவை மாவட்டத்திற்கு எந்தத் திட்டமும் இல்லை என்ற வருத்தத்தை என்னால் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. எழுத்தறிவுத் திட்டத்தைத் தான் இந்த ஆண்டு, கோவை மாவட்டத்திலே இணைத்திருக்கிறீர்கள். சுற்றவர் கள் அதிகமாக இருக்கின்ற கோவை மாவட்டத்திற்கு இன்று விவசாயிகள் மலிந்து இருக்கின்ற இந்த மாவட்டத்திற்கு, உழைப்புக்கு வாய்ப்பு அளிக்கின்ற திட்டங்களை அளிக்குமாறுக் கேட்டுக் கொள்கிறேன்.

**பிற்பகல் 12-10**

சொட்டு நீர், தெளிப்பு நீர் என நீரைச் சிக்கனமாக்கி, நிலத்தின் வளத்தைக் காத்து, உற்பத்தியைப் பெருக்கிட உதவும் உன்னதமான பாசன முறையை உருவாக்கி இருக்கின்ற இந்த சொட்டு நீர், தெளிப்பு நீருக்கு 50 சதவீதம் மானியத்தைக் கொடுத்து, வங்கிகளிலே கடன் உதவி கொடுத்து, அதை தென்னையைக் காக்கின்ற ஒருங்கிணைப்பு நீர்ப்பாசனத் திட்டமாக நிறைவேற்றி, அதனால் இப்போது பட்டுக் கொண்டிருக்கிற, அழிந்து கொண்டிருக்கிற தென்னையைக் காக்க வேண்டும். அதற்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக, இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அது ஆமை வேகத்திலே நகர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஊராட்சி ஒன்றிய பொறியாளர்களையும், வேளாண் வளர்ச்சி அலுவலர்களையும் இணைத்து, இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் விவசாயிகளிள், தென்னை மரங்கள் செத்துக் கொண்டிருப்பதை, கண்ணீரோடு பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். பெற்ற பிள்ளை இறந்து விட்டால் கூட, அடுத்த ஆண்டு இன்னொரு பிள்ளையைப் பெற்றுக் கொள்ளலாம், ஆனால் வைத்த தென்னம் பிள்ளை இறந்துவிட்டால், தென்னையை நம்பியுள்ள விவசாயிகளுக்கு வாழ்வே சூனியமாகிவிடும். கிடைத்த இடத்தில் எல்லாம் கடன் பெற்று, அடமானம் வைக்க வேண்டியதை எல்லாம் அடமானம் வைத்து, நீர் இயல் நிபுணர் என்று வந்தவர்களுக்கு எல்லாம் பணத்தை அழுது, போர் போட்டாகி விட்டது. புகை வந்த அளவு நீர் வரவில்லை. ஏர் கம்ப்ரசர் வைத்து இறைப்பவர்கள் சில பேர்கள். தண்ணீரை விலைக்கு வாங்கி குடம் குடமாக மரத்திற்கு ஊற்றி வருபவர்கள் பல பேர்கள். குடிக்கத்தான் தண்ணீர் வாங்குவார்கள். ஆனால் எங்கள் தொகுதியிலே தென்னைக்கு ஊற்ற தண்ணீர் வாங்கி வருகிறார்கள்.

சமையல் எண்ணெய் பற்றாக் குறையைப் போக்க அரிதான அன்னியச் செலாவணியைக் கொண்டு, பாமாயிலை இறக்குமதி செய்கிறோம். அந்த எண்ணெய் பனையை வளர்க்க 24.89 கோடி ரூபாய்க்கு திட்டம் தீட்டியுள்ள இந்த அரசு இந்த எண்ணெய் உற்பத்திக்கு பெரிதும் உதவுகின்ற தென்னை இறந்து விடாமல் காக்க பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திலிருந்து உயிர்த் தண்ணீரை விட வேண்டும் என்று பலமுறை தொண்டை தண்ணீர் தீரப் பேசியும், மனு கொடுத்தும், ஊர்வலம் நடத்தியும், எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது நியாயந்தானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.





எங்கள் கட்சியின் சார்பிலே, 22—2—1992 அன்று கோவையில் நடைபெற்ற, உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களுடைய 68-வது பிறந்த தின விழாவிற்கும், கோரிக்கை மாநாட்டிற்கும், நம்முடைய புரட்சித் தலைவியின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற மாண்புமிகு திரு. அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செங்கோட்டையன், மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்களையும் மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களையும் அனுப்பி வைத்து இதுவரை, எந்த அரசுகளும் இந்த விவசாய இயக்கத்திற்கு கொடுக்காத அங்கீகாரத்தைக் கொடுத்து இந்தக் கோரிக்கைகளையும் பொறுமையொடு கேட்டமைக்காக, எனது இயக்கத்தின் சார்பிலும், எனது சார்பிலும் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், மத்திய அரசின் சார்பிலே வந்திருந்து, எங்களது கோரிக்கையை பரிவோடு கேட்டு புதிய வேளாண்மைத் தொழில் கொள்கையை விரைவில் அறிவிக்க இருப்பதாகச் சொன்ன மாண்புமிகு மத்திய அமைச்சரவையைச் சேர்ந்த திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களுக்கும் எங்களது மாநாட்டிற்கு அவரை அனுப்பி வைத்த பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களுக்கும், நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளகடமைப்பட்டு இருக்கிறேன். அந்த விவசாயிகள் மாநாட்டில் பேசிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், நான் சென்னை திரும்பியதும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியைப் பெற்று, பரம்பிக்குளம்-ஆளியாறில் இருந்து தண்ணீரைத் திறந்துவிட்டு, தென்னை மரங்களைக் காப்பாற்றுவதாகப் பேசிவிட்டு வந்தார்கள். ஆனால் இது வரையில், அவர்கள் புரட்சித் தலைவி அவர்களிடம் இதைத் தெரிவித்தார்களா, அல்லது தென்னை மரங்களுக்குத் தண்ணீர் விடுவாரா என்பது கூட தெரியவில்லை. எனவே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், இந்த தென்னை மரத்தை உயிர்ப் பிரச்சினையாக எடுத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு அதனுடைய கடுமையைத் தெரிவித்து உயிர்த் தண்ணீரை விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கோவையில் நான் பேசியதாகச் சொன்னார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிசாமி, சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்திர

சேகரன் மற்றும் திரு. மாணிக்கவாசகம் போன்றவர்கள், மற்ற நண்பர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்தத் தென்னை மரத்திற்கு உயிர்த் தண்ணீரை விடுவதான பிரச்சினையை இன்றைக்கு இந்த அரசு வெகு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கின்ற பாசன ஆதாரங்களுக்கு விடுகின்ற தண்ணீர் குறைந்துவிடாமல், ஏற்கனவே இருக்கின்ற பாசனப் பயிர்களுக்குத் தண்ணீரைக் கொடுத்துவிட்டு, மீதம் இருக்கின்ற தண்ணீரை தென்னை மரங்களுக்குக் கொடுப்பதிலே இந்த அரசுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான அந்த அளவுகோலை நாங்கள் இன்றைக்கு பெற்றிருக்கிறோம். நம்முடைய ஒப்பற்ற தலைவி தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த பிரச்சினையை நன்கு அறிந்திருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த ஒரு கூட்டத்திலே கூட இந்த தென்னை மரங்களுக்கு உயிர் தண்ணீர் விடுகின்ற பிரச்சினை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால்விரிவாக விவாதிக்கப் பட்டிருக்கின்றது. அவர்களுக்கு அந்த கோரிக்கை வந்து, அதை பரிசீலிக்கவேண்டுமென்று எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளிலே, இன்றைக்கு அதிகாரிகளை அழைத்து, இருக்கின்ற தண்ணீர் ஆதாரத்தைப் பொறுத்து, எந்த அளவிற்கு தண்ணீரை விடலாம் 'என்பதற்கான முயற்சிகளிலே ஈடுப்பட்டுக் கொண்டிருக்கிறோம். உரிய நடவடிக்கை, உரிய நேரத்திலே மிக விரைவிலே எடுத்து, அறிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-15)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டபொழுது, சொட்டு நீர், தெளிப்பு நீர் திட்டங்கள் ஆமை வேகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கவனத்திற்கு ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ரூ. 1.40 கோடியை சொட்டு நீர், தெளிப்பு நீர் திட்டத்திற்கு மட்டும் மானியமாக வழங்கியது புரட்சித் தலைவி அரசு என்பதனை உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கு முன்னால், இது போன்ற தொகையை செலவிட்டதாக வரலாறே கிடையாது என்பதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





<u>திரு. நா. சா. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அந்த சொட்டு நீர் பாசனத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி குறைவு அல்லது மானியம் குறைவு என்று நான் இங்கே சொல்லவில்லை. அதைச் செயல்படுத்துகின்ற வேளாண் பொறியியல் துறையைச் சார்ந்தவர்கள் வேகமாக இந்த வறட்சிக் காலத்தில் செயல்படுத்தாமல் வேகம் குறைவாக செயல்படுத்துகிறார்கள் என்பதை மட்டும் தான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்...... (குறுக்கீடு).

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ.1.40 கோடி செலவிட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அந்தத் திட்டம் வேகமாக செயல்படுத்தப்படுவதின் காரணமாகத்தான் இவ்வளவு ரூபாயை அரசு மானியமாக வழங்கியிருக்கிறது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> உறுப்பினர், திரு. நா. சா. பழனிசாமி அவர்கள் உரையாற்றுகிறபொழுது அவ்வப்போது அமைச்சர்கள் எழுந்து பதில் சொல்ல வேண்டுமென்று எதிர்ப்பார்த்துப் பேசுவது முறையாக அமையாது, உறுப்பினர் வரவு-செலவு திட்டத்தின்மீது தொடர்ந்து பேசலாம்.

<u>திரு. நா. சா. பழனிசாமி :</u> அமைச்சரிடமிருந்து பதிலை உடனடியாக எதிர்ப்பார்த்து பேசவில்லை. இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்கின்றபோது அமைச்சர்கள் அதற்கு பதில் சொல்கிறார்கள். உண்மையிலே இப்பொழுது அந்த சொட்டு நீர் தெளிப்பு நீர் பாசனத்தை விரைவாக நடத்த வேண்டிய அளவிற்கு வறட்சி இருக்கிறது. அதனால் தென்னை மரங்களை காப்பாற்ற அதிலே விரைவாக நடவடிக்கை எடுக்கும்பொருட்டு ஒரு வேண்டுகோளாக இதை நான் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த தென்னைக்கு உயிர் தண்ணிர் விடுவதிலே எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை நிச்சயமாக நான் பாரட்டுகின்றேன். அவர் இந்த நிலைமைகளை நன்றாக புரிந்து கொண்டிருக்கிறார். இப்போது தென்னை மரங்கள் அனுதினமும் செத்துக் கொண்டிருக்கின்றன. அதனால் விரைவாக அவற்றைக் காப்பாற்றுங்கள் என்பதற்காக இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்கிறேன்.

அதேபோன்று விவசாயத்திற்கு மின்சாரம், நம்முடைய குடும்பத்திற்கு சம்சாரத்தை விட மின்சாரம் முக்கியமானது என்ற நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. நிலத்தடி நீர் பாசனம். அது தான் விவசாயினுடைய உயிர்நாடி. இந்த மின்சாரம் ஒரு விலைமதிப்புள்ள ஒரு இடுபொருள் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை நாங்கள் நிச்சயமரக தெரிந்துகொள்ளாதவர்கள் அல்ல. அது விலை மதிப்புள்ள இடுபொருள். எங்களால் விலை கொடுத்து வாங்க முடியாது என்கின்ற நிலைமையில்தான் 1970-ல் மின் கட்டண போராட்டத்தை உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி அவர்கள் தலைமையில் துவங்கி, அந்த மின் கட்டண போராட்டத்தினால், மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு சலுகைகளை அளித்து, ஹார்ஸ் பவர் சிஸ்டம் கொண்டுவந்து, சிறு விவசாயிகளுக்கு இலவசமின்சாரத்தைஎல்லாம்வழங்கினார்கள். அதற்குப் பிறகு முந்தைய அரசு எல்லா விவசாய பம்புசெட்டுகளுக்கும் இலவச மின்சாரம் என்று அறிவித்தது. அது முந்தைய அரசு அறிவித்த திட்டமாக இருந்தாலும் கூட, அது விவசாய பெருமக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற ஒரு திட்டமாக இருக்கின்ற காரணத்தால். இந்த மானிய குறிப்பிலே இந்த விவசாயத்திற்கு ஏதோ ஒரு கட்டணம் விதிக்கப்படுகின்ற ஒரு குறிப்பு இருக்கின்ற காரணத்தினால், அந்த இலவச மின்சாரத்தை தயவு செய்து எக்காரணம் கொண்டும், எடுத்துவிட வேண்டாம் என்று ஒரு வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் வைக்க விரும்புகிறேன். நான் ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினர். விவசாயிகளுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்கின்ற ஒரேயொரு சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்குக் கொஞ்சம் ........ (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> விவசாயிகளுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிற ஒரேயொரு சட்டமன்ற . உறுப்பினர். பல்வேறு மானியக் கோரிக்கைகளில் உங்களுக்குப் பேசுகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே வரவு செலவு திட்டத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல், விவசாயத்தைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டுக் கொண்டிருப்பது முறையா என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—20[

<u>திரு. நா. சா. பழனிசாமி :</u> இந்த வரவு செலவு திட்டத்தில் பலரும் பல பிரச்சினைகள் பற்றி அதிகமாக பேசியிருக்கிற காரணத்தால் நான் விவசாயிகள் பிரச்சினையில், அதுவும் இந்த வரவு செலவு திட்டத்தில் குறிப்பிட்டிருப்பதை ஒட்டித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். எனவே இந்த இலவச மின்சாரத்தை



எடுத்து திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக்கு ஒரு நல்ல பெயரை கொடுத்து விட வேண்டாம், இந்த ஆட்சி நீடித்து இருக்க வேண்டும். இந்த ஆட்சிக்கு ஆதரவாக இருப்பது என் பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். விவசாய பெருமக்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் அதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எல்லா விவசாயிகளுக்கும் இருக்கிறது ............

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசியபோது அப்படி நடந்துவிடக் கூடாது, இப்படி நடந்து விடக் கூடாது என்று பேசிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தமட்டில் நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். விவசாயிகளுக்கு வழங்குகிற மின்சாரத்தைப் பொறுத்தமட்டிலே, புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே கடைபிடிக்கப்பட்ட நடைமுறை பயன்படுத்தப்படும். அந்த முறையில் இருந்து இந்த அரசு பின் வாங்காது என்று தெரிவித்திருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் அதிலே அச்சப்பட தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ யூகத்தின் அடிப்படையிலே அவர் பேசக் கூடாது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. நா. சா. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. இந்த 25 ஆயிரம் ரூபாய் கட்டினாலும் அல்லது மின் இணைப்புக் கொடுப்பதற்கு ஆகிற செலவிலே எது அதிகமாக இருக்கிறதோ அதைக் கட்டினால் மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிற அந்த திட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் 40 ஆயிரம் என்று விவசாயிகளுக்கு கொடுக்கிற குறியீட்டிலே 20 ஆயிரத்தை எடுத்து விடுவதால் சிறிய விவசாயிகளுக்கு இந்த திட்டத்தால் நிச்சயமாக பாதிப்பு ஏற்படுகிறது. எனவே அந்தத் தொகையை குறைத்தோ அல்லது 40 ஆயிரம் என்பதை சிறிய விவசாயிகளுக்கு அந்த வகையிலே குறைக்காமலோ அதிலே கூடுதலாக 20 ஆயிரத்தை நீங்கள் அந்த திட்டத்திற்கு கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே இந்த 40 ஆயிரம் குறியீட்டை குறைக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலே வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். அதே போல் விவசாயிகள் கடன் பிரச்சினை ................ (மணியடிக்கப் பெற்றது) ஒரே ஒரு பிரச்சினை சொல்லி விடுகிறேன்.

விவசாயிகள் கடன் பிரச்சினையில் மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் தன்னுடைய தேர்தல் வாக்குறுதியிலே விவசாயிகள் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனிலேயே மடிகிறார்கள் என்று அந்த தத்துவார்த்த உண்மையை அவர்கள் தெளிவாக சொன்னார்கள், ஆனால் இன்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே நல்ல மழை பெய்திருக்கிற காரணத்தால் விவசாயிகளுக்கு வருமானம் வந்திருக்கிறது. எனவே விவசாயிகள் இந்த ஆண்டு கடனை கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வருமானம் பெற்றிருக்கிற விவசாயிகள் கடனைக் கட்டுவதை யாரும் தடுக்கவில்லை. ஆனால் வருமானம் என்பது மழை பெய்து தண்ணீர் வந்திருக்கிற பகுதியில்தான் வந்திருக்கிறதே தவிர கோவை போன்ற மாவட்டங்களில்,— தென் மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் எல்லாம் இன்று வறட்சியின் கொடுமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கூட கோவையிலே கடந்த 4 ஆண்டுகளாக பெய்திருக்கிற மழையின் அளவு சராசரி 25 சதவீதம் குறைந்திருப்பதாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த நிலையில் அப்படிப்பட்ட மாவட்டங்களில் இந்தக் கடனைக் கட்ட இயலுமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இப்போது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எச்சரிக்கை விடுத்து கடன் வசூலிப்பதில் ஜப்தி போன்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இந்த ஜப்தி நடவடிக்கை காரணமாக சேலம் மாவட்டத்திலே 5–3–1992 அன்று திருச்செங்கோடு தாலுக்கா இலுப்புலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் ஜப்திக்கு சென்ற போது, பக்கத்து வீட்டில் ஜப்தி நடப்பதை பார்த்து பயந்து போன மோலாக்காடு பொன்னுசாமி தான் கட்ட வேண்டிய 5 ஆயிரம் ரூபாய் கடனுக்காக தூக்கு போட்டு தற்கொலை செய்துக் கொண்டிருக்கிறார். மேலும் நாமக்கல் தாலுக்கா ஏலூர் புதுப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் ஜப்திக்கு பயந்து தான் கட்ட வேண்டிய 6,000 ரூபாய் அசல் கடனுக்காக தற்கொலை செய்துக் கொள்ள கிணற்றில் விழுந்து காலை ஒடித்துக்கொண்டு பழனியப்பன் என்பவர் நாமக்கல் மருத்துவ மனையில் உள்ளார். இப்படிப்பட்ட ஜப்தி நடவடிக்கை சென்ற ஆட்சியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியிலும் நடக்கவில்லை. இதற்கு முந்தைய ஆட்சியிலும் கூட ஜப்தி நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இந்த கடன் பிரச்சினைக்கு அரசினுடைய நிதி நெருக்கடி நிலைமை என்பதை உணர்கிறோம் என்றாலும் முழு கடனையும் தள்ளுபடி செய்யாவிட்டாலும் கூட, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, வறட்சி மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு நீங்கள் வட்டியையாவது தள்ளுபடி செய்து, அசலுக்கும் தவணை



கொடுத்து வசூலிக்க வேண்டும் என்றும், ஜப்தி போன்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்றும்—ஜப்தியினால் வசூல் ஆவதை விட விவசாயிகள் அவமானப் படுத்தப்படுகிறார்கள். —எனவே ஜப்தி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று இந்த அரசை நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்று வேறு உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

பிற்பகல் 12-21

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்__ : திரு. செ.கு. தமிழரசன். (குறுக்கீடு) திரு. நா.சா. பழனிசாமி அவர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். தயவுசெய்து அமருங்கள். பிறகு பேசலாம். திரு. செ.கு. தமிழரசன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

__திரு. செ.கு. தமிழரசன் :__ மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு தந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் பேரிலே இந்திய குடியரசுக் கட்சியின் சார்பிலே கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேரத்தின் அருமை கருதி என்னுடைய கருத்துக்களை இரத்தினச் சுருக்கமாகச் சொல்ல விழைகின்றேன்.

இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற மிகப் பெரிய நிதி பற்றாக்குறைக்கிடையே நமது மாநிலத்து நிலைமையும் அதை ஒட்டியே இருப்பதினால் ஒரு கடுமையான நிதிப் பற்றாக்குறைக்கிடையே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான சிக்கனமான செம்மையான பட்ஜெட்டை தந்திருக்கிறார்கள். இதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒரு மாநிலத்தின் வருவாயிலே ஏறக்குறைய 70 சதவிகிதம் மானியங்களாகவே போய்க் கொண்டு இருக்கின்ற ஒரு மாநிலத்திலே 70 சதவிகிதம் வருவாயை மக்களுடைய நலத் திட்டங்களுக்கு இலவசமாக அளித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மாநிலத்திலே இப்படிப்பட்ட சிக்கனமான கடுமையான வரிகள் போடப்படாத ஒரு பட்ஜெட் தயாரிப்பது என்பது மிகச் சிரமமான வேலை. இந்த வேலையை இன்றைக்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக செய்து முடித்திருக்கிறார், நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய வழிகாட்டுதலோடு. எனவே இதை நான் வரவேற்பதிலே மிகுந்த மகிழ்ச்சியானடைகிறேன்.

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 மார்ச் 13

இந்த நிதி நிலை அறிக்கையிலே ஆரவாரமான விஷ
யங்கள் இல்லை, ஆனால் இந்த மாநிலத்தின் வளர்ச்
சிக்கு அமைதியாக பல திட்டங்கள் அடிகோலப்பட்டிருக்
கின்றன, ஒருமுறை லெனினை அவர் இப்படிப்பட்ட நிதி
நிலையைத் தயாரித்துக் கொண்டு இருந்தபோது, என்ன
எல்லாவற்றிலும் தொழிற்சாலைகளைத் தவிர்த்துவிட்டு
வெறும் பண்ணைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துக் கொண்
டிருக்கிறீர்களே, சாதாரண மக்கள் பிரச்சினைகளையே
பேசிக் கொண்டிருக்கிறீர்களே, பெரிய தொழிற்சாலைகளுக்
கும், பெரிய விஷயங்களுக்கும் நம்முடைய அரசிலே இடம்
இல்லையே என்று வேதனையோடு சொன்னபோது லெனின்
சொன்னார். என்னுடைய கொள்கையே எல்லோருக்கும்
ரொட்டி கொடுக்கிறவரை ஒருவருக்கும் கேக் இல்லை
என்பது தான். முதலிலே எல்லோருக்கும் ரொட்டி
கிடைக்க வேண்டும். அதற்குப் பிறகு நாம் கேக்கைப்
பற்றி சிந்திப்போம் என்று லெனின் சொன்னார். அது
சோஷலிஸ பாதைக்கான ஒரு அருமையான அடித்தள
மாக அந்த வரிகள் இன்றளவும் பேசப்பட்டு வரு
கின்றது.

இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட நாம் பார்க்கின்ற
போது மற்றவர்கள் கண்ணுக்கு ஆரவாரமான விஷயங்கள்
இல்லை. மிகப் பெரிய தொழிற்சாலைகள் இல்லை. மிகப்
பெரிய விளம்பரம் இல்லை என்று இவை யெல்லாம்
அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்ற போது எனக்குத் தோன்
றியது லெனின் சொன்ன அந்த மிகப் பெரிய சோஷலிஸ
கருத்து தான், இந்த மாநிலத்திற்குத் தேவையான அடிப்படை
பிரச்சினைகளை இதிலே மிகத் தெளிவாக விளக்கி அதற்கு
நிதி ஒதுக்கீடு ஏராளமாக செய்திருக்கிறார்கள், குடிநீர்ப்
பிரச்சினை. சாலை வழங்குதல். வேலை வாய்ப்பு இந்த
மூன்றையும் இந்த நிதி நிலை அறிக்கையிலே மிக முக்கியமாக
எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள், ஒரு நாட்டினுடைய
ஆரோக்கியமான வளர்ச்சியை அந்த நாட்டினு
டைய சாலைகளைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம், அது
குண்டும் குழியுமாக இருந்தால் அது ஏறத்தாழ பல்வேறு
பிரச்சினைகளிலே இருக்கிறது, அது வளமான சாலைகளை
உள்ளடக்கியதாக இருந்தால். அந்த மாநிலமும் வளமாக
இருக்கிறது, ஆக ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சிக்கே
அலகாக இருந்துகொண்டு இருப்பது அந்த நாட்டினுடைய
சாலைகள், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே. சாலைகளை
பிரதானமாக எடுத்துக் கொண்டு கடந்த ஆண்டை விட
இந்த ஆண்டு ஏறத்தாழ 115 கோடி அதிகமாக ஒதுக்கி
இருக்கிறார்கள், இது ஒரு மிகப் பெரிய அமைதியான திட்டம்
என்று சொன்னால் இதை யாரும் குறை கூற முடியாது,
அதே போல 36,000 கிராமங்களுக்கும் 36,000 கிராமம்



1992 மார்ச் 13] [திரு. செ. கு. தமிழரசன்]

என்று நம்முடைய புள்ளிவிவரம் சொல்லுமேயானால் என்
னுடைய கணக்கிலே அது 72.000 கிராமம். ஏன் என்றால்
ஒவ்வொரு கிராமத்திற்கும் பக்கத்திலே ஒரு ஆதி திராவிட
குடியிருப்பு உண்டு. எனவே, 72 ஆயிரம் கிராமங்களுக்கும்
பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகிற, குடிநீர் பற்றாக்குறை
இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு எல்லா கிராமங்
களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகிற ஒரு அருமை
யான மிகச் சிறப்பான திட்டத்தை இங்கே அறிவித்து
இருக்கிறார்கள்.

பிற்பகல் 12—30

குடிநீர், சாலை, வேலைவாய்ப்பு, வளர்ந்து வருகின்ற
ஜனநாயக ஏழை நாடான நமது இந்தியாவிலே இன்றைக்கு
ஒரு தலைவலிப் பிரச்சினையாக இருந்து கொண்டு இருப்பது
வேலைவாய்ப்பு. இந்த வேலை வாய்ப்பைப் பொறுத்த
வரையில் நம்முடைய மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள்
ஒரு பரந்த நோக்கத்தொடு. விரிந்த கண்ணோட்டத்தோடு.
தாய் அன்போடு பெண்களுக்கு ஒரு லட்சம் பேருக்கு வேலை
வாய்ப்பு, ஆதி திராவிடர்களுக்கு 65 ஆயிரம் பேருக்கு வேலை
வாய்ப்பு என்ற அளவிலே மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்
உதாரணமாக இந்தத் திட்டங்களை செயற்படுத்திக்
கொண்டு இருக்கிறார்கள், எனவே. இப்படி மனித
சமுதாய அடிப்படை பிரச்சினைகளை. வளர்ந்து வருகிற
ஒரு பற்றாக்குறை ஏழை நாட்டின் பிரச்சினைகளை
மிக தெளிவாக. அழகாக. அமைதியாக செயற்படுத்திக்
கொண்டிருக்கிற நிதி நிலை அறிக்கையில் விளக்குகிற இந்த
முயற்சியை நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்
டிருக்கிறேன்,

ஜனநாயகத்திற்கு எது அழகு என்றால் ஒரு தனி மனித
னுடைய தேவைகள் தான், தனி மனிதன் தான் ஜனநாயக
நாட்டின் அழகாக இருக்க முடியும், நம்முடைய நாட்டிலே
தனி மனிதனுக்கு ஏராளமான தேவைகள் இருந்து கொண்டே
இருக்கின்றன,

அதுமட்டுமல்ல. எல்லாவற்றையும் அரசு இலவசமாக
தந்து விடுமா என்கிற ஒரு உணர்வு கூட நம்முடைய 45 ஆண்டு
கால ஜனநாயகத்திலே தனி மனிதனுக்கு விளைந்து விட்டது,
எல்லாமே அரசு கவனித்துக் கொள்ளும். எல்லாமே அரசு தரும்.
எல்லாமே அரசு இலவசமாக தரும் என்ற அப்படிப்பட்ட தனி
மனிதனுடைய உணர்வு நம்முடைய ஏழை ஜனநாயகத்திலே
வளர்ந்து விட்டது, எனவே. இப்படிப்பட்ட நிலைமையிலே
மனித சமுதாயத்தின் நிவர்த்திகளை புரிந்து கொண்டு
செய்கின்ற அளவுக்கு வருவாய் குறைந்து இருக்கிற ஒரு

மாநிலத்திலே பட்ஜெட் தயாரிப்பது என்பது சிரமமான வேலை என்பதை நான் உணருகிறேன், ஆனாலும் கூட பல்வேறு நல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டு இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,

குறிப்பாக காவல் துறையை நவீனப்படுத்த மத்திய அரசிடம் நாம் 80 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம், அவர்கள் 10 கோடி ரூபாய் தந்து இருக்கிறார்கள், நாம் கேட்டது 80 கோடி ரூபாய், அவர்கள் தந்தது 10 கோடி ரூபாய், இன்றைக்குக்கூட பத்திரிக்கைகளிலே பார்த்தால் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய உயிருக்கு எச்சரிக்கை விடுத்து இருப்பதை பார்க்க முடிகிறது, இன்றைய தேசிய நெருக்கடியிலே நம்முடைய இந்திய துணைக் கண்டத்திலே வளமான. வலிமையான தலைமைக்கு ஏற்பட்டு இருக்கிற நெருக்கடியிலே நம்முடைய மாநிலத்திலே மிகுந்த மக்கள் செல்வாக்கைப் பெற்ற. அசைக்க முடியாத மக்கள் நம்பிக்கையை பெற்ற ஒரு மாபெரும் தலைவராக நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் பரிணமித்து கொண்டிருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இனி ஒரு 100 ஆண்டு காலத்திற்கு அப்படிப்பட்ட ஒரு தலைமை ஏற்படுமா என்பது கூட ஐயம்தான், அப்படிப்பட்ட நிலையில் தான் நாள் தோறும் இப்படிப்பட்ட எச்சரிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன, எனவே. இந்த நிலைமையிலே நம்முடைய காவல் துறையை நவீனப்படுத்துவது மிகுந்த அவசியம் ஆகிறது, நாம் 80 கோடி ரூபாய் கேட்டோம்; மத்திய அரசு 10 கோடி ரூபாய் தான் தந்திருக்கிறது, இதை வலியுறுத்தி மேலும் நவீனப்படுத்த நாம் முயல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

குடும்ப நலத் திட்டத்திலே ஏராளமான சிறப்பு வாய்ந்த அம்சங்கள் இருந்த போதிலும் அது மனித நேயத்திற்கு சிகரமாக இருந்த போதிலும் நான் அதிலே ஒன்றை இங்கே நன்றியோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன், சாதாரண ஒரு ஏழை இன்றைக்கு வளர்ந்து வருகிற விஞ்ஞானத்திலே அரசு மருத்துவ மனையில் தான் சிகிச்சை பெற வேண்டும் என்ற நிலை இருந்த போதிலும் அவர்கள் தனியார் மருத்துவ மனைகளில் போய் அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கும் இந்த அரசு 15 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள், இந்த சிறபபு வாய்ந்த திட்டம் மனித நேயத்திற்கு சிகரமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் நன்றியோடு எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன், முதியோர் உதவித்தொகையை 50 ரூபாயிலிருந்து 75 ரூபாயாக உயர்த்தி யிருக்கிறீர்கள். இந்த அம்சத்தையும் நான் பாராட்



டியே ஆகவேண்டும், இப்படி, ஏராளமான பாராட்டுதலுக்குரிய அம்சங்களும் இதிலே பொதிந்து இடக்கிறது என்பதை சுட்டிக் காட்டத் தொடங்கினால் நேரம் மிகுதியாகும். எனவே, நான் சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பிற்பகல் 12–35

ஆதிதிராவிட நலத்துறைக்கு நம்முடைய புரட்சித் தலைவி
யினுடைய அரசு 10 அம்சத் திட்டங்களைக் கொண்டு வந்து பல
அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறது.
ஆனாலும்கூட, இந்த ஆண்டு மத்திய அரசு நம்முடைய ஜவஹர்
வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையினைக்
குறைத்து விட்டது. அங்கே ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்
திற்கு நிதி ஒதுக்கீடு குறைந்து இருப்பதனால் இனி மாநிலத்திலும்
நம்முடைய நிதிநிலை குறையக்கூடும். இந்த ஆண்டு பல ஆதி
திராவிட மக்களுக்கு நாம் வீடுகட்டித் தர முடியாத நிலைமை ஏற்
படும். எனவே, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு
மேலும் அதிகத் தொகையை ஒதுக்கவேண்டுமென்று மத்திய
அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று நான் சொல்ல
விரும்புகிறேன். ஏற்கெனவே நம்முடைய முதல்வர் அவர்கள்
இது குறித்து வருத்தம் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தஆண்டு
ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் 30 புதிய விடுதிகள் தொடங்
கப்பட இருக்கின்றன. இந்த 30 விடுதிகளுக்கு நம்முடைய நிதி
யிலே பல லட்சங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும்
ஒரு விஷயத்தை நாம் மறந்து விட்டோம். தொடர்ந்து பல
ஆண்டுகளாக விடுதி மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 160
ரூபாய்தான் வழங்கப்படுகிறது. இப்போதைய விலைவாசியிலே
160 ரூபாய்க்கு ஒரு கல்லூரி மாணவனுக்கு மூன்று வேளையும்
சோறு போடுவது என்பது நிச்சயமாக முடியாத காரியம். படிக்
கின்ற மாணவனுக்கு ஆரோக்கியமான உணவு தேவை. அதி
லும் கல்லூரியிலே படிக்கின்ற இளைஞர்களுக்கு போதிய அள
விற்கு உணவு வேண்டுமானால் இந்த 160 ரூபாய் நிச்சயமாகப்
போதாது, எனவே, இந்த 160 ரூபாயை 350 ரூபாயாக ஒதுக்கித்
தரவேண்டுமென்று நான்கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். ...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. செ. கு. தமிழரசன்** : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.
நான் வேறு ஒன்றையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தாழ்த்தப்பட்ட
மக்களுடைய உற்ற தோழராக, நம்பிக்கை நட்சத்திரமாகச்
செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பல திட்டங்களை அவர்

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 மார்ச் 13

கள் ஆற்றிக்கொண்டு இருக்கிறார்கள். புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் வேறு எவருமே செய்ய முடியாத
புரட்சிகரமான திட்டத்தைச் செய்தார்கள். தமிழ்நாட்டிலே,
ஜாதிப் பெயரிலே எந்த ஊரும் எந்தத் தெருவும் இருக்கக்
கூடாது என்ற கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.
அதைவிட ஒரு சமூகப் புரட்சி வேறு ஒன்றும் இருக்க முடியாது.
தாய் 8 அடி பாய்ந்தால் சேய் 16 அடி பாயும் என்பதைப் போல
புரட்சித் தலைவி அவர்கள் வேறு எவருமே செய்ய முடியாத அள
விற்கு இன்றைக்கு கோயில்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் நுழை
கிற அளவிற்கு வேத ஆகம கல்லூரியிலே 18 விழுக்காடு கொண்டு
வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகாத்மா காந்தி
அவர்கள் 'அரிஜன்' என்று தாழ்த்தப்பட்ட மக்களைச் சொன்
னார். 'அரி' என்றால் கடவுள்; 'ஜனம்' என்றால் குழந்தைகள்.
இதற்கு தமிழிலே 'கடவுளின் குழந்தைகள்' என்று பொருள்.
ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கடவுளின் குழந்தைகள் கோயி
லுக்குள்ளே போய் அர்ச்சனை செய்ய முடியாத நிலைமை இருந்
ததை இன்றைக்கு மாற்றி வேத ஆகம கல்லூரியிலே 18 விழுக்காடு
தந்திருக்கிற இந்த சமூகப் புரட்சியை (மேசையைத் தட்டும் ஒலி)
நான் இங்கே மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்
படி மகத்தான முறையில் பணியாற்றிக் கொண்டு இருக்கிற புரட்
சித் தலைவி அவர்களை இன்றைக்கு, முன்னாள் திராவிட முன்
னேற்றக் கழக அமைச்சர் ஒருவர் பேசுகிறபோது சொல்லியிருக்
கிறார்கள், நாம் இங்கேகூட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்
தின் கீழ் சாதியைப் பேசக்கூடாது என்று சொல்கிறோம். வெட்டி
யான் வேலை பார்ப்பதற்கு ஒரு முதல்வர் தேவையா என்று முன்
னாள் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் ; ஏதோ கர்நாடக
பிரச்சினையின் கணக்குகளைச் சொல்கிறபோது, அங்கே இவ்
வளவு பேர் இறந்தார்கள் என்று சொல்கிறபோது அவர் பேசு
கிறார், வெட்டியான் வேலை செய்வதற்கு முதல்வர் தேவையா
என்று, ஒரு சமுதாயத்தை இழிவுபடுத்திப் பேசுகிறார். இது ஒரு
பெரிய நாளேட்டிலே, மிகப்பெரிய தலைப்போடு கடந்த
26–1–1992 அன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படிப்
பேசியவரை குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்கைது
செய்ய வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

இந்த ஆண்டை மத்திய அரசு சமூக நிதி ஆண்டாக, பாபா
சாகேப் அம்பேத்கார் அவர்களுடைய நூற்றாண்டாகக் கொண்
டாடிக் கொண்டிருக்கிறது. ஏப்ரல் 14 அன்று இந்த நூற்றாண்டு
விழா நிறைவு பெற இருக்கிறது. ஏற்கெனவே இருந்த ஒரு அரசு
நூற்றாண்டு விழா தொடங்கியபொழுது அதை ஏனோதானோ
என்று, தாழ்த்தப்பட்ட மக்கள் எங்களுக்கு நன்றியுடையவர்
களாக இல்லை என்று விமர்சித்து, அதைச் சிறப்பாகக் கொண்டா
டாமல் விட்டுவிட்டது. இப்பொழுது வருகிற ஏப்ரல் 14-லே
நூற்றாண்டு விழா நிறைவேறப் போகிறது. எனவே, நூற்



1992 மார்ச் 13] [திரு. செ.. கு. தமிழரசன்]

றாண்டு விழாவைச் சிறப்புபடுத்துகிறவகையிலே நம்முடைய
மாநில அரசு பாபா சாகேப் அம்பேத்கார் அவர்களுடைய பெய
ரிலே ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்த வேண்டும். மத்திய
அரசும் கூட எல்லா மாநிலங்களுக்கும் ஐம்பது இலட்சம் வரை
யிலும் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதனோடு
சேர்த்து, நீங்கள் இங்கே ஒரு மிகப்பெரிய நினைவுச் சின்னத்தை
ஏற்படுத்த வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு பாபா
சாகேப் அம்பேத்கார் பெயரை வைத்து, அம்பேத்கார் பல்கலைக்
கழகம் என்று அழைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும்
நான் இங்கே வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது)
ஒரே செகன்டிலே முடித்து விடுகிறேன். தொகுதிப் பிரச்சினை
. . . . . . . .

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொகுதியைப்
பற்றியெல்லாம் மானியக் கோரிக்கையிலே பேசுங்கள்
திரு. ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவையினு
டைய துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்
கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சரவர்கள்
இந்த அவைக்கு அளித்திருக்கிறார்கள். அதன் மீது அகில
இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் என் கருத்துக்களைச்
சொல்ல நான் விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை அளிக்கின்ற நேரத்திலே
தமிழகத்தில் பொருளாதார நெருக்கடி இருந்தது என்பதனைச்
சுட்டிக்காட்டி, அதே போன்று, மத்தியிலேயும் பொருளாதார
நெருக்கடி இருந்த நேரத்தில், தமிழக நிதிநிலை அறிக்கை மிகச்
சிறந்த முறையிலே ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட
மக்களுக்குப் பயனுள்ள வகையில் அமைந்திருக்கிறது என்பதனை
பார்க்கின்றபொழுது இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டா
மல் இருக்க முடியாது.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற சூழ்நிலையை நாம் கருத்திற்
கொள்ள வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆட்சிப் பொறுப்
பேற்ற நேரத்தில் தமிழகத்திலே அதற்கு முன்னால் ஆட்சிப்
பொறுப்பிலே இருந்தவர்கள், கஜானா காலி என்று சொன்ன
தோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலே ஆயுதக் கலாச்சாரம்
இங்கே தலைவிரித்தாடி, சட்டம் ஒழுங்கு கெட்ட நேரத்திலே
புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் தமிழக முதல்வராகப்
பொறுப்பேற்று, ஜான்சி ராணி போன்று நின்று, விடுதலைப்
புலிகள் என்று சொல்லி சட்டம் ஒழுங்கைக் கெடுத்துக்
கொண்டிருந்தவர்களுடைய கொட்டத்தை அடக்கினார்கள்

என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்களுடைய கொட்
டத்தை ஒடுக்குவதற்குத் தமிழக போலீஸ் இரண்டாண்டுக் காலம்
சட்டம் ஒழுங்கு கெடுவதைப் பார்த்துக்கொண்டு கைகட்டிக்
கொண்டிருந்த அந்தப் போலீஸ், புரட்சித் தலைவிக்கு உதவியாக
நின்றது என்பதனையும் மறக்க முடியாது. அந்த இரண்டாண்டு
இருண்ட காலச் சரித்திரத்தை மாற்றியமைக்கின்ற முயற்சியிலே
ஈடுபடுகின்றபொழுது, முதன்முதலாக, பதவியேற்ற நேரத்தி
லேயே, அவ்வளவு பொருளாதாரச் சிக்கல் இருந்தபோதும்,
மலிவு விலை மதுவைத் துணிந்து 320 கோடி ரூபாய் நட்டத்திலே
கூட ஒழிப்பதற்கு முதன்முதலாகக் கையெழுத்திட்டார்கள்.
அப்படி தமிழகத்திலே ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட, தாய்க்
குலத்தின் கண்ணீரைத் துடைக்க அந்த திட்டத்திலே கையெழுத்
திட்டார்கள். அந்தத் திட்டம் இன்றையதினம் பார்க்கும்
பொழுது மிக வேதனையாக இருக்கிறது. இன்றைக்குக் காலை
யிலே ஆரம்பித்தவுடனேயே பத்துபேர் விஷ சாராயம் குடித்து
இறந்துவிட்டார்கள் என்ற செய்தி. அந்தத் திட்டம் நிறைவேற்
றப்பட்டவுடனேயே, தமிழகம் முழுவதும் கள்ளச் சாராயம்
ஒழிக்கப்பட்டிருந்தது. ஆனால், காலப்போக்கிலே, இப்
பொழுது கள்ளச் சாராயம் வளர்ந்துவிட்டது. அதை ஒழிப்ப
தற்கு, முழுமையாக ஒழிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை
எடுப்பதோடு, ஒன்று அதை எடுத்து விட வேண்டும் அல்லது
முழு மதுவிலக்கு கொண்டுவர வேண்டும்.

பிற்பகல் 12—45

முழு மதுவிலக்கு கொண்டுவர வேண்டுமென்று சொல்கிற
நேரத்தில், இப்பொழுது அன்னிய நாட்டு இந்திய மதுபானங்
களுக்கு நாம் வரியை உயர்த்தியதன்மூலம் பெறுவதைவிட,
அந்த மலிவுவிலை மதுவை எடுத்துவிட்டால் 320 கோடி வரும்.
ஆகவே, இந்த அரசு கள்ளச்சாராயத்தை ஒழிப்பதிலே
கடுமையாக இருக்க வேண்டும்.

அடுத்து, நமது மாநிலத்திலுள்ள போலீஸ் திறமையாகச்
செயல்பட வேண்டும்; சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட
வேண்டும். அந்த வகையிலேதான், மத்திய அரசிடமிருந்து
காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக 80 கோடி ரூபாய் கேட்
டிருந்தோம். 10 கோடி அனுமதித்திருக்கிறார்கள். அதுமட்டு
மல்ல; நமது நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிற
நிதிநிலை அறிக்கையைப் பார்த்தேன். இது ஒன்றுமட்டுமல்ல;
இதிலாவது 10 கோடி கொடுத்திருக்கிறார்கள். தமிழக அரசின்
சில கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவும் இல்லை;
சிலவற்றிற்கு நிதியாதாரங்களை நாம் எதிர்பார்க்கிறோம்,
மத்திய அரசு கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு நான் இந்த
திட்டத்தைப் படிக்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள்.
மத்திய அரசை இந்த அளவுக்கு நம்பிக்கொண்டிருக்கிறோம் என்
பதை, நீங்கள் படிக்கிற நேரத்திலே சொன்னீர்கள். மத்தி





யிலே வலுவான கூட்டாட்சி, மாநிலத்தில் தன்னாட்சி என்கிற
அந்த உரையை வலியுறுத்தி, மத்திய அரசு மாநில அரசுக்கு
உரிய நிதியாதாரத்தைக் கொடுக்க வேண்டும்.

அதேபோன்று, காவல்துறையை நவீனப்படுத்துகிற அந்த
முயற்சியில் நாம் தெளிவாக செயல்படுவதற்கு, தமிழகத்
திலே சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படுவதற்கு, மத்திய அரசு
உடனடியாகக் கொடுக்க வேண்டிய நிதியினைக் கொடுக்க
வேண்டுமென்று நாம் வலியுறுத்த வேண்டும். அதன்மூலம்,
தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்படுமேயானால்
தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சி மேம்படும்.
விடுதலைப் புலிகள் முழுமையாக இன்று ஒழிக்கப்படவில்லை
என்பதற்கு ஆதாரமாக நமது சென்னை போலீஸ் கமிஷனர்
அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். விடுதலைப்
புலிகள் ஊடுருவியிருக்கிறார்கள். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த
தீவிரவாதிகள் ஊடுருவி இருக்கிறார்கள்; அடையாளம் தெரிந்த
வர்கள் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு
மட்டுமல்ல; தமிழகத்தினுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி
டாக்டர் ஜெயலலிதா அவர்களின் உயிருக்கும் எச்சரிக்கை விடப்
பட்டிருக்கிறது. இதையெல்லாம் கணக்கில் கொண்டு, மத்திய
அரசிடம் அதிகத்தொகைபெற்று, போலீசை நவீனப்படுத்த
வேண்டும். காவலர் குடியிருப்பு இவ்வளவு ஆயிரம் என்பதல்ல;
அத்தனை காவலர்களுக்கும் குடியிருப்பு கட்டாயமாக கட்டிக்
கொடுக்கப்பட வேண்டும். ஏன் இதை வற்புறுத்துகிறேன் என்று
சொன்னால், ரிசர்வ் போலீசிலே அவர்கள் ஒரே இடத்தில்
இருக்கிற காரணத்தினால், அவசரம் என்று சொன்னால் ஒரு
சங்கு ஊதி கூப்பிட்டு விடலாம். மற்ற காவலர்களை அழைக்க
வேண்டுமென்று சொன்னால், ஒருஇரவு முழுவதும் ஒருகாவலரைத்
தேடிப் பிடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே,
காவலர்கள் அத்தனைப் பேருக்கும் குடியிருப்புகள் கட்டிக்
கொடுக்கிற அந்த முயற்சியினை எடுக்கவேண்டும்.

வேளாண்மைத் துறையிலே, உண்மையிலேயே, இந்த ஆண்டு
அதிக உற்பத்தி இலக்கை எட்டியிருக்கிறோம் என்று அமைச்சர்
அவர்கள் இங்கே சொன்ன நேரத்திலே, இங்கே குறிப்பிலே
அதைக் காண்கிற நேரத்திலே பெருமகிழ்ச்சியடைகிறேன். அது
மட்டும் அல்ல; அதிகமான தரிசு நிலங்களை விளைச்சல் நிலங்
களாகக் கொண்டுவர முயற்சி எடுக்கிறோம் என்று சொன்ன
அந்த நல்லக் கருத்தினைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில்,
அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னால் ஒரு அறிக்கையைக்
கொடுத்திருந்தார்கள். விளைநிலங்களை வீடு கட்டுவதற்கு
எடுக்கக்கூடாது என்றுகூட பத்திரிகையிலே பார்த்தேன்.
ஆனால், என்னுடைய தொகுதியிலே 20 ஆயிரம் ஏக்கரா பாசன
வசதியுள்ள கண்மாயை ஹவுசிங் போர்டில் எடுத்துக்கொண்டார்
கள். அனுப்பானடியில் 20 ஆயிரம் ஏக்கரா பாசன நிலம்

உள்ளது. உள்ளாபுரம் கண்மாய் 20 ஆயிரம் ஏக்கரா பாசனம் பெறக்கூடிய கண்மாய். அதை ஹவுசிங்போர்டு எடுத்துக்கொண்டது. இதுபோன்ற விளைச்சல் நிலங்களை அரசு வீடு கட்டுவதற்கு ஹவுசிங்போர்டு எடுப்பதைவிட, விளைச்சலற்ற நிலங்கள் நிறைய இருக்கின்றன; அவற்றை எடுத்து, வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் என்ற நல்ல யோசனையை இங்கே சொல்கிறேன். ஏனென்று சொன்னால், விளைச்சல் நிலங்களை வீடுகள் கட்டுவதற்கு எடுப்பதன் மூலம், அங்கு விளைச்சல் பாதிக்கிறது என்பதால், ஒரு நல்ல நோக்கத்துடன் நான் அதை முன் வைக்கிறேன்.

அடுத்து காடு வளம். முந்தைய அரசு காலங்களில் காடுகள் அழிக்கப்பட்டு விட்டன. வனத் துறை எங்கே இருக்கிறது என்று தேட வேண்டியிருக்கிறது. எனது பகுதியிலே, மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து மரங்கள் அத்தனையும் வெட்டப்பட்டுவிட்டன. அதற்கு இந்த ஆண்டு, நிதி அதிகமாக ஒதுக்கி, 1,62,500 ஏக்கரா நிலத்தில் புதிதாக இந்த அரசு வன இலாகாவின் மூலமாக மரங்களை வளர்க்க திட்டமிட்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. அதன்மூலம் நமக்குப் பருவமழை கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 12—50

காவிரி நீர் பிரச்சினைபற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. காரணம், காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியில் நானும் உடன் இருந்தவன் என்ற முறையில் அவர்கள்— அதில் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

சுகாதாரம், குடும்பநலம். அது புரட்சித் தலைவர் அவர்களின் பெயரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டவன் என்ற முறையிலே நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், கிராமப்புற மக்களிடம் இப்போது நேரிடையாக மருத்துவர்கள் சென்று அவர்களுக்கு வைத்தியம் செய்கின்ற முறையைப் பார்க்கின்றபோது மகிழ்ச்சியடைகிறேன். புரட்சித் தலைவி வாழ்க என்று மக்கள் சொல்லி வாழ்த்துகின்றார்கள். (மேசையைத்தட்டும் ஒலி) இந்த நல்ல திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு நலப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் அரிசன மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்கள் ல்படுத்த இருப்பதை இந்த அறிக்கையிலே பார்க்கின்றபோது நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். 10 அம்ச திட்டத்தை வைத்து நடப்பு ஆண்டில் மட்டுமல்லாமல், வருகின்ற





ஆண்டிலும் அரிசன மக்களுக்கு அதிகமான திட்டங்களைக் கொடுத்து அவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியது. (மணி அடிக்கப்பெற்றது).

தொழிலாளர் நலம் என்று சொல்லுகின்றபோது புரட்சித் தலைவி அவர்கள் மூன்றாண்டு காலமாக மூடிக் கிடந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். அதேபோல் எனது தொகுதியில் மகாலட்சுமி மில்ஸ் என்று ஒன்று உள்ளது. அதை அரசு எடுத்து இப்போது நடத்திக் கொண்டிருக்கிறது. அங்கே தொழிலாளர்களிடம் 25 சதவீதம் சம்பளத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓய்வு பெறுகிறவர்களுக்கு கிராஜீவிடி கொடுக்க முடியவில்லை. அதைத் தனியாரிடம் கொடுக்கப் போவதாக தெரிகிறது. அதை அரசே தொடர்ந்து நடத்தி அந்த தொழிலாளர்களுக்குப் பல நல்ல வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் பெறுபவர்களுக்கு 20 ரூபாய் அதிகம் உயர்த்தியிருக்கிறார்கள். அதை இன்னும் கூட்டிக் கொடுக்கலாம். ஏனென்று சொன்னால் அங்கே போகின்ற லீக்கேஜ்-குறைந்த சம்பளம் பெறும் அவர்கள் சில பொருட்களைக் கொண்டு செல்கின்றதைத் தடுக்கும் வண்ணம் அவர்களுக்குச் சற்றுக் கூட்டிக் கொடுக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கு, இறந்தால் 21 ஆயிரம் கொடுப்பதாகச் சொல்லியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. ஆனால், ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இராமேஸ்வரத்தில் கடலிலே இறந்தவர்களுக்குச் சான்றிதழ் பெற்று தாசில்தார் மூலமாக மனுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இன்னும் அந்த உதவித் தொகை கிடைக்கப் பெறவில்லை. அதைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேரத்தின் அருமை கருதி பல்வேறு விஷயங்களைக்கூட விட்டு விட்டு, எனது தொகுதியில் உள்ள ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிலையூர் கால்வாய்க்கு 19 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அதில் இடர்பாடுகள் இருந்தாலும் அதை நீக்கி, உடனடியாக அந்த நிலையூர் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் 43 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. ஏறத்தாழ இரண்டு தொகுதிகளிலே வருகிறது. ஒன்று திருமங்கலம். அதில் 13 பஞ்சாயத்துக்கள் உள்ளன. மற்றொன்று எனது தொகுதியில் 30 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. மிகப்பெரிய ஒன்றியம். அதைஇரண்டாகப் பிரித்துச் செய்தால், அந்தப் பகுதிக்கு

நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்று சொல்லி, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் வைத்து எனது உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது எனது கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பு பெற்றதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

1991—92-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் பட்ஜெட் எஸ்டிமேட் ரூ. 5,347.34 கோடியாக இருந்தது. கூடுதல் வரிகள் அந்த ஆண்டிலே 70 கோடி ரூபாய்க்குப் போடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் மொத்தத்திலே சென்ற ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீடு-அதாவது ரிவைஸ்டு எஸ்டிமேட் 5,879.82 கோடி ஆக மாறியது. ஏறத்தாழ 550 கோடி ரூபாய். 70 கோடிக்குத்தான் வரி என்று நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தாலும் சுமார் 550 கோடி ரூபாய் மக்களிடத்திலே இருந்து, பல்வேறு இலாக்காக்களின்மூலம் இருந்து பெறப்பட்டிருக்கிறது. இதிலே ஸ்டேட் டாக்செஸ்-டாக்ஸ் ரெவின்யூவைப் பார்த்தால் மாநில அரசு வரிகள் மட்டும் ஏறத்தாழ 400 கோடி ரூபாய். அதிலே சுமார் 300 கோடி ரூபாய்க்கு மேலே சேல்ஸ் டாக்ஸ் மூலம் சென்ற ஆண்டு அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. ஆக, 1991—92-ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 550 கோடி ரூபாய் கூடுதலாக அரசுக்கு வருமானம் அல்லது மக்கள் வரியிலிருந்து வந்ததற்குப் பின்னாலும் கூட சென்ற ஆண்டினுடைய பற்றாக்குறை ஏறத்தாழ 401.47 கோடி ரூபாய் வந்திருக்கிறது.

பிற்பகல் 12—55

அதோடு இந்த ஆண்டு தொடக்கத்தில் நீங்கள் பார்த்தால் வரவு 6,446.54 கோடி ரூபாய்; செலவு 7,255.25 கோடி ரூபாய்; பற்றாக்குறை ஏறத்தாழ 808 கோடி என்று இந்த ஆண்டு கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் சென்ற ஆண்டு அறிவித்ததைப் போல 70 கோடி ரூபாய்க்கு மட்டும் வரி விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்க அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதைப்போல ஏனைய பற்றுவரவு போக ஒட்டுமொத்த பற்றாக்குறை 217.62 கோடியாக இருக்கும் என்கிறபோது இதிலே வருகிற சுமார் 600 கோடி ரூபாய் இந்த ஆண்டு மக்களிடமிருந்து சென்ற ஆண்டு 500 கோடி ரூபாய் வந்ததுபோல இந்த ஆண்டும் பல்வேறு





துறைகளின் கீழே அரசாங்கத்திற்கு வரியாக வரவிருக்கிறது. அதற்குப் பின்னாலும் 217 கோடி பற்றாக்குறை இருக்கப் போகிறது. சென்ற ஆண்டு பற்றாக்குறை, இந்த ஆண்டு பற்றாக்குறை இரண்டையும் சேர்த்து கூட்டிப்பார்த்தால் இந்த ஆண்டு இறுதியிலே ஏறத்தாழ 620 கோடி ரூபாய் பற்றாக் குறை இருக்கும். இதிலே 80 கோடி ரூபாய் மின்சார வாரியத் திற்கு ஈடு செய்யப்படாத தொகை இருக்கிறது. அதையும் சேர்த்து ஏறத்தாழ 700 கோடி ரூபாய் வருகிறது.

சென்ற ஆண்டு பார்க்கிறபோது மின்சார இலாகா மற்றும் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றிற்கு சுமார் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது பற்றாக்குறையிலே குறிப் பிடப்படவில்லை என்று சுட்டிக்காட்டி இருந்தார்கள், இந்த ஆண்டு அதைப்பற்றி எதையும் குறிப்பிடவில்லை. ஆக, நிதிநிலை அறிக்கையிலே அதையும் சேர்த்து அதாவது ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களுக்கு சப்சிடி எல்லாம் சேர்த்தால் ஏறத்தாழ 1000 கோடி ரூபாய் இந்த ஆண்டு இறுதியிலே பற்றாக்குறை வரும் என்று சொல்ல முடிகிறது,

பற்றாக்குறை பட்ஜெட் தவிர்க்க முடியாதது என்று மத்திய அரசும் கூறுகிறது ; மாநில அரசும் கூறுகிறது, என்றாலும் கூட பற்றாக்குறை பட்ஜெட் என்கிறபோது அதனாலே விலைவாசி கடுமையாக உயருகின்ற நிலை நிச்சயமாக ஏற்படும், அப்படி விலைவாசி உயருகிற போது அது ஏழை எளிய மககள். நடுத்தர மக்கள். சாதாரண மக்களைத்தான் தாக்கும், அதனால் ஏழை எளிய மக்கள் மேலும் ஏழைகளாக வறுமை நிலைக்குத் தள்ளப் படுகிற சூழ்நிலைதான் உருவாகும், இதிலே அரசாங்கத்தினுடைய வரவை செலவு செய்கிறபோது மூன்று காலமாகப் பிரித்து செலவு செய்கிறார்கள், சோஷியல் சர்வீசெஸ் பல்வேறு சமூக நலப் பணிகளுக்காக சென்ற ஆண்டு ஏறத்தாழ ஐயாயிரத்துச் சில்லரை கோடி ரூபாய் வருமானம் இருந்தபோது ஒதுக்கீட்டையும் இந்த ஆண்டு ஏறத்தாழ 6,500 கோடி ரூபாய் வருமானம் இருக்கிற போது ஒதுக்கீட்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 1991—92 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 2,572·95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1992—93 ஆம் ஆண்டுக்கு 2,972 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எண்ணிக்கை என்கிறபோது சென்ற ஆண்டு 100 கோடி. இந்த ஆண்டு 101 கோடி என்றால்கூட அது கூடுதல்தான், சென்ற ஆண்டைவிட கூடுதலாக ஒதுக்கியிருக் கிறோம் என்று சொல்லிக்கொள்ளலாம், ஆனால் உண்மை என்னவென்றால் சென்ற ஆண்டு வருமானத்தில் அந்தத் துறைக்கு ஒதுக்கீடு. இந்த ஆண்டு மொத்த வருமானத்தில் அந்தத் துறைக்கு ஒதுக்கீடு இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் எவ்வளவு ஒதுக்கீடு என்கிறபோது ஏறத்தாழ 3,102 கோடி ரூபாய் ஒதுக்கப் படவேண்டும், ஆனால் ஒதுக்கியிருப்பது 2,922 கோடி ரூபாய் தான், ஆக, சோஷியல் சர்வீசெஸ் — சமூக நலப் பணிகள் என் கிற தலைப்பிலே குறைவு ஏறத்தாழ 180 கோடி ரூபாய்,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1992 மார்ச் 13

பிற்பகல் 1—00

அதைப்போல அடுத்து எக்னாமிக் சர்வீசெஸ். இந்த இரண்டாவது பிரிவு அலாட்மெண்டை பார்க்கிறபோது சென்ற ஆண்டு அதாவது 1991—92—ல் 1.824 கோடி ரூபாய், இந்த ஆண்டு அதாவது 1992—93 அதாவது இந்த ஆண்டு 2.133 கோடி ரூபாய், சதவீதம் என்று பார்த்தால் கூட 34, 33 சதவீதம் வரும், ஒதுக்கி இருக்க வேண்டியது என்று பார்த்தால் 2.199 கோடி, ஒதுக்கி இருப்பது 2.133 கோடி, குறைவு ஏறக் குறைய 66 கோடி,

அடுத்து எக்கனாமிக் சர்வீசெஸ் என்ற அந்த ஹெட்டின் கீழே ஒதுக்கி இருக்க வேண்டியதில் 66 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது,

அடுத்த ஹெட் உதவி மானியங்கள் பங்குத் தொகைகள், அதாவது ' கிரான்ட்ஸ், எய்ட்ஸ் அன்ட் கான்ட்ரிபிஷன்ஸ் ' அந்த ' ஹெட் '—லே பார்த்தால் ஒதுக்க வேண்டியது 108 கோடி, ஆனால் ஒதுக்கி இருப்பது 102 கோடி, குறைவு ஏறக்குறைய 7 கோடி, இன்னும் விரிவாக.எல்லோருக்கும் புரியும்படி சொல்வது என்றால் ரெவின்யூ எக்ஸ்பெண்டிச்சரிலே மூன்று ஹெட்டிலே நீங்கள் ஒதுக்கியிருப்பது பற்றிச் சொல்கிறேன், அதிலே கேப் பிட்டல் எக்ஸ்பெண்டிச்சரிலே அதிகமாக்கி இருக்கிறீர்கள், அது வும் குறைவுதான், கேப்பிட்டல் எக்ஸ்பெண்டிச்சர், அதாவது அசஸ்ட்ஸ், அரசாங்கத்தின் சார்பிலே உருவாக்கப்படுகிற அசஸட்ஸ், அதற்கு நீங்கள் ஒதுக்குகின்ற எக்ஸ்பெண்டிச்சர்—செலவு—ஐட்டம் எப்படி இருக்கிறது என்று சொன்னால். 1991—92—க்கு 238 கோடி, 1992—93—ல் 285.28 கோடி, அதிலே யும் கூட கேப்பிட்டல் எக்ஸ்பெண்டிச்சர் என்கிற ஹெட்டிலே அதாவது இந்த ஆண்டு வளர்ச்சிக்காக 2 கோடி குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதுபற்றி இன்னும் விளக்கமாக சொல்லவேண்டுமென்றால் மொத்தமாக ஒவ்வொரு ஹெட்டிலேயும் உள்ளதைச் சொல்ல வேண்டும் என்றால் கல்வி அதாவது எஜுகேஷன், ஸ்போர்ட்ஸ் ஆர்ட் கல்சர் என்ற ஹெட்டிலே நீங்கள் பார்த்தால் ஒதுக்க வேண்டியதற்கும், ஒதுக்கி இருப்பதற்குமான வேறுபாடு அதாவது குறைபாடு 42 கோடி ரூபாய். எனவே இந்த ஆண்டுக்கு சென்ற ஆண்டை விட 4 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டிருக் கிறது.

அதுபோல் சமுதாய நலன் மற்றும் சத்துணவு. சோஷியல் வெல்ஃபேர் அன்ட் நியூட்ரிஷன் என்ற இந்தத் துறையின் கீழே நீங்கள் ஒதுக்கி இருக்க வேண்டியதற்கும், ஒதுக்கி இருப்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுகிறேன். சென்ற ஆண்டு மொத்த



1992 மார்ச் 13] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

வருமானம் — இந்த ஆண்டுக்கு நீங்கள் எதிர்ப்பார்க்கிற பட்ஜெட் எஸ்டிமேட்டைத்தான் சொல்கிறேன். ரிவைஸ்ட் எஸ்டிமேட் கூட அல்ல. சென்ற ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட். இந்த ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட் இரண்டையும் ஒப்பிடுகிறபோது சோஷியல் வெல்ஃபேர் அன்ட் நியூட்ரிஷனுக்கு ஏறக்குறைய 27 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கி இருக்கிறீர்கள்.

அதைப்போலவே அக்ரிகல்சர் அல்லைட் அக்டிவிட்டிஸ் என்ற அந்தத் தலைப்பிலே நீங்கள் பார்த்தால் ஏறக்குறைய 69 கோடி குறைவ்ாக இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறீர்கள். அதுபோல் குடி நீர், துப்புரவு, வீட்டுவசதி, நகர வளர்ச்சி, அதாவது வாட்டர் சப்ளை, ஹவுசிங் அண்ட் அர்பன் டெவலப்மெண்ட் என்ற அந்த ஹெட்டிலே பார்த்தால் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் 22 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கியிருக்கிறீர்கள்.

அதுபோல் ஊரக வளர்ச்சி, ரூரல் டெவலப்மெண்ட் என்ற அந்த ஹெட்டிலே பார்த்தால் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டது ஏறக்குறைய 62 கோடி ரூபாய். இது மட்டுமல்ல. இந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழே ஒதுக்கியதைக் கூட செலவு செய்யவில்லை. 1991–92லே ஒதுக்கப்பட்டது 317 கோடி ரூபாய். செலவானது 305 சோடி ரூபாய். ஆக 12 கோடி ரூபாய் அந்த நிதி ஒதுக்கீட்டில் கூட நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கு அதாவது எஸ்டிமேட் போட்ட அளவுக்குக்கூட செலவு செய்யப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஏறக்குறைய 3500 கோடி, 4000 கோடி என்று 1989–90–லே இருந்தபோது இந்தத் துறைக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டதோ அதைவிடவும் கூட குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 1991—92—லே 4,000 கோடி என்று இருக்கிறபோது இதற்கு ஒதுக்கியிருந்தது 324 கோடி ரூபாய். ஆனால் இப்போது 6,000 கோடி ரூபாய் வருமானம் என்கிறபோது நீங்கள் ஒதுக்கி இருப்பது ஏறக்குறைய 320 கோடி ரூபாய்.

அதுபோல் பாசனம் மற்றும் வெள்ளக்கட்டுப்பாடு—இர்ரிகேஷன் அண்ட் ஃப்ளட் கண்ட்ரோல் இதற்கு நீங்கள் ஒதுக்க வேண்டியதிலிருந்து குறைவாக ஒதுக்கி இருப்பது ஏறக்குறைய 18 கோடி ரூபாய்.

அடுத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் அதாவது ' ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அண்ட் ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்' அண்ட் ஆல் அதர் பேக்வர்டு க்ளாசஸ் ' இதைப் பொறுந்த வரையில் நீங்கள் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கியிருக்கிறீர்கள். அதாவது ஒதுக்கி இருக்க வேண்டியது 127 கோடி ரூபாய். ஆனால் நீங்கள் குறைவாக ஒதுக்கி இருப்பது ஏறக்குறைய 10 கோடி ரூபாய். எனவே

தமிழகம் வளர்ச்சிப் பாதையை நோக்கி வேகமாகப் போய்க்
கொண்டிருக்கிறது என்று சொல்லும்போது, எல்லா சட்டமன்ற
உறுப்பினர்களும் வாழ்த்துகிறார்கள். இது வளர்ச்சிப் பாதை
நோக்கி போகிற வேகம்தானா ? அல்லது உண்மையிலேயே
வளர்ச்சிப் பாதையை நோக்கித்தான் இது போகிறதா ? அல்லது
சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு பின்னுக்குப் போகிறதா
என்பதை நம்முடைய நாவலர் அவர்கள் பதிலுரையில் விளக்கு
மாறு கேட்டுக் கொள்கிறேன். விளக்குவார்கள் என்று
எதிர்பார்க்கிறேன். ஆக ஒவ்வொரு துறையின் கீழேயும்,
அரசாங்கத்தினுடைய வருமானம், மக்கள் தருகின்ற வரிப்பணம்
ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் உயர்ந்ததற்குப் பின்னாலேயும்,
அந்தந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் குறைந்திருக்கிறது.
இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் தொகுதிகளுக்
குப் போகின்றபோது, பல்வேறு இடங்களிலே பிரச்சினைகள்
வருகிறது. மக்களுடைய எதிர்பார்ப்பு இந்த அரசின் மேல் மிக
அதிகமாக இருக்கிறது. ஏறத்தாழ 5, 6 பேர்களைத் தவிர,
எல்லோரும் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள். தோழமை
யிலே இருக்கின்ற காங்கிரஸ் உட்பட. எனவே, எல்லோரும்
போகின்றபோது தொகுதியிலே இருக்கின்ற உங்களிடத்திலே
நிரம்ப எதிர்பார்க்கின்றார்கள். அந்தந்தத் துறையின் கீழே.
சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கிவிட்டு
இந்த மக்களை எப்படித் திருப்தி படுத்தப்போகிறார்கள் ?
என்ன சொல்லி திருப்தி படுத்தப்போகிறார்கள் ?
விளம்பரங்களாலே மட்டுமே மக்கள் திருப்தி அடையமாட்டார்
கள். சீனி, சர்க்கரை என்று பத்திரிகையிலே எழுதி காட்டினால்
மக்கள் திருப்தி அடைய மாட்டார்கள். அதைப் பார்த்து அவர்
களுக்கு இனிப்பு எச்சில் ஊறாது. சீனியோ, சர்க்கரையோ
நாக்கில் அள்ளிப்போட்டால் மகிழ்ச்சியடைவார்கள். பத்திரிகை
விளம்பரத்தை வைத்துக்கொண்டு மக்களுக்கு நாங்கள் சாதனை
செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருப்பதாலே பயன்
இல்லை. ஒதுக்கீடுகள் குறைந்திருக்கிறது.

பிற்பகல் 1—05

இரண்டாவதாக துறைவாரியாக எடுத்துக்கொண்டால்
மீனளம், அதிலே ஒன்றிரண்டை மட்டும் நான் குறிப்பிட விரும்பு
கிறேன். சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் இருப்பதை
சொல்கிறேன். சென்ற ஆண்டு என்ன சொல்லியிருக்கிறார்
களோ, அதை அப்படியே அதே பத்தியில், போன பட்ஜெட்டில்
டிலே 46-ஆவது பாராவிலே என். சி. டி. சி. நிதி உதவியோடு
சுமார் 11 கோடி, 6,050 மீனவர்களுக்கு கட்டுமரம், போட்டுகள்.
ஸ்டீம் போட்ஸ், வலை உதவி எல்லாம் செய்வோம் என்று
46-வது பத்தியிலே இருந்த அதே வாசகம் இந்த ஆண்டு வந்திருக்
கின்ற பட்ஜெட்டிலே 46 பத்தியிலே அப்படியே வருகிறது.
பணம் மட்டும் கூட வருகிறது. அவ்வளவுதான். 11.58 கோடி.
என்னவென்றால், சென்ற ஆண்டு செய்யவில்லை. இந்த ஆண்டு



சேர்த்து செய்கின்றபோது கூட வரும். சென்ற ஆண்டு எந்தப்
பணியும் நடைபெறவில்லை. இந்த ஆண்டு நீங்கள் அதை அப்ப
டியே போட்டு 15.88 கோடி, அதே 6,050 மீனவர்களுக்கு அதே
வலை, ஸ்டீம் போட்டு மற்றவைகள், எக்சட்ரா எக்சட்ரா
எல்லாம் செய்வோம் என்று சொல்லி அப்படியே வருகிறது.
சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே 15,000 என்பதை விபத்திலே
யாராவது இறந்தால் அதை அதிகரித்துத் தரப்படும் என்று வரு
கிறது. இந்த ஆண்டு புது அறிவிப்பு போல இந்த ஆண்டு
பட்ஜெட்டிலே மீனவர்களுக்கு விபத்தில் இறந்துபோனால்
நாங்கள் தருகிற சலுகை ரூபாய் 15 ஆயிரத்திலிருந்து ரூபாய் 21
ஆயிரமாக உயர்த்தப்படுகிறது என்று இந்த ஆண்டும் அப்படியே
எடுத்துப் போடப்பட்டிருக்கின்றது.

ஒன்றே ஒன்று இல்லாதது. கச்சத் தீவு. கச்சத் தீவை
மீனவர்களுக்காகத் திரும்பிப் பெற்றுத் தருவோம் என்ற வாசகம்
சென்ற தடவை இருந்தது. நான் இந்த ஆட்சியை, முதலமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்வேன். கச்சத் தீவைக்கூட திரும்பப்
பெற முடியாது. அப்படி திரும்பப்பெற்றால் எனக்கு மகிழ்ச்சி.
கச்சத் தீவை பெறுவதைவிட கச்சத் தீவிலே மீன் பிடிக்கின்ற
உரிமை தமிழ் நாட்டிலே இருக்கின்ற கடல் ஓரப் பகுதி மீனவர்
களுக்கு இருந்ததே அந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுங்கள்.
அங்கே போய் மீன் பிடிக்க, வர, வலைகளை எல்லாம் உலர்த்த,
அங்கே சென்று வர, இறங்கி வருவதற்காக இருந்த அந்த உரிமை
இருக்கிறதே அதையாவது மத்திய அரசிடம் இருந்து பெற்றுத்
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, சிங்கள ராணுவத் தொல்லையிலே இருந்து தமிழ
நாட்டு மீனவர்களைக் காப்பாற்றுங்கள். பல பேர்கள் காணாமல
போகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள். நமது ராணு
வத்தின் தொல்லைகளிலிருந்தும் காப்பாற்றுங்கள். அவர்களும்
இடையூறு செய்கிறார்கள். நம் மீனவர்களுக்கு எல்லாம் சின்ன
சின்ன அடையாள அட்டைகள் கொடுக்கிறார்கள். அது
காகிதத்திலே கொடுக்கிறார்கள். எங்கள் பகுதியிலே கடலோரப்
பகுதியிலே மீனவர்கள் நிரம்ப உண்டு. தயவுசெய்து பிளாஸ்டிக்
கிலே கொடுக்கச் சொல்லுங்கள். கட்டுமரத்திலே போட்டிலே
போகின்றபோது காகிதத்திலே கொண்டு போனால் அது எல்லாம்
கடலோடு கடலாகப் போய்விடுகிறது. அடையாள அட்டை
இல்லை என்று சொல்லி நம்முடைய ராணுவம் உதைக்கிறது.
சிங்கள ராணுவமும் சேர்த்து உதைக்கிறது. இந்த வசதிகளை
யாவது செய்து கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.
அவர்களுக்கு கட்டுகின்ற வீடுகளை.... (குறுக்கீடு) என்ன சார்?
(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 15 நிமிடங்கள்
முடிந்துவிட்டன.

[1992 மார்ச் 13

திரு. எஸ். திருநாவுக்கரசு : நேற்றெல்லாம் திரு. பழனி
சாமி 30 நிமிடம் பேசினார். அடுத்தது திரு. தே. குமாரதாஸ்
அவர்கள் 30 நிமிடங்கள் பேசினார். எனக்கும் பேச கொஞ்சம்
நேரம் கொடுங்கள். நான் என்ன திட்டியே பேசவில்லையே.
உங்களுக்கு நல்லதுதானே சொல்கிறேன். கரெக்ட் பண்ணுங்கள்
என்று தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மணி அடிப்பது
ஒரு அறிவிப்புதான்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அங்கே வந்து சொல்லமுடியாது.
இங்கே இருந்து சொல்கிறேன். கரெக்ட் பண்ணிக்கொள்ளுங்கள்.
உங்களுக்குத்தான் நல்லது.

அடுத்தது, கல்வி. கல்வியிலே நீங்கள் பார்த்தால், நான்
ஒன்று கேட்டுக்கொள்ளவேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களுடைய பெயராலே தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சா
வூரிலே இருப்பதற்கு, எம். ஜி. ஆர். அவர்களுடைய பெயரை
சூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புரட்சித்
தலைவர் பெயரை விட பொருத்தமான பெயர் இருக்கமுடியாது.
பாரதியாருடைய பெயரால், பாரதிதாசன் பெயரால், தமிழ்
அறிஞர்களின் பெயரால், அவர் பல்கலைக் கழகத்தை உருவாக்கி
னார். உலகத் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கினார். இரண்டாவது
மகாநாட்டை நடத்தினார், தமிழ்ச் சங்கத்தை தஞ்சாவூரிலே
உண்டாக்கினார். இதையெல்லாம் செய்தவர் எம். ஜி. ஆர்.
அவர்கள். எனவே அவருடைய பெயர் இருக்கிற விதத்திலே
தஞ்சாவூரிலே இருக்கின்ற தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்கு அவரு
டைய பெயரை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—10

இதை கிழித்துப் போடலாமா என்று பார்த்தேன். அது
வேண்டாம், மரியாதையில்லை என்பதனால் சொல்கிறேன்.
கிழித்துப் போடுகின்ற உணர்வோடு சொல்கிறேன். இதிலே
தந்தை பெரியாருடைய பொன்மொழிகள் இருக்கின்றன.
அண்ணாவினுடைய பொன் மொழிகள் இருக்கின்றன. வரவேற்
கிறேன். அதற்கு அடுத்து, பல அறிஞர்களுடைய பொன் மொழி
கள் எல்லாம் இருக்கின்றன. புரட்சித் தலைவர் எம். ஜி, ஆர்.
அவர்கள் 40 ஆண்டுகள் பொது வாழ்க்கையில் இருந்திருக்கின்
றார்கள். அதுபோல 11 ஆண்டுக் காலம் இந்த நாட்டின்
முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர்
எம். ஜி. ஆர். -ஐப் பற்றி இதிலே இரண்டு ‘ செண்டன்ஸ் ’
வருகிற மாதிரிகூட ஒன்றுமே அவர் சொல்லவில்லையா ? ஏன்
இதிலே சேர்த்திருக்கக் கூடாது ? புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.





புகழால் ஏற்பட்ட இந்த ஆட்சியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
புகழை மறைக்காதீர்கள். அது உங்களுக்குத்தான் ஆபத்து
என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.
அடுத்த ஆண்டு இப்படி இருந்தால் நிச்சயமாக கிழித்துப் போடு
வேன். ‘ டைரி ’-யிலே புரட்சித் தலைவர் எம். ஜி.ஆர். அவர்
களுடைய பெயரோ படமோ நிச்சயமாக இடம்பெற வேண்டும்.
பட்ஜெட்டிலே இடம் பெற வேண்டும். அதிலே என்ன தப்பு ?
அதற்கு முன்னாலே பார்த்தால் இது அண்ணாவினுடைய அரசு
என்பார்கள். இதிலே எம். ஜி. ஆர். உடைய அரசு என்று
சொல்லுங்கள். தமிழ்நாட்டிலே இருந்த செல்வாக்குள்ள தலை
வர்களிலே புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். தான் மிகப் பெரிய
செல்வாக்கு உள்ள தலைவர், அதற்கு முன்பு இறந்த தலைவர்
களாக இருந்தாலும்சரி, உயிரோடு இருக்கின்ற தலைவர்களாக
இருந்தாலும்சரி, இனிமேல் வரப்போகின்ற தலைவர்களாக
இருந்தாலும்சரி, இந்த உண்மையை நீங்கள் ஒத்துக்கொள்ள
வேண்டும். இல்லையென்றால் உங்களுக்குத்தான் கஷ்டம்.
எனக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. அதுபோல கல்வித் துறைக்கு
ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த ஒதுக்கீடுகளைப் பொறுத்த வரையில்
சென்ற ஆண்டு ஏறக்குறைய 1,400 பேர்களுக்கு.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் திருநாவுக்கரசு அவர்கள் போற்றுதலுக்குரிய நம்முடைய
தலைவர் புரட்சித் தலைவருடைய பெருமைகளை இங்கே
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவரோடு ஒரு 20 ஆண்டுகள்
மிக மிக அணுக்கமாக பழகிய தம்பிகளில் நானும் ஒருவன் என்
பதை அவர்கள் உணர்வார்கள். ஆக, போற்றுதலுக்குரிய
புரட்சித் தலைவர் அவர்களுடைய புகழை சிந்தாமல் சிதறாமல்
எப்படி காத்து வருகிறார்கள் என்பதை எங்களைப்போல ஒரு
20 ஆண்டுகள் மிக அணுக்கமாக புரட்சித் தலைவருடைய சுக
துக்கங்களிலே எல்லாக் காலங்களிலுமே இருந்த நாங்கள் அறி
வோம். இந்த 8 மாதக் காலத்தில் இதே மாமன்றத்தில் 9 தலை
வர்களுடைய படங்களோடு 10-ஆவது படத்தையும் திறந்து
வைத்த பெருமை புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு. அது
போல புரட்சித் தலைவருடைய பெயராலே ஒரு மாவட்டத்தை
யும் உருவாக்கியப் பெருமை உண்டு. ஏன் என்றால், இப்படி
ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரம் காரியங்கள் மூலம் அவர்
உயர்த்தப்பட்டிருக்கிறார் என்பதையும் போற்றுதலுக்குரிய
திருநாவுக்கரசு அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தயவு
செய்து எதையோ நினைத்துக் கொண்டு, எதற்கோ இடிக்க
வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
திருநாவுககரசு அவர்கள் இங்கே பேசினார்கள். புரட்சித் தலை
வருடைய பெயராலே மாவட்டம் அமைத்தது புரட்சித்
தலைவி அரசு என்பதை அவர் நினைவிலே கொள்ளவேண்டும்
புரட்சித் தலைவர் பெயராலே போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தி
யும் புரட்சித் தலைவருடைய சமாதியை 1 கோடியே 20 லட்சம்
ரூபாய்க்கு அழகுப்படுத்துகின்ற நிகழ்ச்சியாக அந்தப் பணியையும்
இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கிறார்கள்.
புரட்சித் தலைவர் அவர்களுடைய படத்தை இன்றைக்குச்சட்ட
மனறத்தில் திறந்து இருக்கிறார்கள். புரட்சித் தலைவருடைய
புகழை நாங்கள் மறந்தவர்கள் அல்ல. அவருக்கு வேண்டுமானாலும்
உரிமைஇருக்கலாம். எங்களுக்கு அந்த உரிமை அவரைக் காட்
டிலும் அதிகமாக இருக்கிறது என்பதைநான் இந்த நேரத்தில் தெரி
வித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அண்ணா
வின் தம்பிகளுடைய அமைச்சரவையோ, புரட்சித் தலைவியோ
புரட்சித் தலைவர் மீது ஏதோ பாசம் இல்லாமல் இருக்கிறது
என்று பேசிக் கொண்டிருப்பது அவர் அரசியல் ஆதாயம் தேட
நினைக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அண்ணன் கே. ஏ. கே. சொன்ன
தைத் தான் மற்ற அமைச்சரும் சொல்கிறார்கள். புதிதாக
ஒன்றையும் சொல்லவில்லை. மேலே, தயவு செய்து பேசாதீர்
கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
இந்த டைரிப் புத்தகத்தை கிழித்துப் போடுவதாக சொல்கிறார்
கள். தெருவிலே யார் யாரோ கிழித்துப் போட்டிருக்கிறார்கள்.
இவர் கிழித்து போடுவதைத் தடுக்க முடியாது. சாலையிலே
நிறைய பேர் எதை எதையோ கிழித்துக் கொண்டு அலைந்து
கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நல்லது செய்ய
வேண்டுமென்றால் அவர்களைச் சேர்க்க வேண்டிய இடத்திலே
சேர்ப்போம்.



1992 மார்ச் 13]

திரு. எஸ். திருநாவுக்கரசு : புரட்சித் தலைவர் அன்றைக்கு
கட்சியை ஆரம்பித்தபோது புரட்சித் தலைவரிடத்திலேயிருந்து
ஓடி அன்றைக்கு எதை எதையோ கிழித்துக் கொண்டு திரிந்தவர்
கள் மந்திரியானால் இப்படிதான் பதில் வரும். அன்றைக்கு
அப்படி இருந்தவர்தான் இவர் எல்லாம். புரட்சித் தலைவர்
இந்தக்கட்சியை ஆரம்பித்தபோது கட்சியிலிருந்து வெளியே போய்
கிழித்துக் கொண்டிருந்த அவர் இப்பொழுது மந்திரியாகி இருக்
றார். அதனால் அப்படித்தான் சொல்வார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினரும், அமைச்சர்களும் சொந்த விவகாரங்களைத் தயவு
செய்து பேசாமல் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி தொடர்ந்து
பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கைத்தறித் துறை
அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள்
சாதாரண நடிகராக இருந்த நேரத்தில், புரட்சி நடிகராக இருந்த
நேரத்தில், கடன்காரன் குடும்பமாக இருந்த குடும்பத்தை கடன்
இல்லாத குடும்பமாக ஆக்கி, இலவசமாக நடித்து ....
(குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : உங்களைப் பற்றி பேச
வில்லை.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : ஆதலால், அப்படிப்
பட்டவர்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை
அஸ்தமனம் செய்தார்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய
பெயர் நெசவாளர் சங்கதத்திற்குக் கூடாது என்பதற்காக நெச
வாளர் நலத் திட்டம் என்ற பெயரை மாற்றிய நேரத்தில்,
புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்தவுடன்,
'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நெசவாளர் நலத் திட்டம்'
என்று அறிவித்த தலைவி தாயுள்ளம் கொண்ட தலைவி, புரட்சித்
தலைவி என்பதை உங்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்
பட்டுள்ளேன். எங்கேயும், எதிலேயும் புரட்சித் தலைவர் அவர்
களுடைய புகழை வளர்த்துக் கொண்டிருக்கிற தலைவி புரட்சித்
தலைவி. இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். புரட்சித் தலைவர்
அவர்களுக்கு தமிழகத்தில் முதன்முதலாக 'எம்.ஜி.ஆர். மன்றம்'
அமைந்தவன் நான் என்பதை உரிமையோடு தெரிவித்துக் கொள்
கிறேன். எம்.ஜி.ஆருக்கு சாதாரண எம்.ஜி.ஆர். பொன்மனச்
செம்மல் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மக்கள்
திலகம் எம்.ஜி.ஆர். என்று பெயர் சூட்டியவர்கள் நாங்கள்.
எங்களுக்கு உரிமை இருக்கிறது. சாதாரண நடிகர் எம்.ஜி.ஆருக்குப்
பின்னாலே வந்தவர்கள், அவர் ஆட்சிப் பீடத்திற்கு வந்த பிறகு

ஆதாயத்திற்காக கட்சிக்குள் நுழைந்து, சுயநல வேட்டைக் காடாக்கி, புரட்சித் தலைவரைக் காட்டிக் கொடுக்கிற பரம்பரை எங்கள் பரம்பரையல்ல. அவருடைய அரசியல் எதிரியாக இருந்த கொடியவர்களின் கூடாரத்தை நோக்கிப் போகாத பரம்பரை இந்த எம்.ஜி.ஆர். மன்ற பரம்பரை என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1—15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு அவர்கள் (குறுக்கீடு) திரு. கே. பி. ராஜு அவர்கள் அங்கிருந்து பேசக்கூடாது. அவருடைய இருக்கைக்குச் செல்ல வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாகரம் இவ்வளவு தூரம் போவதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசுதான். ஏனென்றால், மான்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயர், புகழ் காப்பாற்றப்பட வேண்டும், அவருடைய செல்வாக்கு நிலை நாட்டப்பட வேண்டும் என்பதில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், இந்த அமைச்சரவையிலே இருக்கிறவர்களுக்கும், ஆளுங் கட்சியிலே இருக்கிறவர்களுக்கும் எள்ளளவும் குறைவில்லை. அது தனக்குத்தான் அதிகமாக இருக்கிறது என்று காட்டுவதற்காக, மாண்புமிகு உறுப்பினர் திரு, திருநாவுக்கரசு அவர்கள் பேசுவது பொருத்தமல்ல. இதை நாடு நன்றாக அறியும். புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே எவ்வளவு அன்பும், ஆதரவும் காட்டி வருகிறார்கள் ஆளுங்கட்சியினர் என்பது நாட்டுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய பொன்மொழி இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். புரட்சித் தலைவர் பொன்மொழி போன்றவை மட்டுமல்ல, காந்தியார் பொன்மொழி நேருவின் பொன்மொழி, ஆபிரஹாம் லிங்கன் பொன்மொழி, ரூஸ்வெல்ட் பொன்மொழி, போன்றவை எல்லாம் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதில் தவறில்லை. ஒன்று இல்லை என்பதற்காக நாட்குறிப்பு ஏட்டை கிழித்துப் போடுவேன் என்கிறார்கள். நடக்காத ஒன்று நடந்தால், உண்மைக்குப் புறம்பாக நடந்தால், முறை தவறி நடந்தால், கிழித்துப் போடுவதிலே அர்த்தம் இருக்கிறது. ஒன்று இல்லை என்பதற்காக கிழித்துப் போடுவேன் என்றால் கிழித்துப் போடுவதும், கிழித்துப் போடாததும் அவரவர்களுடைய விருப்பம். இல்லை என்பதற்காக நான் கிழித்துப்போடுவேன் என்று சொன்னதிலிருந்து ஆரம்பித்தது தான் இவ்வளவு சர்ச்சையும். எனவே, இந்த விவகாரத்திற்குள் மேலும் போக வேண்டியதில்லை. பட்ஜெட்டுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே மாண்பமிகு உறுப்பினரை பட்ஜெட்டிற்கு வரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : 1991-92-ஆம் ஆண்டுக்கு எத்தனை லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது என்பதை உறுப்பினர் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதை அவர்தான் சொல்லவேண்டும். எவ்வளவு செலவு செய்திருக்கிறார், எவ்வளவு அதிகம் கொடுத்திருக்கிறார் என்பதை அவர்தான் சொல்லவேண்டும் அல்லது நாவலர் சொல்லட்டும். போன ஆண்டு எவ்வளவு செலவு செய்திருக்கிறோம். இந்த ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்று அவர் பதில் சொல்லும் போது சொல்லட்டும். ஆனால் அதிகமாகக் கொடுக்கவில்லை என்றுதான் நான் சொல்கிறேன். எனவே இது ஒரு சுய விளம்பரத் திற்காகத்தான் பயன்படும். உண்மையிலேயே இந்தச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட வில்லை. இதனால் கிராமங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் பயன் இல்லை. (குறுக்கீடு).... எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுங்கள். 5 இலட்சம்தான் ஸ்பெஷல் கிராண்ட்டில் கொடுத்திருக்கிறோம், அல்லது 4 இலட்சம் தந்திருக்கிறோம் என்று சொல்லுங்கள். பழசையெல்லாம் சேர்த்துப்போட்டு கணக்குப்போட்டு பொதுமக்களிடமும், பத்திரிகைகளிடமும்·· (குறுக்கீடு).. அதனால் அரசாங்கத்திற்கு கெட்ட பெயர்தான் வரும். அவ்வளவுதான்.

அடுத்ததாக மின்சாரம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில், கி. பி. 2000-வது ஆண்டில் 4,300 மெகாவாட் பற்றாக் குறை ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1995-ல் ஏறக் குறைய 1,750 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மின்சாரத் துறையில் உற்பத்தி செய்திருப்பது 250 மெகாவாட். இதே ரேஞ்சில் நீங்கள் போனால் கூட 3 வருடங்களில் மொத்தம் 750 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி பண்ணலாம். ஆக 1995-லும் 1,000 மெகாவாட் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை ஏற்படும். இது ஜாயின்ட் செக்டாரில் ஜெயங்கொண்டத்தில் ரூபாய் 5,000 கோடியில் ஏறத்தாழ 1,500 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள மின் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிக்கப் போகிறோம் என்று போன பட்ஜெட்டிலேயே சொல்லப்பட்டது. சொல்லி 6 மாதம் ஆகி விட்டது. போன பட்ஜெட்டுக்கும் இந்த பட்ஜெட்டுக்கும் 6 மாதம் ஆகிவிட்டது. ஆகவே இப்போது ரூபாய் 2,000 கோடி அதிகம் போய், இந்த ஆண்டு என்னவென்றால் ரூபாய் 7,000 கோடியில் நிற்கிறது. 6 மாதத்திலே அதே 1,500 மெகாவாட் மின் உற்பத்தியை ஆரம்பிக்கப் போகிறோம் என்று இந்த

பட்ஜெட்டிலே சொல்லியிருக்கிறீர்கள். இந்த 5—6 மாதத்திற்
குள் ஏன் 2,000 கோடி ரூபாய் அதிகமானது ? அதை விளக்குமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதிலே நீங்கள் ஒதுக்கியிருப்பது இரண்டரைக் கோடி ரூபாய்.
இந்த ரேட்டில் நீங்கள் ஒதுக்கினால் 50 வருஷம் ஆனால் கூட
முடியாது. அடுத்த ஆண்டிலே இதுவே 11,000 கோடியாகிவிடும்.
ஆகவே இன்னும் ஐம்பது ஆண்டுகளானாலும் மின்சாரத்தில்
அந்த அளவுக்கு உற்பத்தியையும் தன்னிறைவையும் பெறப்போவ
தில்லை. ஆகவே அதிலே உரிய கவனத்தைச் செலுத்த வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அரைமணி நேரத்திற்கு
மேல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். தயவுசெய்து இதோடு
முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> சரி. பேரவைத் தலைவர்
வந்துவிட்டார். விரைவில் முடித்தாக வேண்டும். முடித்து
விடுகிறேன். இன்னும் இரண்டு நிமிடம் மட்டும் கொடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இரண்டு நிமிடம் இல்லை
ஒரு நிமிடம்தான். இன்னும் இரண்டு தலைவர்கள் பேசவேண்டும்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மொத்தத்தில் இந்த பீரியட்,
அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வுக்குச் சாதகமான காலக்
கட்டம். ஏனென்றால், அனைத்திந்திய அண்ணா தி.மு.க.
எம்.பி.-க்கள் தயவோடுதான் இந்தத் தடவை திரு. நரசிம்மராவ்
அரசாங்கமே தப்பித்திருக்கிறது. கருத்து வித்தியாசம் இருக்க
லாம். ஆனால் எல்லோரும் வந்து ஓட்டு போட்டிருந்தால் ....
(குறுக்கீடு) மணியடிக்கப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் ஒரு நிமிடம்
இரண்டு நிமிடம் அதிகமாகக் கேட்டிருப்பது நிதிநிலை அறிக்கைக்
குச் சம்பந்தம் இல்லாத பிரச்சினையில் பேசுவதற்காக வேண்டாம்
முடித்துக் கொள்ளுங்கள்.

பிற்பகல் 1—25

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> நான் என்ன சொன்னேன் என்
றால், சென்ட்ரல் கவர்ன்மெண்டை இன்சிஸ்ட் பண்ணுங்கள்
என்று சொன்னேன். நல்ல டைம், புராப்பர் டைம், மத்திய
அரசை வலியுறுத்தி, வற்புறுத்தி அதிகமான திட்டங்கள் நீங்கள்



திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, எனக்கு எதிரே உட்கார்ந்து இருக்கிறவர்க
ளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மேல் பற்று இல்லை, பாசம்
இல்லை என்றெல்லாம் நான் சொல்லவில்லை. அமைச்சர்களுக்கு
எம்.ஜி.ஆர். மேலே பிரியம் இல்லை, பக்தி இல்லை, பாசம் இல்லை
என்று நான் சொல்லவில்லை. முதலமைச்சருக்கு அப்படி இல்லை
என்று நான் சொல்லவில்லை. ஏற்கனவே சிலவற்றை செய்திருக்
கிறீர்கள் விடுபட்டதை நான் சுட்டிக் காட்டுகிறேன். அதிலே
என்ன தப்பு? அதையெல்லாம் செய்யுங்கள் என்று சொல்கிறேன்.
நான் கிழித்துப் போடவில்லை. இந்த வருஷம் இருக்கிற குறை
அடுத்த வருஷம் இருந்தால் அப்படிச் செய்வேன் என்று சொன்
னேன். கரெக்ட் பண்ணுங்கள் என்று சொல்கிறேன். அதில் என்ன
தப்பு?

கல்வித் துறையைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு 1400
ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று இருந்தது. இந்த
ஆண்டும் அது திருப்பி வருகிறது. அது புதிதா, பழையதா? அது
அப்படியே திருப்பியும் வருகிறதா அல்லது இந்த ஆண்டு புதிதாகப்
போடப்பட்டதா என்பதை நாவலர் அவர்கள் விளக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, உயர் கல்விக்கான கட்டணங்கள் ஏற்றப்
பட இருக்கிறதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, உயர் கல்விக்
கான கட்டணத்தை ஏற்றக்கூடாது என்று கேட்டுக் கொள்கி
றேன். சத்துணவுப் பணியாளர்களுக்கு 10, 20 ரூபாய் உயர்த்தப்
பட்டிருக்கிறது. அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். 10 ஆண்
டுக்காலமாக அவர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள். 500
ரூபாய் அவர்களுக்கு அதிகரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், நெசவாளர்களுக்குக் கட்டப்படும் வீடுகளின்
எண்ணிக்கையை 5,000 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். கிராம நலப் பணியாளர்கள் 12,000 பேர்கள்
பெண்கள். அதை 26,000 பேர்களாக உயர்த்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். ஊரக வளர்ச்சித் துறையிலே ஒவ்
வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்
கிறது. அது உண்மையல்ல. சாதாரண விளம்பரத்திற்காக
அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது எம்.எல்.ஏ.-களுக்கே
தெரியும். ஒரு கோடி ரூபாய் என்பது ஜவஹர் வேலைவாய்ப்புத்
திட்டத்திற்கு. இதற்கு 60 இலட்சம் ரூபாய் மத்திய அரசு
ஆண்டொன்றுக்குத் தருகிறது. ஆகவே இரண்டு வருடத்திற்கும்
சேர்த்து 120 இலட்சம் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் தருகிறது.
தெரு விளக்கிலிருந்து, ஒவ்வொரு டிபார்ட்மெண்ட் ஹெட்டிலும்
எவ்வளவு பணம் தருகிறதோ அதையெல்லாம் சேர்த்து ஒரு
ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று போட்டு, அதற்
சிறப்பு தன்னிறைவுத்திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

உண்மையைச் சொல்லிவிட்டால், தொகுதிக்கு எம்.எல்.ஏ, செல்லும்போது மக்கள் கேட்டால், இந்த வருடம் 5 இலட்சம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லமுடியும், ஒரு கோடி ரூபாய் என்று சொன்னால், ஏன் எங்களுக்கு இவைகளைச் செய்யவில்லை என்று எம்.எல்.ஏ.விடம் சண்டைக்கு வருவார் கள். உண்மையிலேயே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் ? (குறுக்கீடு).... நிதியமைச்சர் சொல்லட்டும்.

பிற்பகல் 1—20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடர்புடைய துறை அமைச்சர்கள் பதில் சொல்வார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : எனவே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சியிலிருந்தபோது என்ன செய்வார் என்றால், ஒவ்வொரு தலைப்பிலும் எவ்வளவு ஒதுக்கப்பட்டதோ அதை அவர் கணக்கில் எடுப்பதில்லை. சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்றால் 40, 50 இலட்சம் ரூபாய் என்று தனியாகக் கொடுத்தார் அந்த தலைப்புகளில் வந்ததையெல்லாம் சேர்த்து அவர் சொல்ல வில்லை. ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்டிலும் எவ்வளவு தொகை ஆகிறதோ அதையும், சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் எவ்வளவோ, பிறகு எம்ப்ளாய் மெண்ட் ஸ்கீமில் எவ்வளவு கிடைக்கிறதோ எல்லாவற்றையும் சேர்த்து மிச்சம் இருப்பதை கொஞ்சம் போட்டு ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் செலவாகிறதா இல்லையா என்பதை மட்டும் உறுப்பினர் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, சென்றமுறை ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 99 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கும். இந்த வருஷம் ரூபாய் 1,000ஐ சேர்த்துக் கொடுத்தால், அதற்குச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்று பெயரா ? ஒரு கோடி ரூபாய் கொடுத்தோம் என்று சொல்வதுதான் அதன் பொருளா ? அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். ஒரு கோடி ரூபாய், வரிசையாக ஆண்டாண்டுக் காலமாக தெரு விளக்குகளிலிருந்து, சாலைப் பராமரிப்பிலிருந்து குடிதண்ணீருக்கு, கிணறு வெட்ட என்று எல்லாம் வரிசையாக ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்டிலும் ஆகும் செலவைச் சேர்த்து ....





திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் என்பதே பொலிட்டிக்கல் டாக்குமெண்ட் தான். பட்ஜெட் நோட்டைப் பார்த்தாலே தெரியும். It is a Statement It is Statement consisting of all economic factors. அதனால் அதைச் சொல்வதில் தப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்களுடைய கருத்து. நீங்கள் அதிலே விவாதத்திற்குப் போக வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் விவாதத்திற்குள் செல்ல வில்லை. மற்றவர்களுக்கு வேறு கருத்து இருக்கலாம். அது வேறு. அதற்காகத்தான் தமிழ்நாட்டில் எடுக்கிற நடவடிக்கை களை ஆதரிக்கிறோம். வரவேற்கிறோம் என்று முதலிலேயே சொல்லி விட்டேன். இங்கேயுள்ள தமிழர்கள், இரண்டு இலட்சம் பேர் அகதிகளாக போகிறார்கள். எல்லோரையும் இராணுவம் கொன்றுகொண்டிருக்கிறது. இங்கேயிருந்து இரண்டு இலட்சம் பேரையும் கூட சேர்த்து அனுப்புங்கள் என்று சொல்லி கொல்லச் சொல்லக் கூடாது. தமிழ்நாடு அரசுதான் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். இராணுவத்தினரால் தமிழர்களுக்குப் பாதகம் ஏற்படும் போது மத்திய அரசை நாம் வலியுறுத்தியிருக்கிறோம். மத்திய அரசை நாம் கட்டாயப்படுத்தியிருக்கிறோம். இப்போது என்ன நிலை என்றால் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். அடுத்து திரு. எஸ். வி. சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவரும், செழுமிய அனுபவங்களைப் பெற்றவருமான நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து இருக் கிறார்கள். எங்களுக்கு வலுவூட்டுகின்ற வகையிலே நிதி அமைச் சர் அவர்கள் இன்றைக்கு அவரும் சேர்ந்து செந்துண்டு அணிந்து இருக்கிறார் என்பதற்காக நான் அவரைப் புகழவில்லை.....

பிற்பகல் 1—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனு மதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். வி. சண்முகம் : உண்மையிலேயே நாடே போற் றும் ஒரு தலைவர் இந்த அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார். இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது, எந்த எண்ணத் தோடு படிக்கிறோமோ அந்த எண்ணம் பிரதிபலிக்கும். ஒளி

படைத்த கண்களோடு படித்தால், இந்த அறிக்கை நன்றாகத்
தெரியும்; குன்றிவிட்டமனதோடு படித்தால், அது கோளாறாகத்
தெரியும். ஆக, எந்த நிலையில் படிக்கிறோமோ, அப்படித்
தான் அது பிரதிபலிக்கும். நான் அதிகமாகப் புள்ளி விவரங்
களை அடுக்கிக் கொண்டிருக்க விரும்பவில்லை.
கோடியை எடுத்து அந்த கோடியிலே போட்டால் அது சரியாக இந்த
வந்துவிடும் என்றெல்லாம் விளக்கங்களைச் சொல்லிக் கொண்டு
இருக்க விரும்பவில்லை. பொதுவாக நிதிநிலை அறிக்கையிலே
பற்றாக்குறை இருக்கும்; வரி விதிப்பும் இருக்கும் என்பது இந்த
மாநிலத்தில் மட்டுமல்ல எல்லா மாநிலங்களிலும், இந்திய அரசி
லும் இருக்கின்ற நிலைதான். இந்த நிலை இப்போது மட்டு
மல்ல. பல்லாண்டுக் காலமாகவே இருக்கிறது.
இந்தக் கட்சி ஆட்சி இப்படி, அந்தக் கட்சி ஆட்சியிலே இப்படி அதுவும்
என்று இல்லாமல் எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் இதே நிலை
தான் இருந்து வருகிறது. இந்த உண்மையை மறந்து விட்டு
மறந்துவிட்டு என்றல்ல, இந்த உண்மையை ஒழித்துவிட்டு, மனம்
போன போக்கில் விவாதங்களைத் தொடங்குகிறார்கள். இந்த
சபையிலே முதலமைச்சராக இருந்த ஒருவர், அதுவும் ஓராண்டு
அல்ல, ஈராண்டல்ல, 9 ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த
ஒருவர் இந்த வரவு–செலவுத் திட்டத்தைப் பற்றி ''படித்தவர்
பாட்டைக் கெடுத்தார்; எழுதியவர் ஏட்டைக் கெடுத்தார்''
என்று சொல்லி இருக்கிறார். பயங்கரவாதத்தை தமிழ்
மண்ணிலே விதைத்து, தமிழ் சமுதாயத்தின் அமைதியை
கெடுத்து, நாட்டையே கெடுத்தவர் இப்படிச் சொல்லி இருக்கி
றார். (மேசையைத் தட்டும் ஒலி). இன்னொருவர் இந்த
சபையிலே இப்போதும் இருப்பவர்—அவர் இங்கு வரும்போது
அப்படிச் சொல்லவில்லை; வெளியிலே அறிக்கை சமர்ப்பிக்கும்
போது சொன்னார். 'இந்த வரவு செலவுத் திட்டத்தில்
4 கோடிக்கு சலுகை இருக்கிறது; ஆனால், 400 கோடிக்கு வரி
இருக்கிறது' என்று அப்பட்டமான ஒரு **சொன்னார்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ** என்பது அவைக்
குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

<u>திரு. எஸ். வி. சண்முகம் :</u> 4 கோடிக்குச் சலுகை, 400
கோடிக்கு வரி என்று வெளியிலே சொன்னால் அது **உண்மைக்கு
புறம்பானதுதானே ?

அதேபோல் இன்னொரு உறுப்பினர்கூட 100 கோடிக்கு வரி
போட்டு இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார். உண்மை
யிலேயே அறிக்கையிலே நாவலர் அவர்கள் சொல்லி இருப்பது,
70 கோடி ரூபாய்க்குத்தான் வரி போட்டு இருக்கிறார்கள்.
திடாந்திரமாக எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக,

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.





பெற வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். சேது சமுத்திர திட்டம், நெய்வேலி திட்டம் மற்றும் கோஸ்டல் ஏரியா ஸ்கீம் ஆகியவற்றையெல்லாம் சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறீர்கள். ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி என்று ஏகப்பட்ட திட்டங்களை ஏற்கெனவே அறிவித்திருக்கிறீர்கள்.

இன்னுமொன்று. தொழில் துறையில் ஒன்றும் நடக்கவில்லை. உதாரணத்திற்கு சென்ற ஆண்டு நீங்கள் அறிவித்தது—ஏறக்குறைய ரூபாய் 250 கோடிக்கு டி.ஐ.ஐ.சி.-யில் கடன் கொடுப்போம் என்பது. அதேமாதிரி ரூபாய் 70 கோடிக்கு சிப்காட் மூலம் லோன் கொடுப்போம் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் உண்மையிலே கொடுத்திருப்பது சிப்காட் மூலம் ரூபாய் 35—40 இலட்சம்தான் கடந்த ஆண்டு. அதே மாதிரி டி.ஐ.ஐ.சி மூலம் கொடுத்தது வெறும் ரூபாய் 130 கோடிதான். 1990-91-ம் ஆண்டில் நீங்கள் அச்சீவ் பண்ணுவோம் டி.ஐ.ஐ.சி. மற்றும் சிப்காட் மூலம் என்று சொன்னதைவிட இந்த ஆண்டு அதனுடைய பட்ஜெட்டே குறைவாக இருக்கிறது. இந்த வருடம் என்ன சொல்லுகிறீர்கள் என்றால், ரூபாய் 150 கோடி அளவிற்கு அச்சீவ் பண்ணுவோம் என்று. டி.ஐ.ஐ.சி-யும், 'சிப்காட்-டும் தான் சிறுதொழில் மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குக் கடன் தரும் நிறுவனங்கள். அதிலேயே நீங்கள் சாதனையை அச்சீவ் பண்ணவில்லை. இந்த ஆண்டு அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்யவில்லை. மத்திய அரசிடமிருந்து நிதியை அதிகமாகப் பெறவில்லை. எனவே தொழில் வளர்ச்சிக்கு வழியே இல்லை. (மணி அடிக்கப்பெற்றது). அதே போன்று 40 இலட்சம் ரூபாய்..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எஸ். வி. சண்முகம்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> முடித்துவிடுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நேரம் 1-26 ஆகிவிட்டது போதும். நிறையச் சொல்லியிருக்கிறீர்கள். திரு. எஸ். வி. சண்முகம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்களைவிட உங்களுக்குத் தனிச் சலுகை உண்டு என்று நீங்களாகவே எடுத்துக் கொள்ளக் கூடாது. (குறுக்கீடு). அப்படித்தானே கேட்கிறீர்கள். நீங்கள் 12-53-க்குப் பேச ஆரம்பித்து 1-26-க்கு முடித்திருக்கிறீர்கள். மற்ற தலைவர்கள் எல்லாம் 15—16 நிமிடங்களிலே முடித்திருக்கிறார்கள். அவர்களை விட அதிகமான சலுகையை நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. திரு. எஸ். வி. சண்முகம்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> ஓரே ஒரு நிமிடம்.

[1992 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரே ஒரு நிமிடம்
என்று சொல்லிவிட்டு வேறு ஏதோ பிரச்சினைகளைப் பேசிக்
கொண்டிருந்தால் சரியல்ல. முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே,
இரண்டே இரண்டு விஷயங்களைச் சொல்லி கடைசியாக முடித்து
விடுகிறேன். (சிரிப்பு). தலைவர் அவர்களே, ஒரே ஒரு
நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன். தனி ஈழ விடுதலைப்
புலிகள் பற்றியெல்லாம் பேசினார்கள். தமிழ்நாட்டில் விடுதலைப்
புலிகளை ஒடுக்குவதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை
வரவேற்கிறோம். அதே நேரத்திலே இலங்கையில் தனி ஈழம்
கேட்கும் அந்தக் கொள்கையை இந்த அரசு ஆதரிக்க வேண்டும்.
புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். வழியில். ஏனென்றால்
இந்திரா காந்தி அம்மையார், ராஜீவ் காந்தி, வி. பி. சிங்,
எம். ஜி. ஆர். ஆகியவர்கள் எல்லாம் ஆதரித்தார்கள். அதை
இப்போது நாம் ஆதரிப்பதில் தப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத்
துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் ஒரு தவறான தகவலைச் சொல்லி தமிழ்நாட்டை திசை
திருப்புகிறார். புரட்சித் தலைவர் அவர்கள் எப்போது தனி
ஈழத்தை ஆதரித்தார்? ஈழத்தில் உள்ள தமிழர்களின் நலனை
ஆதரித்தாரே தவிர என்றைக்கும் தனி ஈழத்தை அவர் ஆதரித்
தது கிடையாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, விடுதலைப் புலிகளுக்கு ரூ. 4 கோடி அரசாங்க
கஜானாவிலிருந்தே கொடுத்தார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத்
தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள், ஒரு வகை
பயிற்சிக்காக, மானசீக ஆதரவு, மற்ற மற்ற உதவிகள் அளித்தது
அங்கேயிருக்கிற ஈழ வெறியர்களை எதிர்த்துப் போராட அவர்
கள் அளித்தார்களே தவிர தமிழனைச் சுட அல்ல. இங்கே
இருக்கிற தமிழ்நாட்டில் இருக்கிற தமிழனைச் சுட அல்ல.
ராஜீவ் காந்தி போன்ற தேசீயத் தலைவர்களைச் சுட அல்ல
அவர் உதவி அளித்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மாண்பு
மிகு உறுப்பினர் கடைசி ஒரு நிமிடத்தை பட்ஜெட்டுக்காகச்
செலவழிக்க வேண்டும்.



1992 மார்ச் 13] [திரு. எஸ். வி. சண்முகம்]

சொல்லி ஆக வேண்டும் என்பதற்காக இப்படி எல்லாம் சொல்
கிறார். அதெல்லாம் பத்திரிகையிலே வந்து இருக்கிறது.
பத்திரிகையிலே விளம்பரம்வேண்டும் என்பதற்காக இப்படி
எல்லாம் சொல்கிறார். எதையும் பேச, எப்படியும் பேச,
மரபுகளை மீறி தெருவில் கோஷம் போடுவது போல் எல்லாம்
இந்த சட்டசபையில் கோஷம் போடுகிறார்கள். எதையாவது
செய்து ''ஹீரோ'' ஆகிவிடலாம் என்று நினைக்கிறார். ஆனால்
தமிழ் மக்கள் தெளிவானவர்கள். கண்டிப்பாக இவர்களை
''ஜீரோ'' ஆக்காமல் ஓயமாட்டார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி).

பற்றாக்குறை பட்ஜெட் தமிழ்நாட்டிலே வந்தால், இதை
வறட்சி பட்ஜெட் என்கிறார்கள். ஆனால், இதே பற்றாக்
குறை பட்ஜெட் மேற்கு வங்கத்திலே வந்தால் புரட்சி பட்ஜெட்
என்கிறார்கள். 9 ஆண்டுக் காலம் நாட்டைக் கெடுத்தவர்கள்
கூடிக் குலாவியவர்கள் 9 மாத கால ஆட்சியை, அதுவும் ஒரு
பெண்ணின் தலைமையில் நடைபெறும் ஆட்சியை சகித்துக்
கொள்ள முடியவில்லை. எரிச்சலில்தான் பல வெளிப்பாடுகள்
வெளி வருகின்றன. ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும்
மணம் உண்டு'' என்று அமரர் அண்ணா அவர்கள் சொல்லி
இருக்கிறார்கள். அதே போல, ''வரையாது வழங்குவதே
வாழ்வின் குறிக்கோள்'' என்று அமரர் எம். ஜி. ஆர். அவர்கள்
சொல்லி இருக்கிறார்கள். இந்த இரண்டு பெரும் தலைவர்
களுடைய வழியில் நடக்கின்ற முதலமைச்சர் அவர்கள், தன்னு
டைய உயிரைக் கொல்ல வந்தவர்களுடைய மகனுக்குக் கூட
இலட்சங்களை வாரிக் கொடுத்து வாழ்வு அளித்து இருக்கிறார்.
(மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப்
ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன திரு. இளம்வழுதி
பாயின்ட் ஆஃப் ஆர்டரா? (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் இன்பர்
மேஷன் என்றால் அவர் அனுமதிக்க வேண்டும்; அவர் பேசிக்
கொண்டு இருக்கிறார், (குறுக்கீடு) இல்லை. இல்லை. அவர்.
'' இல்லை '' என்கிற போது. அவர் முடித்த பிறகுதான் நீங்கள்
கேட்கலாம். (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் ஆர்டரா? (குறுக்
கீடு) இல்லை, இல்லை. அவர் முடித்த பிறகு தான் நீங்கள் கேட்
கலாம், நீங்கள் எதற்கு எழுந்து இருக்கிறீர்கள்? எந்த விதி
யின் கீழ் எழுந்து இருக்கிறீர்கள்?

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப்
கிளாரிபிகேஷன்,

[1992 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனுக்கு அவர் allow பண்ணினால்தான் உண்டு, He is not yielding நான் ஒன்றும் செய்ய முடியாது, உட்காருங்கள் (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனுக்கு. பேசுகிற உறுப்பினர் உட்காராவிட்டால் நீங்கள் கிளப்ப முடியாது, நீங்கள் உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) அவர் நிற்கிறார். நீங்கள்உட்காருங்கள்,

பிற்பகல் 1—35

திரு. எஸ். வி. சண்முகம் : தலைவர் அவர்களே. பாரதி கண்ட ஒரு புதுமைப் பெண்ணின் ஆட்சியை காரணமின்றி எதிர்க்கிறார்கள், நெஞ்சில் உரமுமின்றி. நேர்மைத் திறனுமின்றி. நாக்கில் நரம்புமின்றி எதிர்க்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்பது ஆண்டுக் காலம் ஆட்சியிலிருந்து ஒரு கட்சியின் பிரதிநிதியாக இந்த அவையிலே இருக்கிறவர் புள்ளி விவரங்களை எல்லாம் பட்டியல் போட்டு சொன்னார்......

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே. வரவு-செலவுத் திட்டத்தில்தான் பேசுகிறாரா......(குறுக்கீடுகள்),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் திரு, ஜி, பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது இந்த உணர்வை விட்டுவிட்டுப் பேசியதால்தான் இப்போது இது வந்தது. உட்காருங்கள், (குறுக்கீடு) திரு, எஸ். வி. சண்முகம் வரவு—செலவுத் திட்டத்தின் மீது பேசுங்கள், (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது வரவு—செலவுத் திட்டத்தை விட்டுவிட்டு எங்கெங்கோ போனதால் தான் அவரும் போகிறார், உங்களைப் எப்படிப் போக வேண்டாம் என்று சொன்னேனோ அதைப் போல அவரையும் சொல்கிறேன். திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் மட்டும் பேசுங்கள்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கேட்கிறபோது அதைக் கொடுக்கும் தைரியம் இருந்தால் இப்படி சாடிப் பேசலாம், அவர் பேசுகிறபோது சொன்னார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம், உட்காருங்கள். என்ன சொல்கிறார் என்று கேட்போம்....



1992 மார்ச் 13]

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் பேசுகிற நேரத்தில். தன்னை எதிர்ப்பவர்களுடைய பிள்ளைக்குக்கூட ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்தார் முதல்வர் என்று அவரது தாராள மனப்பான்மையைப் பாராட்டினார். இதுபோன்று நாட்டிலே எத்தனையோ பேர் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலட்சங்களைக் கொடுப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரே பதில் சொல்வார்.

திரு. எஸ். வி. சண்முகம் : தலைவர் அவர்களே தாயை இழந்துவிட்டு வழியில்லாமல் தெருவில் திரிந்து கொண்டிருப்பவர்கள் யாராவது இருந்தால் முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாகத் தருவார்......(குறுக்கீடு),

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி உட்காருங்கள் இதிலே ஒன்றுமில்லை, முதலமைச்சர் கொடுப்பார் என்று அவர் சொல்கிறார். நீங்கள் உட்கார வேண்டும். அவரைப் பேச அனுமதிக்க வேண்டும், (குறுக்கீடு), அவர் நிற்கிறார். உங்களுக்கு இதிலே சம்பந்தம் இல்லை, (குறுக்கீடு) உங்களுக்கு சம்பந்தம் இல்லாமல் எழுந்திருக்க வேண்டாம். (குறுக்கீடு) இளம்வழுதி உட்காருங்கள். (குறுக்கீடு) இளம்வழுதி பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) இளம்வழுதி எனக்கு உத்திரவிட முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். இளம்வழுதி பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. உட்காருங்கள். திரு. எஸ். வி. சண்முகம் பேசுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம் : தலைவர் அவர்களே. இந்த ஆட்சியிலே விலைவாசிகள் உயர்ந்ததைப்பற்றி ஒரு நீண்டபட்டியல் போட்டு காட்டினார், விலைவாசிகள் உயர்ந்திருப்பது உண்மை, அது குறைக்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், அதற்கான காரணங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள், கண்டிப்பாகக் குறைக்க வேண்டுமென்று இந்த அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது ஆனால். விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று சொல்வதற்கே, ஒரு தகுதி வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி).

16/5/11
-600
V211,31,N92
N92.17.3

[திரு. எஸ். வி. சண்முகம்] [1992 மார்ச் 13

தமிழ் நாட்டு மக்களுக்கு மிக நன்றாகத் தெரியும், ஒன்பது
ஆண்டுக்கால ஆட்சி இருந்தபோது எந்த விலை கொடுத்தாலும்
அரிசியே கிடைக்காத நிலை இருந்ததா இல்லையா ? மக்காச்சக்
சோள மாவும் கப்பக் கிழங்கும் தமிழ் நாட்டு மக்களால் மறக்
கூடியவைகளா ? ஏதோ தமிழ் நாட்டு மக்கள் மறந்து
விட்டதைப் போலவும் இவர் ஏதோ பட்டியல் புதியதாக
போட்டுக் காட்டியவுடன் தமிழ் நாட்டு மக்கள் இவர் பக்கம்
வந்துவிடுவார்கள் என்பதைப் போலவும் சொன்னார், தமிழ்
நாட்டு மக்கள் மிக எச்சரிக்கையோடு இருக்கிறார்கள், விலை
வாசி ஏறியிருக்கிறது என்று கம்யூனிஸ்டுகள் நாங்கள் சொல்ல
லாம், அதைச் சொல்வதற்கு ஒரு தகுதி வேண்டும்....

திரு. இளம்வழுதி : இவர் பட்ஜெட்டில் பேசுகிறாரா ?
பொதுக்கூட்டத்தில் பேசுகிறாரா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விலைவாசி உயர்வைப்
பற்றி நீங்கள் பேசினீர்கள், அந்த விலைவாசி உயர்வைப்பற்றி
தான் அவரும் பேசுகிறார், (குறுக்கீடு), நீங்கள் உட்காருங்
கள், நீங்கள் பேசலாம், இன்னொருவர் பேசக்கூடாது என்
பதல்ல, (குறுக்கீடு) அதை மறுத்து பேசுவதற்கு அவருக்கு
உரிமை இருக்கிறது, நீங்கள் பேசினீர்கள், அவரும் விலை
வாசி உயர்வைப்பற்றித்தான் பேசுகிறார், (குறுக்கீடு) விலை
வாசி உயர்வெல்லாம் பட்ஜெட்டுக்கு உட்பட்டதுதான் ; உட்
காருங்கள்,

பிற்பகல் 1—40

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் இப்படி சொல்லும் போது ஒரு கம்யூனிஸ்ட்
டாக இருக்கிறவர். ஆளுங்கட்சியை ஆதரிக்கலாமா என்று கேட்
கலாம், கம்யூனிஸ்ட் என்றால் என்ன ? எப்போது பார்த்தா
லும் எதிர்த்துக் கொண்டே இருப்பார்களா ? அவர்களுக்குக்
கொள்கையே இல்லையா ? ஒரு கம்யூனிஸ்ட் நெகட்டிவ் அப்
ரோச்சாகத்தான் எப்போதும் செய்ய வேண்டுமா ? பாசிட்டிவ்
அப்ரோச்சே ஒரு கம்யூனிஸ்ட்டுக்கு வரக் கூடாதா ? ஒரு
கம்யூனிஸ்ட் என்பவன் முதலில் அவன் ஒரு தேச பக்தன், அதே
மாதிரி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் தேசபத்தர்கள்
தான், இது வரலாறு, ஒரு தேச பக்தன் என்பவன் எப்போ
தும் தேச விரோதியின் நிழலிலேயே நிற்க மாட்டான், இந்தி
யாவின் வரைபடத்திலிருந்து தமிழகத்தைத் துண்டாடத்
துணிந்து பயங்கரவாதத்தை வேரோடும் வேரடி மண்ணோடும்
ஒழித்து உயிரையே துச்சமென மதித்து. தமிழகம் தேசியத்தின்
பிறப்பிடம் என்பதை நிரூபித்து இந்த ஆட்சியை இந்த முத
லமைச்சரை ஆதரிப்பதால் கம்யூனிஸ்டு என்ற முறையில் நான்



1992 மார்ச் 13] [திரு. எஸ். வி. சண்முகம்]

ஆயிரம் முறை பெருமை அடைகிறேன், (மேசையைத் தட்டும்
ஒலி) என்னை ஒரு உறுப்பினர் பத்திரிகையில் "இவர் அடகு
வைத்து விட்டார்" என்று........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பட்ஜெட்டுக்குப்
போங்கள். உங்களுடைய கட்சி, உங்களுடைய சொந்த விஷ
யங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் போதாது.
இன்னும் 4 நிமிடங்கள்தான் இருக்கிறது. பேசி முடியுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்த முதலமைச்சரை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அங்கே
உட்கார்ந்து கொண்டே பேசக்கூடாது.

திரு. எஸ். வி. சண்முகம் : இந்த முதலமைச்சரை பல
வீனப்படுத்துகின்ற ஒவ்வொரு நடவடிக்கையும் பிரிவினை கும்ப
லின் கரத்தைத்தான் வலுப்படுத்தும் என்கின்ற ஒரு உணர்வு,
இந்த ஆட்சி அமைய வேண்டுமென்று விரும்பியவர்களுக்கு குறிப்
பாக தேசிய ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்டவர்களுக்கு
இருந்தாக வேண்டும். இந்த ஆட்சி அமைவதற்கு முன்பிருந்த
ஆட்சி இந்திய இராணுவத்தை கொலைகாரப்படை என்றும்,
மத்திய புலனாய்வுத் துறையை தமிழகத்திற்குள் நுழையக்
கூடாது என்றும் கூறியதை யாரும் மறந்து இருக்க முடியாது

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இதற்கான பதிலை எங்கள் தலைவர்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்
கள். (குறுக்கீடு) அதெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கிறது.
இளம்வழுதி ஒவ்வொன்றுக்கும் நீங்கள் குறுக்கிட்டு பேசிக்
கொண்டே இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.
(குறுக்கீடு). அவர் பேசியதற்கு அவைக் குறிப்பிலே ஆதாரம்
இருக்கிறது என்கிறார். அதற்கு மேலே நீங்கள் இப்படி அடிக்கடி
குறுக்கிட்டுக் கொண்டிருப்பது நல்லதல்ல. (குறுக்கீடு) உங்
கள் தலைவர் பதில் அளித்ததற்கெல்லாம் இங்கே பேசிக்கொண்
டிருக்க முடியாது. அவைக் குறிப்பிலே இருந்ததைத்தான் பேச
முடியும். உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய முதலமைச்சர்
இந்தப் பேரவையிலே பேசி, அவர் பேசியதன் மீது நாங்கள்
உரிமை மீறல் தீர்மானமே கொண்டு வந்திருக்கிறோம் என்பதை
நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். வி. சண்முகம்
வேகமாகப் பேசி முடியுங்கள். 5 நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, அமரர் ராஜீவ்காந்தி அவர்கள் படுகொலை
செய்யப்பட்டபோது மகிழ்ந்து, கூத்தாடி, இனிப்பு கொடுத்து
மகிழ்ந்தவர்களை, வேரோடும், வேரடிமண்ணோடும் வீழ்த்தியவர்
இந்த முதலமைச்சர் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.
(மேசையைத் தட்டும் ஒலி) நான் இப்படி சொல்வதால் இந்த
அரசை விமர்சனமே செய்யக்கூடாது. தவறுகளைச் சுட்டி
காட்ட கூடாது என்று கூறுவதாக யாரும் கருதி விட வேண்டாம்
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் அணுகுமுறை
மைல்டு அண்டு ஃபிரண்ட்லியாக இருப்பது எனக்குத் திருப்தி
அளிக்கிறது. அது தொடர வேண்டும். அதிகாரிகள் செய்யும்
தவறுகளுக்கெல்லாம் ஆளுங்கட்சிதான் துணை என்ற முடிவுக்கு
யாரும் வந்துவிடக் கூடாது. ஆளுங்கட்சியும் அதிகார வர்க்க
மும் ஒன்றானதல்ல. அதிகார வர்க்கம் தவறுகளைச் செய்யும்.
ஆளுங்கட்சியினர் சொல்கிற நியாயமான காரியங்கள்கூட இப்
போது நடைபெறுவதில்லை. ஆளுங்கட்சி உறுப்பினர்களே
சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள் சொல்கின்ற சில விஷ
யங்களைக்கூட காதிலே போட்டுக் கொள்ளாத அதிகாரிகளெல்
லாம் இருக்கிறார்கள். அதிகாரிகளால் பாதிக்கப்பட்ட
நேர்மையான அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஆகவே, நடை
பெறுகின்ற காரியங்கள் அத்தனைக்கும் அரசே பொறுப்பு
அமைச்சர்களே பொறுப்பு என்றமுடிவிற்கு நாம் வந்துவிடகூடாது
தமிழகத்தில் தீய சக்திகளை நாம் சேர்ந்து இணைந்து ஒழித்தது
போல் ஊழலையும், ஒழுங்கீனத்தையும் ஒழித்து, இந்த ஆட்சிக்கு
நல்ல பெயரைத் தேடித் தர வேண்டியது இந்த ஆட்சி வர வேண்
மென்று விரும்பிய அனைவரது தேசியவாதிகளுடைய கடமை
யாகும்.

பிற்பகல் 1-45

அடுத்து, பட்ஜெட். உலக வங்கியிடம் உதவி கேட்பதும்,
மத்திய அரசிடம் கையேந்துவதும் தான் இந்த பட்ஜெட்டில்
இருக்கிறது என்றெல்லாம் கூறினார்கள். இந்த இரண்டையும்
தவிர, வேறு யாரிடம் கேட்பது என்று அவர்கள் கூறினால்
நல்லது. (சிரிப்பு). உலக நாடுகளுக்கு எல்லாம் உதவி செய்து
கொண்டிருந்த சோவியத் யூனியன் என்ற நாடு கடந்த வருடம்





வரை இருந்தது. ஆனால், இப்போது இல்லை. சோவியத்
இல்லாததால் இன்றைக்கு உலகத்தில் பல நல்ல திட்டங்கள்
இல்லை. நம்முடைய கூடங்குளமும் இல்லை. அத்தகைய
மாபெரும் சோவியத் யூனியன் இல்லாத நிலையில், உலக வங்கி
உதவியினைப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை, என்பது
அனுபவபூர்வ உண்மை. சொல்லலாம், அந்த வழி, இந்த
வழி, என்று, ஆனால் யாரும் கொடுக்க மாட்டார்கள். நம்
முடைய பிரதமர் அவர்கள் கூட உலக வங்கியை சந்தித்த
பொழுது நிபந்தனைகளையெல்லாம் போட்டார்கள் என்று
சொன்னார்கள். நிபந்தனைகளைப் போட்டால் கட்டுப்பட
முடியாது. ஆகவே, காசு தர மாட்டான். ஆகவே, கட்டுப்
பட்டாவது வாங்க வேண்டிய கட்டாய நிலை இருக்கிறது.
இந்திய அரசின் புதிய பொருளாதார கொள்கையும், தமிழக
அரசின் புதிய தொழில் கொள்கையும் தனியார் துறையை
வளர்க்கத்தான் உதவும் என்றெல்லாம் சொல்கிறார்கள். தனி
யார் துறையினரின் துணையுடன் நிறைவேற்றப்படுகின்ற திட்
டங்கள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தாது என்பது உண்மை.
ஆனால், இதனைத் தவிர, வேறு வழியில்லை. தமிழக அரசே
தனியார் துறையை வளர்க்காதே என்று கூவுகின்ற மார்க்சிஸ்டு
கட்சி ஆளுகின்ற மேற்கு வங்க அரசு உலகம் முழுவதிலுமுள்ள
ஏகபோக முதலாளிகளை தன்னுடைய மாநிலத்தில் தொழில்
துவங்க அழைத்துள்ளது. வங்க அரசினுடைய அழைப்பை
ஏற்று, ஏகபோக நிறுவனங்கள் இப்போது வங்கத்திலே முதலீடு
செய்திருக்கிறார்கள். ஆனால், தமிழகம் என்று வரும்போது
உள்நாட்டு முதலாளிகளை முதலீடு செய்ய அழைக்கின்ற தமிழக
அரசு அத்தகைய கொள்கையைச் செய்தால் அது அபாயம்.
ஆனால், வெளிநாட்டு முதலாளிகளை அவர்கள் கூப்பிட்டால்
அது சகாயம். "மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள்
உடைத்தால் பொன் குடம்" என்பது போல இருக்கிறது.
இதையே அவர்கள் செய்தால் அதற்கு வாழ்த்து. இங்கே செய்
தோம் என்றால் அது வேறு. இந்த நிதிநிலை அறிக்கையில்
என்ன இருக்கிறது என்று கேட்கிறார். நிதிநிலை அறிக்கை
என்பது ஒரு பெரிய இலட்சிய திட்டமல்ல. 30 வருடத்திற்கு
போடுகின்ற ப்ரோகிராம் அல்ல. ஓராண்டுத் திட்டம். இந்த
மார்ச்சிலிருந்து அடுத்த ஆண்டு வரை. அதற்குள் எவ்வளவு
செய்ய முடியும்? இந்த ஓராண்டிற்குள் காவலர்களுக்கு 2,000
வீடுகள் கட்டுகிறோம், மீனவர்களுக்கு 2,000 வீடுகள் கட்டிக்
கொடுக்கிறோம். 1,400 இடைநிலை ஆசிரியர்களுக்கு வேலை
கொடுக்கிறோம். 1,000 புதிய பஸ்களை ஓட்டுகிறோம், 20
உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குகிறோம். 10 மேல்நிலைப்
பள்ளிகளைத் தொடங்குகிறோம், 40,000 கிணறுகளுக்கு புதிய
மின் இணைப்பு கொடுக்கிறோம், விவசாயத் துறைக்கு பல
கோடி கொடுத்திருக்கிறோம் மீன் வளர்ப்பிற்கு சில கோடி, மரம்
வளர்க்க, குடிநீர் குறை தீர்க்க, சத்துணவுக்கு கூடுதலாக துணை
சத்துணவு கொடுக்க, சத்துணவு ஊழியர்களுக்கு சற்று கூடுதலாக,
ஊதியம் கிடைக்க, கைத்தறித் தொழிலாளர்களின் நலம் பேண

சாலைகள் மேம்பாட்டிற்கு..... (மணியடிக்கப்பெற்றது) இப்படியே நான் படித்துக்கொண்டே இருந்தால், அவரும் மணி யடித்து விடுவார். அவ்வளவு இருக்கிறது.

இவற்றையெல்லாம் இந்த ஓராண்டு காலத்திற்குள் நிறை வேற்றப் போகிறோம் என்பது இந்தப் புத்தகத்தில் இருக்கிறது. படிக்கவில்லையா? இல்லையென்றால் இதெல்லாம் வருவதை நெஞ்சம் ஏற்றுக்கொள்ளவில்லையா? மனது வேண்டும். யார் இருந்தால் என்ன? இன்னும் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன. கஜானா காலியான நிலையிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்று, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 600 கோடி வட்டியாக செலுத் தும் நிலையில் ஆட்சிக்கு வந்து 9 மாத தவழ்நடை குழந்தைப் பருவமுள்ள ஒரு ஆட்சி, இதைவிட வேறு என்னசெய்யமுடியும்? ஆகவே என்ன எல்லாம் 9 மாத காலத்தில் இருக்கிற நிதிநிலைக்கேற்ப என்ன எல்லாம் செய்ய முடியுமோ, அதையெல்லாம் இந்த அரசு செய்திருக்கிறது. இந்த அறிக்கை யிலே இருக்கிறது. ஆகவே, சிக்கலும், நெருக்கடியும் நிறைந்த இந்தச் சூழ்நிலையில் வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை இருளிலே ஒரு ஒளி விளக்கு என்பது என்னுடைய அபிப்பிராய மாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

சற்றேறத்தாழ ரூபாய் 500 கோடி பற்றாக்குறை நிலையில் ரூபாய் 70 கோடிக்கு வரி விதிப்பு செய்துள்ளீர்கள். ஒரே ஒரு சின்ன வேண்டுகோள். விவசாயிகள் தங்களுடைய கடன்களை எல்லாம் ரத்து செய்யவேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறார்கள். ஆனால் அதை ரத்து செய்ய முடியாது என்பது நம்முடைய உண்மை நிலை. ஏனெனில், முன்பு இருந்த அரசு ரத்து செய்ததற்கே மைய அரசுக்கு நாம் செலுத்த வேண்டிய பணத்தையே செலுத்த முடியாமல்—இந்த மார்ச்சில் செலுத்த வேண்டிய 49 கோடியை சற்று தள்ளிப் போடுங்கள் என்று மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். ஆக ஏற்கெனவே ரத்து பண்ணியதையே கட்ட முடியாமல் இருக்கிற நிலையிலே புதியதாக நாம் அதனை ரத்து செய்ய முடியாது என்பது யதார்த்த நிலை. இருந்தாலும் கடனை எல்லாம் ரத்து செய்யுங் கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு நாம் கூடுதலாக நிலவரியை விதித்து இருக்கிறோம். அதனை ரத்து செய்ய வேண்டுமென்று நான் உங்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

அதே மாதிரி உணவு விடுதிகளுக்கு வரம்பு 5 இலட்சமாக உயர்த்துங்கள். ஏற்படுகின்ற இந்த இழப்பை எல்லாம் சரி கட்டுவதற்கு சிந்தித்தால் பல வழிகள் உண்டு. நான் ஒரே ஒரு யோசனையை மட்டும் சொல்லி, மற்றதெல்லாம் மானியக்



கோரிக்கைகளில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். உதாரண மாக இன்றைக்கு தமிழ்நாட்டில் பிராந்தி கடைகள் ஆயிரக் கணக்கிலே இருக்கின்றன. அந்தப் பிராந்திக் கடைகளில் எல்லாம் இப்போது பார் இருக்கிறது. வையெல்லாம் இல்லீகல் பார். அவைகளையெல்லாம் லீகல் பாராக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அப்படி பார் இருக்கக் கூடாது என்பது அரசின் விதி. ஆனால் பார் நடத்து கிறார்கள். மாமூல் கொடுத்து நடத்துகின்றார்கள். ஆகவே லீகல் பார்களை நாம் அறிவித்து குறைந்த பட்சம் ஒரு கடைக்கு 10 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்தாலும் கூட 5 கோடி ரூபாய் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே ஒன்றும் கொள்கை போய் விடாது. அதில் மதுவிலக்கே சிதைந்து போகாது. மதுக் கடைகள் இருக்கின்றன. குடிக்கிறார்கள். குடிப்பதற்கு அவர் களும் இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்படி இடம் கொடுப்பதற்கு வேறு ஒரு ஆளுக்கு மாமூல் கொடுத்து நடத்து கிறார்கள். அதை அரசு அதிகார பூர்வமான பார் என்று பெர்மிட் கொடுத்து ஒரு தொகையை நிர்ணயித்தால் பெரிய அளவு பணம் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு எனக் குத் தெரிகின்ற ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இது திருப்பி திருப்பி சுற்றிக் கொண்டே வருகிறது. எப்படி குடை ராட்டினம் சுற்றி சுற்றி வருகிறதோ அது மாதிரி வருகிறது. பட்ஜெட் என்றாலே அதே நிலைமை தான் எப்போதுமே. உற் பத்தியை அதிகரிக்க புதிய யோசனையை சிந்திக்க வேண்டும். உற்பத்திக்கு அடிப்படையானது நீர் வளம். அந்த நீர் வளத்திற் காக காவிரி தண்ணீருக்கு போராடிக் கொண்டிருக்கிறோம். அதைப்போல இதிலே தெற்கே ஓடுகிற, தென் மாநிலங்களில் ஓடுகிற நதிகளையெல்லாம் ஒன்றாக இணைக்க வேண்டும். அதை மத்திய அரசு இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறது. அதே மாதிரி கேரளாவின் கடலிலே வீணாக விழுகின்ற நதிகளையெல் லாம் தமிழ்நாட்டிற்கு திருப்ப வேண்டும். இதையெல்லாம் சட்ட மன்றத்திலே நாம் தீர்மானமாக கொண்டு வர வேண்டும். இத் தகைய வளங்கள் எல்லாம் நம்முடைய நாட்டிலே இருக்கின்றன. பெரிய அளவு தண்ணீர் கடலிலே போய் வீணாக விழுந்துக் கொண்டிருக்கிறது. நாம் சொட்டு நீர் பாசனத்திற்கு திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்போது மத்திய மாநில அரசுகளுக்கு இருக்கக் கூடிய அந்த உறவை பயன்படுத்தி இந்த நல்ல திட்டங்களை கொண்டு வர முயற்சி செய்யவேண்டும். அத்தகைய நிலைமைகள் வரும்போது தமிழ்நாட்டில் மாற்றம் ஏற்படும்.

நான் மீண்டும் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம் நிதிநிலை அறிக்கையை வைத்துக்கொண்டு ஒரு அரசாங் கத்தின் கொள்கைகளை எடை போடுவது சரியாக இருக்காது. இந்த அரசு இந்திய அரசோடு ஒற்றுமையாக இருக்கிற அரசு. இதை இந்த ஒற்றுமையான பட்ஜெட்டின் மூலம் அறிய முடி

கிறது. இந்த ஒற்றுமை நீடிப்பது தான் இந்தியாவின் ஒற்றுமை பாதுகாக்கப்படும். தமிழகத்தில் தேச விரோத கும்பலை வேரோடு ஒழிக்கும் என்று கூறி இந்த அரசுக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்து இந்த நிதி நிலை அறிக்கையை ஏற்க கருதி, இன்னும் சொல்லப்போனால் மன நிறைவோடு ஏற்க கருதி நமது நிதியமைச்சர் அடிக்கடி சொல்வது போல சட்டியிலே இருந்தால் தானே அகப்பையிலே வரும் என்பதைப் போல இருப்பதை வைத்து ஒழுங்காகச் செய் திருக்கக் கூடிய இந்த நிதிநிலை அறிக்கையை ஏற்கிறேன் என்று கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் :

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக் கரசு அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவல்களைத் தந்திருக்கிறார்கள். வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவு என்று கூறியிருக் கிறார்கள். 1991-92-ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறைக்கு 607 கோடியே 52 இலட்சத்து 5 ஆயிரம் ஒதுக்கியிருந்தார்கள். இந்த ஆண்டு நாவலர் அவர்கள் 621 கோடியே 2 இலட்சத்து 54 ஆயிரம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஏறக்குறைய ரூபாய் 13 கோடியே 50 இலட்சத்திற்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எஸ். திருநாவுக்கரசு.

பிற்பகல் 1-55

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன விவரங்களை மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். சென்ற ஆண்டைவிட—சென்ற ஆண்டு 100 கோடி என்றால் இப்போது 1 கோடி கூடி விடுகிறது என்றால், 101 கோடி என்று சொன்னால் கூட அது சென்ற ஆண்டைவிட கூடத்தான். நான் அதைச் சொல்லவில்லை. N.mer.cally that is correct. அதை நான் சொல்லவில்லை. போன ஆண்டு வரவு செலவு, வரவு இவ்வளவு——அதற்கு ஒதுக்கீடு. இந்த ஆண்டு வரவு 6 ஆயிரத்து சொச்சம், போன ஆண்டு வரவு 5 ஆயிரத்து சொச்சம், 5,500 கோடி இருக்கின்றபோது ஒதுக்கப்பட்டது இவ்வளவு, 6,700 கோடி இருக்கின்றபோது, இன்னும் இருக்கின்ற போது அந்த இலாக்காவுக்கு ஒதுக்க வேண்டியது இவ்வளவு, ஒதுக்கியிருப்பது இவ்வளவு, ஆக அதிலே குறைவு இவ்வளவு என்றுதான் நான் சுட்டிக்காட்டினேன்.



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ச. இராமச்சந்திரன்.

<u>*திரு. ச. இராமச்சந்திரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே,

'' கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல் ''

என்றார் திருவள்ளுவர். அதைப்போல கற்றோர்கள் நிறைந்த அவையில் எனக்குத் தெரிந்த சில விவரங்களை நான் எடுத்துச் சொல்லவும், என்னினும் அதிகமான விவரங்களைப் பெற்றிருக் கின்ற மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் அதற்குரிய விளக்கத்தை தருவார்கள் என்றும் நான் எதிர்பார்க் கின்றேன்.

ஆண்டுக்கு வரவு செலவுத் திட்டம் என்கின்றபோது இந்த ஆட்சி ஏற்பட்டவுடன் முதன் முதலாக முழு ஆண்டுக்கும் வரவு செலவுத் திட்டத்தை உருவாக்குகின்ற வாய்ப்பு இப்போது கிட்டி யிருக்கிறது. இந்த ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தை, வரவும் செலவும் சரியாக கணக்கிட்டு சமப்படுத்துவதுதான் அரசின் தலையாய கடமையாக இருக்க வேண்டும். அதற்கு மாறாக, பெருமளவிற்குப் பற்றாக்குறையை வைத்து சரிசம மில்லாத வரவு–செலவுத் திட்டத்தைத் தருவது என்பது முறை யானது அல்ல என்பதை முதலில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். வருவாய் கணக்கில் சுமார் 808.73 கோடி ரூபாய் துண்டு விழு கிறது. அன்றாடச் செலவில் துண்டு விழுகிறது. அந்த 808 கோடி ரூபாயை மூலதனத்திலேயிருந்து அதாவது கேப்பிடல் அக்கவுண்ட்—முதலீட்டிலேயிருந்து 471 கோடி ரூபாயைச் சரி செய்கின்றார்கள். அது எப்படி என்றால் கடன் வாங்கி குடும்பத் தினை அன்றாடம் நடத்துவது என்பது போலத்தான். கடன் வாங்கி கல்யாணம் பண்ணினாலும் பரவாயில்லை. கடன் வாங்கி பிறந்த நாள் விருந்து வைப்பது போல இது அமைந்திருக்கிறது. பொதுவாகச் சொல்வார்கள். அளவுக்கு மீறி சொத்து சேர்க்க வேண்டுமென்று இருக்கின்ற தலைமுறைக்கு வரிச் சுமையை ஏற்படுத்தக் கூடாது. அதே போல இப்போது பெரும் அளவுக்கு கடனை வாங்கி வருங்கால தலைமுறைக்கு வட்டி செலுத்துவதை நாம் வைத்துவிடக் கூடாது.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் மூலதனத்திற்குப் போட வேண்டிய பணத்தை எடுத்து அன்றாடச் செலவுக்கு செலவு செய்வதன் மூலம் வருங்கால தலைமுறைக்கு வட்டி கட்டுகின்ற சுமையை இந்த நிதிநிலை அறிக்கை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே இந்த நிதிப் பற்றாக்குறையைச் சரியாக நிர்வகிக்கின்ற முறையில் மூலதனக் கணக்கிலிருந்து எடுத்துப் போடுவது எந்த அளவிற்குப் பொருத்தம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எடுத்து விளக்க வேண்டும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1992 மார்ச் 13

மேலும் வரும் ஆண்டு கூடுதல் வரி விதிப்பாக 70 கோடியும்,
சிக்கனத்தின் மூலம் 55 கோடியும் ஆக 125 கோடி சரி செய்யப்
படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மின்
வாரியத்திலே பற்றாக்குறை 80 கோடி என்றும் தெரிவிக்கப்
பட்டிருக்கிறது. நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் பரிதி
இளம்வழுதி அவர்கள் பேசுகின்றபோது மாண்புமிகு அமைச்சர்
கண்ணப்பன் அவர்கள் மின்வாரியம் லாபத்திலே நடக்கிறது
என்று சொன்னதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆனால்
வரவு—செலவு திட்ட அறிக்கையில் 80 கோடி ரூபாய் பற்றாக்
குறை இருக்கிறது என்று இருக்கிறது. இதற்கான விளக்கத்தை
யும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிகர பற்றாக்குறையாக சுமார் 500 கோடி
ரூபாய் விடப்பட்டிருக்கிறது. இந்த 500 கோடி ரூபாயை
எங்ஙனம் சரிக்கட்டுவது என்று யோசிக்கின்றபோது தமிழ்நாடு
அரசு ஒரு மிகப் பெரிய நம்பிக்கையை இந்திய அரசின் மீது
வைத்திருக்கிறது. அதற்கு பல்வேறு வகையிலே அவர்கள் எந்
தெந்த வகையிலே எல்லாம் இந்திய அரசை நிதி கேட்டிருக்கி
றார்கள் என்பதைத் தொகுத்து வரவு—செலவு திட்ட அறிக்கை
யிலே தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 2—00

குறிப்பாக 1990—95 என 5 ஆண்டுகளுக்காக அமைக்கப்
பட்ட ஒன்பதாவது நிதிக் குழுவில் இந்திய அரசு, மாநிலங்
களுக்கு என்று உதவி செய்ய ஒதுக்கியது 9 ஆயிரம் கோடி
ரூபாய். ஆனால் தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது 43.79
கோடி ரூபாய். 9 ஆயிரம் கோடி எங்கே, வெறும் 43.79 கோடி
எங்கே? இது மிகப்பெரிய அநியாயம் என்று தமிழ்நாடு அரசு
இந்திய அரசிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறது. ஆனால்
என்ன பதில் கிடைத்தது என்ற விவரம் எங்களுக்குத் தெரிய
வில்லை.

அதேபோல் திட்டக் குழுவின் மூலம் மாநிலங்களுக்கு நிதி
ஒதுக்குகிறார்கள். அதிலே 100க்கு 20 சதவீதம் பின்தங்கிய
மாநிலங்களுக்கு என்று தொகுப்பு நிதி வைத்து ஒதுக்குகிறார்
கள். தனி நபர் வருமானத்தை அடிப்படையாக வைத்து
தேசிய சராசரி வருமானத்தின் கீழ் எந்த எந்த மாநிலங்கள்
இருக்கின்றனவோ அந்த மாநிலங்களுக்கு எல்லாம் அந்த நிதி
யைப் பெறலாம். தமிழ்நாடு 1982–85 ஆம் ஆண்டில் தேசிய
சராசரி தனி நபர் வருமானத்தை விட மிகக் குறைந்த வரு
மானம். அதோடு மட்டுமல்ல, குடும்பக் கட்டுப்பாட்டை மிகவும்
செம்மையாக நிறைவேற்றுகின்ற காரணத்தால் மக்கள்
தொகையை வைத்துப் பார்க்கின்றபோது குறைந்த மக்கள்



1992 மார்ச் 13] [திரு. ச. இராமச்சந்திரன்]

தொகை என்ற காரணத்தாலே தனி நபர் வருமானம் சில
நேரங்களில் கூடி விடுகிறது. தமிழ்நாடு அரசின் சார்பில்
இதற்கான விளக்கத்தை தவறாக தருகிறார்கள். wrongful
interpretation என்று சொல்லியிருக்
கிறார்கள். அந்த பின்தங்கிய மாநிலங்களுக்கென ஒதுக்கப்
பட்ட தொகுதியில் தமிழ்நாடு கேட்டதே, அது என்ன ஆயிற்று?

அதேபோல் திட்டக் குழுவின் மூலம் 100க்கு 7½ சதவீதம்
அதாவது 7½ சதவீதம் பிரச்சினைகள் உள்ள மாநிலங்கள்
என்று அதற்கென நிதி தொகுத்து அந்த நிதியிலிருந்து வழங்கு
கிறார்கள். தமிழ்நாடு கடலோர மாநிலம். இங்கே விடுதலைப்
புலிகள் இயக்கம் வருகிறார்கள்; தீவிரவாதம் எல்லாம் இருக்
கின்றன; மற்ற மாநிலங்களைப் போல தமிழ்நாடும் ஒரு பிரச்
சினைக்குரிய மாநிலம் என்று தமிழ்நாடு எடுத்துச் சொல்
கிறது. ஆனால் தீவிரவாதம் பற்றி பேச இந்திய அரசினுடைய
உள் துறை அமைச்சர் திரு. சவான் அவர்கள் அண்மையில் 8
மாநிலங்களை அழைத்தார்கள். தமிழ்நாட்டை அழைப்பார்
கள் என்று எதிர் பார்த்தேன். அழைக்கவில்லை. ஆகவே,
அவர்களுக்குத் தெரிகிறது இங்கே தீவிரவாதம் இல்லை என்று.
எது எப்படி ஆயினும் கூட பிரச்சினைக்குரிய மாநிலங்கள்
என்று 7½ சதவீதம் நிதி ஒதுக்கம் செய்தார்களே அதிலே நிதி
வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கேட்டதே, அது என்ன
ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

நிதி உதவி தராவிட்டாலும் பரவாயில்லை, வங்கிகளில்
கடன் வாங்குகிற அளவையாவது உயர்த்துங்கள் என்று தமிழ்
நாடு அரசு விண்ணப்பம் போட்டது. விண்ணப்பம் போட்டது
மட்டுமல்ல. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது மறைந்த
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரசு இருந்தபோது
அப்போது கொடுத்தீர்களே, இப்போது ஏன் எங்களுக்குக்
கொடுக்கக்கூடாது என்று கூட இரு கை ஏந்தி இந்த அரசு
கேட்டதே அதற்கு என்ன பதில் கிடைத்தது என்பதை அறிய
விரும்புகிறேன்.

மேலும் அரசுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் கடனை
எழுப்ப உரிமையுண்டு. எப்படி இந்திய அரசினுடைய பொது
நிறுவனங்கள் கடனீட்டுப் பத்திரங்கள் வழங்கி நிதி திரட்டு
கிறார்களோ அதைப்போல தமிழ்நாடு அரசும் நிதி திரட்ட
வேண்டுமென்று அனுமதி தமிழ்நாடு அரசின் சார்பில் கேட்கப்
பட்டதே, அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

சரக்கு ஒப்படை வரிக்கான சட்டம். 'கன்சைன்மெண்டு
டாக்ஸ்' இங்கே மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்
அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். அதேபோல் நிறுவன
வரியிலே பங்கு. நிறுவனத்தின் மூலம் வருகின்ற வரி இந்திய
அரசுக்கு மட்டும்தான் சேருகிறது. அதிலே மாநிலங்களுக்கு

யங்கு வேண்டும் என்ற கோரிக்கை, இவைகள் எல்லாம் என்ன
ஆயிற்று என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
விளக்க வேண்டும்.

சென்ற ஆண்டு மது விலக்கு அமல்படுத்தப்பட்டதனாலே
322 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. அந்த இழப்பை ஈடு
கட்ட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கேட்டது. அந்த
இழப்பை இந்திய அரசு ஈடு கட்டியதா ?

வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது சுமார் 400 கோடி
ரூபாய் தமிழ்நாட்டிலே சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த
இழப்பை ஈடுகட்ட வேண்டுமென்று இந்திய அரசை தமிழ்நாடு
அரசு கேட்டுக் கொண்டதே அது என்ன ஆயிற்று ?

கண்ணீரும் கம்பலையுமாக கர்நாடக தமிழர்கள் உடமை
களை இழந்து ஓடி வந்தபோது அவர்களுக்கான இழப்பீடு 300
கோடி ரூபாய் இந்திய அரசு தரவேண்டுமென்று இந்த அரசு
விண்ணப்பித்ததே அதனுடைய நிலைமை என்ன ஆயிற்று ?

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த கூக்குரல்கள் எல்லாம்
ஏற்படாவிட்டாலும் கடைசியிலே இந்த நிதிநிலை அறிக்கை
யிலே கூட எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஒரு 400 கோடி
ரூபாய் அளவுக்கு ஒரு 'பேக்கேஜ் ஆப் ஸ்பெசல் அசிஸ்டென்ஸ்'
இந்திய அரசின் மூலம் ஒரு தனி உதவி எப்படி ஒரு நேரத்தில்
இந்திய அரசின் சார்பில் உத்திரப் பிரதேசத்திற்குத் தரப்
பட்டதோ அதைப்போல் ஒரு சிறப்பு நிதி உதவி தர வேண்டு
மென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப
எடுத்துக் காட்டினார்களே அவைகள் எல்லாம் என்ன
ஆயிற்று ? இவ்வளவு கோரிக்கைகளை எடுத்து வைத்தும் கூட
சுமார் 400, 500 கோடி ரூபாய், நீங்கள் எடுத்து வைத்த கோரிக்
கைகளையெல்லாம் எடுத்தால் இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு
மேலே கூட போகும். மத்திய அரசு ஒரு 400 கோடி ரூபாய்
கொடுத்திருக்குமேயானால் இன்றைக்கு இத்தகைய பற்றாக்
குறை ஏற்பட்டு இருக்காது. ஆனால் இந்த அரசு இந்திய
அரசிடமிருந்து பெறவேண்டிய உரிமைகளை பெறவேண்டிய
நியாயாதாரங்களை எவ்வளவுதான் எடுத்துச் சொல்லியும்
நியாயம் இருந்தும் பெற முடியவில்லை. இருந்தாலும் சொல்
கிறது, இந்திய அரசு மீது தமிழ்நாடு அரசு இன்னும் நம்பிக்கை
கொண்டு இருக்கிறது என்று. எங்களுக்கு இந்த ஆண்டிலே
உதவி செய்வார்கள் என்று நம்புகிறோம் என்று சொல்கிறார்
கள். நாம் எவ்வளவுதான் நம்பினாலும் இந்திய அரசு நம்ப
மாட்டேன் என்கிறார்களே அதற்கு என்ன விளக்கம் என்பதை
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்தான் எடுத்துக்காட்ட
வேண்டும். கல்லிலே கூட நார் உரிக்கலாம் போல் இருக்கிறது



டெல்லியிலே இருந்து காசு பிரியாது போலிருக்கிறது என்று
நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) அவர் பேசும்
போது சொல்லட்டும்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நான் அவர் பேசும்போது குறுக்
கிட வேண்டாம் என்றுதான் இருந்தேன். தொடர்ந்து, ஏதோ
அந்த முடிவுகளெல்லாம் அரசியல் ரீதியாக எடுக்கப்படுகின்ற
முடிவுகளைப் போல அவர் பேசிக் கொண்டு வருகிறார். மத்திய
அரசின் முதலீடு என்பது It is not a political decision
It is based on economic logic
அவரே அதற்கான வாதங்களைச் சொல்லிக்கொண்டு, அதற்கு
எதிராகவும் பேசிக்கொண்டு வருகிறார். ஆகவே அரசியல் ரீதி
யாக எடுக்கப்படுகின்ற முடிவுகளாலே நமக்குக் குறையவில்லை ;
அதற்குக் காரணம் பொருளாதார நிர்ப்பந்தம்தான். அதை அவர்
அறிவார் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி. ஏ. எஸ்.
பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1,400 கோடி என்பதை நடப்பு ஆண்டிலே
1,750 கோடியாக உயர்த்தி கொடுத்து இருக்கிறார்கள் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்திய அரசினுடைய வரவு செலவு ஒரு ஆண்டுக்கு
ஒரு லட்சத்து முப்பதாயிரம் கோடி. யானைக் கவளத்திலே
சிந்துமானால் பல்லாயிரம் சிற்றெறும்புகள் வாழும் என்பார்கள்.
அது போல ஒரு 300, 400 கோடி என்பது மிகப் பெரிய தொகை
யல்ல. ஆகையால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
சொன்னதுபோல, அரசியல் காரணத்திற்காக சொல்கிறேன் என்
பதல்ல, இந்திய அரசிடம் நியாயத்தையெல்லாம் எடுத்துச்
சொல்லியும் கூட, அது கிடைக்காததால் இன்றைக்கு தமிழ்
நாட்டு மக்கள் மீது வரி போட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்
கிறது. இந்திய அரசு கொடுத்திருக்குமேயானால் இங்கே ஏழை
யெளிய மக்கள் மீது வரிபோட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்
காது. இப்போது கடந்த ஆண்டினுடைய நிதியாதாரத்தை
எப்படி சரி செய்திருக்கிறார்கள் என்று நான் கணக்கு பார்க்கின்ற
போது, கடந்த ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் உள்ள சில
முக்கியமானவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

முத்திரைத்தாள் பத்திரப் பதிவில் அதிக வருமானத்தைப்
பெற்றிருக்கிறார்கள். ஆயத் தீர்வு, உண்மையிலேயே மதுவிலக்கு
அமல்படுத்தப்பட்டாலும் கூட மதுவிலக்காலே
ஏற்படவில்லை. காரணம் அந்நியநாட்டு மதுவகைகளை இந்தியா இழப்பு
வில் தயாரித்து அதிக விலையில் விற்றதன் மூலம் ஆயத் தீர்வை
என்றால் 330 கோடி ரூபாய், வரவேண்டிய வருமானம், அதாவது
1991-92 இல் 330 கோடி ரூபாய் எதிர்பார்த்து, இந்த ஆண்டு
515 கோடி ரூபாய்தான் மொத்தம். கடந்த ஆண்டு கணக்கை
எடுத்தால், அதாவது மலிவு விலை மது கடந்த ஆட்சி இருந்த
பொழுதேகூட 435 கோடி ரூபாய். ஆனால் வரும் ஆண்டில் 515
கோடி ரூபாய் மதுவிலக்காலே வருமானம். அதாவது
ஐ.எம்.எஃப்.எல்—லிலே வருமானம் வருகிறது. மதுவிலக்கு
இருந்தும் கூட; அதேபோல விற்பனை வரியின் மூலம் வருகிறது.
வண்டிகள் மீது வரி, மின்சாரத்தில் வரி : மாண்புமிகு உறுப்பினர்
கள் எடுத்துக்காட்டியதைப்போல வரி இனங்களிலேமட்டும் 527
கோடி ரூபாய் இங்கே போட வேண்டிய அவசியம் எதனாலே
ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்
டாமா? இங்கே விலைவாசி ஏறுகிறது என்றால், ஏறாமல் எப்படி
இருக்கும்? அதேபோல வருகிற ஆண்டிலே வரவு செலவுத்
திட்டத்தை தயாரிக்கின்ற முறையிலே ஒன்றைச் சொல்ல விரும்பு
கிறேன். இந்த ஆண்டு வழங்கிய கடனுக்கு வட்டி மட்டும் 776
கோடி ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. மற்ற திட்டங்கள்
என்னவாகும்? கடனை வாங்கி வாங்கி செலவு செய்து கொண்டே
போவதினுடைய விளைவு கடன் சுமை அதிகமாகவும், கடனால்
ஏற்படுகின்ற வட்டி அதிகமாகின்ற காரணத்தினாலே அத்தகைய
சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நல்ல வேளையாக சென்ற ஆண்டு
தேர்தல் நடத்தியதால் ஏற்பட்ட செலவு 20 கோடி ரூபாய்
இந்த ஆண்டு இல்லை. ஆனால் இன்னொன்றையும் தெளிவாக்க
விரும்புகிறேன். இயற்கைச் சீற்றங்களுக்கு இந்த ஆண்டு எதிலே
யும் நிதி ஒதுக்கமே இல்லை. ஒருவேளை வெள்ளம் வராது;
வறட்சி வராது; புயல் வராது என்று மாண்புமிகு நிதி அமைச்சர்
அவர்கள் முன்கூட்டியே தெரிந்து கொண்டாரா என்பதை
அவருடைய பதில் உரையிலேதான் அவர் எடுத்துச்சொல்ல
வேண்டும். இயற்கை சீற்றங்களுக்கு என்று எந்தவிதமான புரவி
ஷன்களும் இல்லை. அதற்காக சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 2—10

அதேபோல நுகர் பொருள் வழங்கல் துறையில் 160 கோடி
ரூபாய் நிலுவையை வருகிற ஆண்டில் கொடுக்க வேண்டியிருக்
கிறது. இந்த ஆண்டில் கொடுக்க முடியவில்லை.

ஆக வரி இனங்களின் மூலம் மட்டும் 577 கோடி ரூபாய் இந்த
மார்ச் மாதம் முடிகிற வரையிலும் வருகிற ஆண்டிலே ஒரு 340
கோடி ரூபாய். அதன் விளைவாக தமிழக அரசாங்கம் என்னென்ன
செய்திருக்கிறது தெரியுமா?





" ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி "
என்பார்களே, அதைப்போல, இந்திய அரசு கொடுக்காவிட்டாலும்
இங்குள்ள மக்களை எவ்வளவு தாளிக்க முடியுமோ அவ்வளவு
தாளித்திருக்கிறார்கள்.

பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது, இந்த
பட்ஜெட்டிலேயே மிகச் சாதுர்யமாகச் செய்வார்கள். என்ன
தெரியுமா? பட்ஜெட்டிலேயிருந்து பொது நிறுவனங்களுக்குக்
கொடுக்க வேண்டிய பணம் இருக்கிறது. அந்தப் பணத்தை
குறைத்துக் கொள்வதற்காகப் பொது நிறுவனங்களை விட்டு,
கட்டணத்தை உயர்த்தச் சொல்லி விடுவது. அதனுடைய
விளைவு, அவர்கள் கட்டணத்தை உயர்த்திவிடுவார்கள். அது
வரவு செலவுத் திட்டத்திலேயிருந்து, அதற்குக் கொடுக்க
வேண்டிய பணம் குறைந்து விடும். அந்த வகையிலே பொதுத்
துறை நிறுவனங்கள் என்று பார்க்கிறபொழுது பஸ் கட்டணம்
உயர்த்தப்பட்டிருக்கிறது; பால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது;
அரிசி விலை உயர்த்தப்பட்டிருக்கிறது; மின் கட்டணம்
உயர்த்தப்பட்டிருக்கிறது.

நான் மாண்புமிகு நிதியமைச்சரவர்களிடத்திலே கேட்க
விரும்புவது, இந்த உயர்வுகளின் மூலம் எவ்வளவு ஆதாயம்
வந்திருக்கிறது? எவ்வளவு வருவாய்த் திரட்டி இருக்கிறீர்கள்?

அரசுத் துறையைப் பொறுத்த வரையிலே, விற்பனை வரி
மூலம், மோட்டார் வாகன வரி மூலம், மின்சார வரி மூலம்,
முத்திரைத் தாள் வரி மூலம் 527 கோடி ரூபாய் நேராகப்
பெற்றிருக்கிறீர்கள். வருகிற ஆண்டு என்ன செய்யப் போகிறீர்
கள்? இந்திய அரசு 500 கோடி ரூபாய், 1,000 கோடி ரூபாய்
கொடுத்து விடுமானால் பரவாயில்லை. இல்லையென்றால் இந்த
அரசு என்ன செய்யப் போகிறது? இங்கே என்ன அனுமதி கேட்டு
வரவு செலவுத் திட்டத்திலே இந்த உரையை வைத்திருக்கிறார்
கள் என்று பார்த்தால் இங்கேயும் மூன்று முறையைக் கையாள்
கிறார்கள்.

உள்ளாட்சி நிறுவனங்கள் — அதாவது பஞ்சாயத்துக்கள்,
நகர மன்றங்கள், மாநகராட்சிகள் அவர்களுக்கு வரவு—
செலவுத் திட்டத்திலேயிருந்து ஒதுக்க வேண்டிய பணம்.
இன்னொன்று பொது நிறுவனங்கள். டிரான்ஸ்போர்ட் கார்ப்ப
ரேஷன், எலக்ட்ரிசிட்டி போர்டு போன்ற பொது நிறுவனங்கள்.
இன்னொன்று அரசு. இந்த மூன்று வகையிலே பார்க்கிறபொழுது
உள்ளாட்சி மன்றங்களுக்குத் தண்ணீர் வரி, சொத்து வரி,
தொழில் வரி, உள்ளாட்சி வரி, மேல் வரி. பொதுத் துறை
நிறுவனங்களுக்கு அரிசி விலை உயர்வு, மின் கட்டண உயர்வு.
மாண்புமிகு உழவர்— உழைப்பாளர் கட்சி உறுப்பினர் கூடச்
சொன்னார்கள். மின் கட்டண உயர்வு, அதேபோல, அரசைப்
பொறுத்த வரையிலே விற்பனை வரி, வண்டி வரி, முத்திரைத்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1992 மார்ச் 13

தாள், பத்திரப் பதிவு என்று இப்படிப் போட்டு — புரட்சித் தலைவர் அவர்கள்தான் ஏதோ ஒரு படத்திலே பாடியதாக எனக்கு நினைவு இருக்கிறது. தடுக்கி விழுந்தால் வரி, குனிந்து நிமிர்ந்தால் வரி, இட்லி வரி, சட்னி வரி, பட்டினி வரி என்று. அதைப்போல இங்கே வரி போடுவதோடு — அதன் விளைவு என்ன ? அதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு ரூபாய் அரசாங்கம் இங்கே வரி போடுகிறது என்றால் ஒரு பங்கு நாம் போடுகிறோம் என்றால் ஒன்பது பங்கு அது வெளியிலே விலையேறும். ஆக, தமிழ்நாட்டிலே விலை ஏறு கிறது. அதுவும் குறிப்பாக இவைகளெல்லாம் — குடிதண்ணீரோ அல்லது மின்சாரமோ அல்லது சொத்து வரியோ, தொழில் வரியோ, அரிசியோ இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கிற பொழுது, எல்லா மக்களும் பயன்படுத்துகின்ற பொருட்கள். அந்தப் பொருட்களின் மீது வரி போடுகிறபொழுது நாம் ஒரு ரூபாய் வரி போட்டால் வெளியிலே அதை வைத்துக்கொண்டு 5 ரூபாய், 6 ரூபாய், 9 ரூபாய், 10 ரூபாய் என்று மல்டிபிளையர் எஃபக்ட் வரும். அதனுடைய விளைவாகத்தான் இந்த விலை ஏறுகிறது. ஆகையினாலே வரி விதிக்கிறபொழுது மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் வரி போடாமலேயே அரசாங் கத்தை நடத்த வேண்டும். அதற்கு என்ன வழி ? வரி போடாமலேயே அரசாங்கத்தை நடத்துவதற்கு அரசாங்கத் தினுடைய செலவுகளைக் குறைக்க வேண்டும். வீண் செலவுகளைக் குறைக்க வேண்டும் தேவை அற்ற செலவுகளைத் தவிர்க்க வேண்டும். அவய்டபிள் அண்ட் வேஸ்ட்புல் எக்ஸ்பெண்டிச்சர் என்று சொல்வார்கள். அதுதான் வழியே தவிர வரியைப் போடு கின்ற காரணத்தினாலே கூடுதல் வருமானம் என்ற அந்த ஒரே காரணத்தினாலே இங்கே போடுகிறபொழுது, அதனாலே 9 மடங்கு வெளியிலே விலை ஏறுகிறது. விலையேற்றம் என்றால் ஒருவிதத்திலே இந்திய அரசும் காரணம். ஆனால் அதேநேரத்தில் தமிழ்நாடு அரசும் வரி போடுகிறோம் என்றால் அந்த வரியை வைத்தே வெளியிலே வரியை உயர்த்துகின்ற சூழ்நிலை ஏற்படு கிறது. ஆகையினாலே இந்த வரி இனங்களையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று நான் தமிழக அரசைக் கேட்டுக் கொள் கிறேன்.

ஒரு 70 கோடி ரூபாய் வரி போடுவதை விட, அந்த 70 கோடி ரூபாயை மிச்சப்படுத்த முடியாதா ? எத்தனையோ ஆடம்பரச் செலவுகள் நடக்கவில்லையா ? நமக்குத் தெரிந்தே நடக்கவில்லையா ? ஆக, சிக்கனத்தை மேற்கொள்ளக் கூடாதா ? இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, ஒவ்வொரு துறையிலேயும் எண்ணிப் பார்ப்போமேயானால் இந்த வரி 70 கோடி என்று போட்டாலும் கூட அது வருஷ முடிவிலே ஒரு 500 கோடியாகும்.



1992 மார்ச் 13] [திரு. ச. இராமச்சந்திரன்]

இங்கே 500 கோடியாகும். தமிழக மக்களிடத்திலே அது 5,000 கோடியாக ஆகும். அதனுடைய விளைவு இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் விலைவாசி மேலும் உயரும்.

பிற்பகல் 2–15

இன்னொன்றையும் இந்த வரவு செலவுத் திட்டத்திலே நான் பார்க்கிறேன், வரி போடுகிற போது, ஏழைகளுக்குப் போடுகிறீர்கள். ஆனால் வரிச் சலுகை அளிக்கிற போது அது யாருக்கு பலன் அளிக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண் டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதன் முதலாக பொறுப் பேற்றபோது, ஒன்றை அழகாகச் சொன்னார்கள். ''ஒரு காரியத்தைச் செய்கிற போது அதனால் எத்தனைப் பேருக்கு நன்மை; எத்தகையோருக்கு நன்மை என்பதைப் பார்த்து செய்ய வேண்டும்'' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இந்த அரசைக் கேட்க விரும்புகிறேன்; இந்த வரவு செலவுத் திட்டத்திலே நீங்கள் அளித்திருக்கிற சலுகைகள் அல்லது இந்த அரசு எடுக்கிற முடிவுகள், பணக்காரர்களுக்கு நன்மை வழங்குகிற பல முடிவுகளாகத் தான் நான் பார்க்கிறேன். உதாரணத் திற்கு, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குப் போட்டி யாக ஆம்னி பஸ்கள் ஓடுகின்றன. ஆம்னி பஸ்கள், ஓரிடத்தி லிருந்து இன்னோர் இடத்திற்கு ஒரு குறிப்பிட்ட கட்டணத்தில் ''காண்ட்ராக்ட் கேரேஜஸ்'' -ஆகப் போனால் நமக்கு அதனால் ஆட்சேபணை இல்லை. ஆனால், திருவள்ளுவர் போக்கு- வரத்துக் கழகத்திற்குப் போட்டியாக ''ரூட்'' பஸ்களாக ஓடு கின்றன. அத்தகைய ஆம்னி பஸ்கள் வளர்கிற முறையிலே, அவர்களுக்கு உயர்நீதிமன்றமே 1,500 ரூபாய் வரி போடலாம் என்ற போது, நாம் ஏன் அதைக் குறைக்க வேண்டும்? அதைப் போல பஸ் கட்டணத்தை உயர்த்தினீர்கள். சென்னைத் தலைநகரிலே உயர்த்தினால், அதனுடைய வருவாய் முழுவதும் இங்கே வரும். ஆனால், வெளியிலே சாதாரண மஃபசல் பஸ்ஸஸ், டிஸ்ட்ரிக்ட் பஸ்களுக்கும் என்றால், அங்கே பாதி வருமானம் தனிப்பட்ட பஸ் முதலாளிகளுக்கு போகும். வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கிற போது, சுமார் 300 கோடி ரூபாய் இன்றைக்கு ஏழை எளிய மக்கள் பஸ்ஸுக்குக் கொடுக்கி றார்கள் என்றால், ஒரு 100 அல்லது 150 கோடி ரூபாய் தான் போக்குவரத்துக் கழகங்களுக்கு வரும். மீதி 150 கோடி ரூபாய் பஸ் முதலாளிகளுக்குப் போகிற வகையிலே பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அதே போல், மின்வாரியத்திலே மின் இணைப்புக்கு முடிவு எடுக்கிறீர்கள். 25 ஆயிரம் ரூபாய் பணம் கொடுக்கக் கூடிய வகையில் அல்லது அந்த எக்ஸ்டன்ஷனுக்கு லைன் இழுப்பதற்கு

எவ்வளவு செலவாகுமோ அந்தச் செலவைக் கொடுக்கக்கூடிய வகையில், ஆகிய இதில் எது அதிகமோ அதைக் கொடுக்கக் கூடியவர்களுக்குத் தான் மின் இணைப்பு என்றால், அதனால் பணக்காரர்கள் தானே பலன் அடைவார்கள். ஒரு ஏக்கரா, 2 ஏக்கரா நிலம் வைத்திருக்கக் கூடிய சிறு விவசாயிகளுக்கு அதனால் என்ன பலன் கிடைக்கும்?

அதே போல், வாகனங்களுக்கு வரி விலக்கு கொடுக்கிற போது டி. வி. எஸ். 50 அதை நான் வாங்குகிறேன் என்றால் அதற்கு வரியே கட்ட வேண்டியதில்லை. அதையே வேறு கம்பெனியிலே, வேறு கெபாசிடியில் வாங்குகிறேன் என்றால், அந்த இழப்புக்கும் சேர்த்து அதற்குப் பணம் கட்ட வேண்டும். இதன் மூலம் என்ன ஆகும்? டி. வி. எஸ். நிர்வாகத்திற்குத் தானே நன்மை கிடைக்கும்? டி.வி.எஸ். 50 வாங்கினால் ''டாக்ஸே'' கட்ட வேண்டியதில்லை என்றால் டி.வி. எஸ். 50-யைத்தான் வாங்குவார்கள். அதன் மூலம் $7\frac{1}{2}$ கோடி ரூபாய் இந்த 6 மாதங்களுக்கு என்றால், ஒரு ஆண்டிற்கு 15 கோடி ரூபாய். அதைப் போல பாடி பில்டிங். பாடி பில்டிங்கை எடுத்துக் கொண்டாலும் கூட,—பேருந்துகூடு கட்டுதல் யார் பாடி பில்டிங் பண்ணுகிறார்கள்? டி. வி. எஸ். பண்ணு கிறார்கள் ; எல். டி. பி. பண்ணுகிறார்கள். அவர்களுக்கு 15 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதம் வரை ஏன் குறைக்க வேண்டும்? பணக்காரர்களுக்கு இதிலே சலுகை கிடைக்கிறது என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். இங்கே கூட ''ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்'' திறந்திருக்கிறது. மனமார நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் அதைத் திறப்பதற்கு எந்தகைய முதலீடுகள் போடப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? தரலாம் பணம்; பெரும் முதலாளிகளும், டி.வி. எஸ்.-ம் நன்றாகத் தான் இருக்க வேண்டும்; அவர்கள் டி. வி. எஸ். 50-யை எல்லாம் விற்க வேண்டும்; ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், ஏ. சி. முத்தையா நடத்துகிறார். நாம் பணம் தரலாம். அது எப்போது? நிதி இங்கே இருக்கும் போது. ஆனால், தமிழ்நாடு அரசு தன்னிடத்திலே நிதி இல்லாத போது, அதை எப்படி தருவது? பி.ஐ.எஃப்.ஆர்.-லிருந்து 6 கோடி ரூபாய் ஏ. சி. முத்தையா அவர்கள் போட வேண்டுமென்று சொன்னால், தமிழக அரசு அது ஒரு 3 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. நான் கேட்க விரும்புவது, ''ஃபண்டிங்'' எப்படி நடந்தது? அதாவது, மெர்கண்டைல் கிரடிட் அண்டு ஃபர்ஸ்ட் லீஸிங் கம்பெனி என்பது அவர்கள் கம்பெனி. அதிலே இருந்து 6 கோடி போடுகிறோம் என்று ஒப்புக் கொண்டு ''ஸ்பிக்'' லேயிருந்தும் அதைப் போல தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ்—அதாவது, தமிழ்நாடு அரசும், அவர்களும் சேர்ந்து நடத்துகிற ஜாயிண்ட் செக்டாரிலேயிருந்தும் அந்தப் பணம் எடுத்துப் போடப்பட்ட



தாக அறிகிறேன். அது உண்மையா, இல்லையா என்பதை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இதை எல்லாம் சொல்வதற்குக் காரணம், ''சட்டியிலே இருந்தால் தானே அகப்பையில் வரும்''? சரிதான். ஆனால், அதே நேரத்தில், ஏழைகளிடத்திலே வரி போட்டு, அதன் மூலம் பணக்காரர்களுக்கு சலுகைகளை வழங்குகிற ஒரு நிலை வருமானால், அந்த நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டியது தலையாய கடமை. Tap the rich and pat the poor. என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையை நான் பார்க்கிற போது, You are tapping the poor and patting the rich.

பிற்பகல் 2-20

அவர்களே சொன்னார்கள் ''இந்த டாட்டா-பிர்லா கூட்டாளி, பாட்டாளிக்குப் பகையாளி'' என்றெல்லாம் சொன்னவர்கள் நாம். ஆனால், இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையைப் பார்க்கிற போது, இதிலே வசதி படைத்தவர்களுக்கு சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறீர்கள். வறியவர்களுக்கு வரியை ஏற்றிக் கொண்டே போயிருக்கிறீர்கள். அதனால், நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதை ஏற்க இயலாது என்று கூறி, உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 16—3—1992 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

18. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்கு தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், ஆயவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 25—10—1990 தமநாளிட்ட 966 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

19. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய் வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30—8—1991 ஆம் நாளிட்ட 309 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

20. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய் வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30—8—1991 ஆம் நாளிட்ட 311 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

21. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19—9—1991 ஆம் நாளிட்ட 1246 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

22. 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1?1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.